# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
**Pandit M. Duraiswami Aiyangar,**
*Ayurveda Bhushan.*

பத்திராதிபர் :
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 2. Vol. 2. — ஆனந்த௵ மாசி௴—MARCH—1915. — ஸஞ்சிகை 7. No. 7.


## THE CLAIMS OF INDIAN SYSTEMS OF MEDICINE.

## இந்திய வைத்திய முறைகளைப்பற்றி ஒரு முறைப்பாடு. *


BY Dr. SIR BHAL CHANDRA KRISHNA BHATAVADEKAR, *Kt.*, L. M., J. P.


சுதேச ஔஷதங்களை உபயோகிப்பதைப் பற்றிய விஷயமானது இந்தியாவில் அநேக விடங்களில் பொது ஜனங்களால் கவனிக்கப் பட்டுவருகிறது; ஜனங்களுக்கு அதன் சார்பாக வாஞ்சையும் உண்டாய்க்கொண்டிருக்கிறது. இவ்விஷயத்தில் மிகவும் சிரத்தை மேலிட்டவர்கள் அநேகம் பெயருண்டு; மேலும் இதன் ஸம்பந்தமான சாஸ்திராதிகளைக் காப்பாற்றுவதற்கான உபாயங்களையும் பலர் தழுவிவருகின்றனர்.

ஆங்கில வைத்திய சாஸ்திரங் கற்ற வைத்தியர்களிற் பெரும்பான்மையோர் இந்திய ஔஷதங்களைப் பழிப்பதில் நோக்கமுள்ளவராயிருக்கின்றனர்; இதில் பரஸ்பரம் எதிரிடையான அபிப்பிராயமுள்ள இரு கக்ஷியாருக்கும் இடைவிடாமல் தர்க்கம் நடந்துவருகின்றது. இவர்களில் ஒவ்வொரு கக்ஷியாரும் தமது கையை உயர்த்துவதற்கு முயற்சி செய்கின்றனர். சுதேச ஔஷதங்களில் அபிமானமுள்ளவர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையரே; ஆனால் அம்முறையை யறிந்தவர்களைக் கொண்டு அநுபவரீதியாக விஷயங்களைக் கற்பிப்பதற்காக வைத்தியபாடசாலைகளை ஸ்தாபித்து இத்தேசத்திய ஔஷதங்களுக்கு முன்னேற்ற முண்டுபண்ண அவர்களுக்கு ஸாத்தியமானவரையில் பிரயத்தனப்படுகின்றனர்.

பம்பாய் மாகாணத்தில் மிகப் பிரமுகர்களான சில கனவான்களுடைய—அதாவது காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் ரானடே முதலியவர்களுடைய பெரு முயற்சியின் மூலமாய் வைத்தியராஜ பிரபுராம் ஜீவனராம் என்னும் காலஞ்சென்ற வைத்தியரால் ஒரு வைத்தியபாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பம்பாய்ப் பட்டணத்திலிருக்கும் சில ஆயுர்வேத வைத்தியர்களாலும், ஆங்கில வைத்தியர்களாலும் இப்பாடசாலையின் காரியங்கள் நடத்தப்பட்டு வருகின்றன; ஸர் லாரென்ஸ் ஜென்கின்ஸ், காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் பட்ருட்டின் தியாப்ஜீ, ஸர் நாராயண கணேச சந்திரவர்க்கர், ஸர் ராமகிருஷ்ண கோபால பண்டார்கர் முதலிய இன்னும் அநேக முக்கிய கனவான்களால் இவ்வைத்திய பாடசாலை ஆதரிக்கப்பட்டும் வந்தது; இதில் படித்துத் தேறிய மாணாக்கருக்கு மேற்கூறிய கனவான்கள் அநேக ஸமயங்களில் அதிகாரப்பத்திரம் அல்லது

* காமன்வீல் என்னும் ஆங்கிலப்பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

யோக்யதா பத்திரங்களை (diplomas) அளிப்பதற்கு அக்கிராஸனுதிபதிகளாக வீற்றிருந்திருக்கின்றனர். இப்பாடசாலையில் ஆயுர்வேத வைத்திய ஸம்பந்தமான விஷயங்கள் மட்டுமல்ல, ஐரோப்பிய வைத்தியமுறையில் அவசியமானவையென்று கருதப்படும் சில விஷயங்களும் தேசபாஷையைக்கொண்டு கற்பிக்கப்படவேண்டுமென்று நியமம் ஏற்படுத்தப்பட்டு அவ்விதமே காரியம் நடந்து வருகிறது. இவ்வேற்பாடு இந்த ஸ்தாபனத்தில் மட்டுமேயல்லாமல், இதைப்போன்ற வேறு சில ஸ்தாபனங்களிலும் அனுஸரிக்கப்பட்டு, வெகு உபயோககரமாகவும் வேலை செய்யப்பட்டு வந்தது; சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு பரோடாநகரில் இவ்விதமாகவே ஒரு வைத்தியபாடசாலையேற்பட்டிருந்தது; ஆனல் அப்பாடசாலையினல் நற்பயன்விளையவேண்டியிருக்க அதற்கு முன்பே துரத்ருஷ்டவசத்தால் கலாசாலையின் அதிகாரிகள் அவ்வித்தியாசாலைக்கு விரோதமான கொள்கையுடையவராயிருந்ததால், அது எடுபட்டுப்போயிற்று.

பம்பாயிலுள்ள ஆயுர்வேதபாடசாலையானது மிகவும் நன்றாக வேலைசெய்துவருவதுடன், இவ்விதமே இனியும் நீடித்துச் செய்துவரக்கூடும்; ஆனல் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படும் சட்டம் இதைச் சிறிது பாதிக்கக்கூடுமென்று கருதப்படுகிறது. இவ்வித ஸ்தாபனத்தை அச்சட்டம் ஒருவாறு நடுக்கப்பண்ணலாம்; ஆயினும் இதனிடமிருந்து அவ்வாயுர்வேத பாடசாலையானது தப்பிப்பிழைக்கலாமென்றும், இதற்குமுன் செய்து வந்தது போலவே இனியும் அது மிக உபயோககரமான தனது வேலையைச் செய்து வருமென்றும் நான் எதிர்பார்க்கிறேன். வைத்தியப்பதிவு சட்டமானது இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்குக் கெடுதி விளைவிக்கக்கூடியமாதிரியில் அமைந்திருப்பதாகத் தோற்றுகிறதாயினும், இவ்வித ஸ்தாபனத்திற்காவது, சுதேச வைத்தியர்களுக்காவது, ஹகீம்களுக்காவது தீங்கு விளைவிக்கக்கூடிய முயற்சிகளை இராஜாங்கத்தார் கைப்பற்றுமலிருப்பரென்று நம்புகிறேன். இச்சட்டம், ஆங்கில வைத்தியம் செய்பவர் தமது பெயர் முதலியவற்றைப் பதிவு செய்துகொண்டு, அவர்கள் வைத்தியம் செய்வது சட்டப்படி சரியென்று தீர்த்தாரணம் செய்வதற்காகவே ஏற்படுவதாயிருக்க வேண்டும்; அவ்விதமாகத்தான் இருக்கும். வைத்தியர்களும் ஹகீம்களும் தொழில்நடத்துவதற்கு இது எவ்வகையிலும் தடையுண்டு பண்ணுமலுமிருந்தால் அது விரும்பத்தக்கதாகும்.

சென்னப்பட்டணத்திலும் ஸர் எஸ். சுப்பிரம்மணியஐயர் அவர்களுடைய ஆதரணையின் கீழ், மிகப்பிரஸித்திபெற்ற ஆயுர்வேத வைத்தியரான வைத்தியரத்ன பண்டித டி. கோபாலாசாரியர் அவர்களால் பம்பாயிலிருப்பது போலவே ஓர் ஆயுர்வேத கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் வெகு சிறப்பாக வேலை செய்து வருகிறதென்றும், என்னைப்போல் அந்த ஸ்தாபனத்தின் அபிவிருத்தியில் அபிமானமுள்ளவர்கள் அரிதென்றும் நான் எண்ணவேண்டியிருக்கின்றது. அவ்விடத்திலும் பம்பாயில் ஏற்பட்டிருப்பதுபோலவே வைத்தியபதிவு விஷயமாய் ஒரு சட்டம் ஏற்பட்டு அமுலுக்கு வந்து கொண்டிருக்கிறது. கல்கத்தாவிலும் அவ்வாறே பிறகு இவ்விஷயமாக மஸோதா கொண்டு வரப்பட்டு அதுவும் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. கல்கத்தாவில் ஆயுர்வேத வைத்தியர்களும் யூனனிவைத்தியர்களும் பம்பாய், சென்னை மாகாணங்களிலிருப்பதைவிட கணக்கில் அதிகமாயிருப்பதுமல்லாமல், அங்கு அவ்வைத்தியர்கள் மிகவும் இலபகரமாய் கௌரவத்துடன் அவர்களுடைய தொழிலையும் நடத்தி வருகின்றனர்.

இம்மூன்று மாகாணங்களிலும் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பாகவே ஐரோப்பிய வைத்தியமுறையைக் கற்பிக்கும் கலாசாலை

கள் ஏற்பட்டுவிட்டதால், அது முதலாகவே, சுதேச வைத்தியர்களுக்கு இராஜாங்கத்தாருடைய ஆதரவு சிறிதும் கிடைக்காமல் அவர்கள் கைவிடப்பட்டிருந்தும், பெரும்பான்மையான இத்தேசத்திய ஜனங்களுக்கு சுதேச வைத்திய முறையை இராஜாங்கத்தார் ஆதரிக்காமலிருப்பதிலுண்டான மனக்குறையையும், அம்முறையை விருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்பதிலுள்ள உத்ஸாஹ விசேஷத்தையும், அவ்வைத்தியர்களிடம் சென்று சிகித்ஸைசெய்து கொள்வதிலுள்ள விச்வாஸத்தையும் உற்று நோக்கினோமானால், சுதேச வைத்தியத்திற்கு ஏதோ மஹிமையிருக்கின்றதென்று நன்றாக நம்பவேண்டியிருக்கிறது. இதற்கு முன்தலைமுறைகளிலிருந்த வைத்தியர்களும் ஹகீம்களும் அறிவில் சிறப்புற்றிருந்தனரென்றும், அவர்களுடைய காலத்திற்குப் பின் அவ்வறிவும் அனுபவமும் மற்றவருக்கு உண்டாக வழியில்லாமல் அவ்வைத்திய முறைகள் கிரமமாக மழுக்கங்கொண்டனவென்றும் நிச்சயமாகக் கூறலாம். துரத்ருஷ்டவசத்தினால் சுதேச வைத்தியம் இந்நிலைமையையடைய நேரிட்டது.

ஆகையால், வியாதி நிவாரணம் செய்வதில் சுதேசவைத்தியமுறை மிகவும் சிறப்புற்றதென்றறிந்து, அவ்வித சிகித்ஸாக்கிரமத்தைக் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவருவதில் சிரத்தையுள்ளவர்கள், பயன்பெறக்கூடிய உபாயங்களைக் கைப்பற்றி அவ்வைத்தியமுறையை நிலைநிறுத்த முயலவேண்டும். ஸம்ஸ்கிருதத்திலும் தேசபாஷைகளிலும் இவ்வைத்திய ஸம்பந்தமான நூல்கள் வேண்டிய வளவு இருப்பதால், அவற்றைப் பரிசோதித்து அழியவிடாமல் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வரவேண்டும். இவ்விஷயமாக ஏதாவது உதவி செய்ய கவர்ன்மெண்டார் முன்வராமற்போனால், தேசக்ஷேமத்தில் விருப்பமுள்ள ப்ரமுகர்கள் இதை மிகப் பிரதானமான சாஸ்திரமென்று நிச்சயித்து, அச்சாஸ்திரங்கள் அழியாமலிருப்பதற்கும், ஆங்காங்கு ஆயுர்வேத பாடசாலைகளையும் கலாசாலைகளையும் ஸ்தாபித்து நமது சிறுவர்களை அந்த ஸ்தாபனங்களில் படிப்பிக்கச் செய்வதற்கும், அப்பால் அவர்கள் மூலமாய் சுதேச வைத்தியமுறைப்படி சிகித்ஸை செய்ய வைத்தியசாலைகளை ஸ்தாபிப்பதற்கும், புதிதாக வைத்யக்கிரந்தங்களை எழுத ஏற்பாடு செய்து இம்முறையை இன்னும் மேன்மைபடுத்துவதற்கும் அவசியமான முயற்சிகளைச் செய்ய எவ்விதத்திலும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

சஸ்திர சிகித்ஸையிலும் காயசிகித்ஸையிலும் முறையே மிகப் பிரதானமான நூல்களென்றுகருதப்படும் ஸுச்ருத ஸம்ஹிதையும் சரகஸம்ஹிதையும் வெகு காலத்திற்குமுன்பே லாடின் பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டதென்பதும், அக்காலத்தில் இந்தியாவில் எந்த தேசபாஷையிலும் அக்கிரந்தங்கள் மொழி பெயர்க்கப்படாமலிருந்தனவென்பதும் வெகு வியப்புறக்கூடிய விஷயமாகும். சஸ்திர சிகித்ஸையையும் காயசிகித்ஸையையும் கூறுபவையான வேறு அநேகம் ஆயுர்வேதக் கிரந்தங்களுண்டு; அவை யாவும் வைத்தியர்களால் அவசியம் கருத்துடன் படிக்கக்கூடியவையாம். ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத ஸம்பந்தமான புஸ்தகங்களில் பலவற்றில் நாம் மனதைச் செலுத்திப் படித்து வருவோமாயின், அவற்றில் அநேக பாகங்கள் மிக உபயோகமானவையென்று நன்குணருவோம். ஐரோப்பிய வைத்திய ஸம்பந்தமான அறிவு எங்கும் பரவிவருவதன் காரணமாக, அவ்வைத்தியம் கற்றவர்களில் பெரும்பாலோருக்கு இத்தேசத்திய வைத்தியமுறையில் அபிமானமில்லாமற் போய்விட்டதால், இப்படிப்பை அபிவ்ருத்தி செய்யவும் அவர்கள் விரும்பாதவர்களாக ஆய்விட்டனரென்பதை நான் மிகவும் வெறுக்க வேண்டியவனாயிருக்கிறேன். பண்டைக்காலத்திய வைத்திய நூல்கள் இத்தகையனவென்று நன்றாகப் படித்

தறியாத ஆங்கில வைத்தியம் கற்றவர்களில் சிலர், இவ்விஷயமாக ஏதேனும் சர்ச்சை செய்வதிலும் வெறுப்புடையவராயிருக்கின்றனரென்று எனக்குத் தெரியும். அவர்கள் விஷயங்களைக் கவனித்துப் பார்க்காமலே அவ்வாறு அபிப்பிராயப்படுவதைப் பார்த்து மிக விஸனிக்க வேண்டியிருக்கிறது. ஆங்கில வைத்தியர்களில் இத்தேச வைத்தியமுறையின் உபயோகத்தில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர் வெகு சொற்பம்; ஆனால் அச்சொற்பப்பேர்களும் இத்தேச வைத்தியமுறையை நன்றாகப் படிக்காததால் அம்முறைப்படி வைத்தியம் செய்ய வல்லமையற்றவராயிருக்கின்றனர்.

இவ்விஷயத்தில் அபிமானமுள்ள அவ்வித ஆங்கில வைத்தியர்களிடம் நான் விசேஷமாக முறையிட்டுக் கொள்வதென்னவெனில்—அவ்வைத்திய ஸம்பந்தமான மிகப் பிரதான நூல்களில் சிலவற்றை அவர்கள் முதலிற் படித்து வரவேண்டும்; அவற்றில் ஒருமுறை தமது புத்தியைச் செலுத்தியபின்பு, கிரமமாக அவ்விஷயங்களில் தமக்கிருந்த ஸந்தேஹங்கள் நீங்கி நிஸ்ஸம்சயமான அறிவு பிறக்கும்; அன்றியும் அவர்களுடைய மனது அந்நூல்களிலுள்ள இன்னும் அநேக விஷயங்களில் இழுக்கப்பட்டு அவற்றிலிருந்து அளவற்ற அரியவிஷயங்களைப் பெயர்த்தெடுக்க அவர்கள் வல்லவராவரென்பதும் உண்மை. நான் பல நாட்களாகப் படித்து வந்ததில் அவ்வித இரத்தினங்கள் பலவற்றை இவ்வைத்திய நூல்களிலிருந்து வெகு ஆவலுடன் கண்டெடுக்க நேரிட்டது. அவ்வித இரத்தினங்களுக்காக நான் ஆயுர்வேத வைத்திய நூல்களையெல்லாம் பலமுறை பரிசீலனை செய்தேன்; அப்பால் அந்நூல்களாகும் நிதிகளிலிருந்து அவற்றைப் பெயர்த்தெடுத்து அவற்றை ஒருவாறு நிர்மலமாக்கமுயன்றேன்; அதன் பிறகு அவற்றின் இயற்கையான ஒளியை அவை என் முன்னிலையில் வீசத் தொடங்கின. விஷயமுணராத சிலருடைய அறியாமையினாலும், தப்பெண்ணங்களாலும், பொறுமையினாலும் இந்தியாவானது அவ்விதமான அநேகம் இரத்தினங்களை இழந்துவிட்டது.

ஆகையால், இந்தியாவுக்கு உண்மைப் புதல்வராயிருப்பவர், சுதேசவைத்தியமுறையை உடனே புதுப்பிக்க முடியாவிட்டாலும், அது ஸம்பந்தமான அரிய ஔஷதமுறைகளும் கிரந்தங்களும் அற்றுப்போய் விடாமல் அவற்றைக் காப்பாற்ற எவ்வகையிலும் கடமைப் பட்டிருக்கிறார்கள்; இக்காரியம் அவர்களுடைய சிரேஷ்டமான தர்மகாரியங்களுள் மிக முக்கியமானது. இவ்விஷயத்தில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் ஹகீம்களுக்கும் ஒற்றுமையையுண்டுபண்ணி, மற்ற ஜனங்களும் அவர்களுடன் ஒற்றுமைக்க வேண்டியது அவசியம். மிக்க அனுபவம் பெற்ற வைத்தியர்களும் ஹகீம்களும் வயது முதிர்ந்து காலகதியடைய, அவர்களுக்குப் பின் இப்பொழுதுள்ள வைத்தியர்களில் பெரும்பாலோர் அத்தொழிலை விருத்திசெய்ய விசேஷ பரிசயம் பெற்றவர்களாயில்லையென்று கவலையுடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது. வியாதிகளை ஸ்வஸ்த்தம் செய்வதில் வெகு சிறந்தவையென்று எனது அனுபவத்தில்வந்த அநேக ஆயுர்வேத ஔஷதங்களையும், அவற்றைப் பக்குவம் செய்யும் வகை முதலியவற்றையும் இவ்வியாஸத்தில் விவரித்துக் கூற நான் கருதவில்லை, அவசியம் நேரிட்டால் மற்றொரு ஸமயம் அவ்விஷயங்களை நான் விவரிப்பேன்; சுதேச ஔஷதங்களையுபயோகிப்பதில் அபிமானமுள்ளவருடைய மனதில் ஓர் உத்ஸாஹத்தை உண்டாக்கி, அவர்களை அக்காரியத்தைச் செய்வதற்குத் தூண்டவேண்டுமென்பதே எனது முதற் கருத்து. இவ்விதம் சில வரிகளை நான் எழுதியதை வைத்தியர்களும் மற்றவர்களும் கருத்துடன் கவனித்துப் பார்த்து அவரவர்களாலான மட்டிலும் சுதேசவைத்தியமுறையை முன்னுக்குக் கொண்டுவர முயன்றார்களேயாகில், நான் எழுதியது வீணாகவில்லையென்று நினைத்து மிகக் களிப்புறுவேன்.

## ADVICE TO PARENTS WITH REGARD TO WHOOPING COUGH.

### குழந்தைகளின் தாய் தந்தையர்களுக்குக் கக்கிருமலைப் பற்றிய உபதேசம்.

By M. S. AIYANGAR,
*Ayurvedic Physician.*

கலாநிதியைப் படிப்பவரின் நன்மையைக் கோரி இவ்விஷயம் 'நேஷனல் ஹெல்த்' என்னும் பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. ஆகவே இதனடியில் வரும் விஷயங்களைக் குழந்தைகளின் பெற்றோர்கள் கருத்துடன் கவனிப்பாராக :

கக்கிருமலை ஓர் அஸாதாரணமான வியாதியாகக் கருதவேண்டும். கக்கிருமலால் பாதிக்கப்படும் ஒவ்வொரு குழந்தையின் விஷயத்திலும் ஸாத்தியமான வரையில் வெகு விசேஷமாக கவனம் செலுத்தி அவற்றைப் பாதுகாப்பதில் தாய்தந்தையர்கள் கண்ணுங்கருத்துமாயிருப்பது அவசியம். நன்றாக ஆராய்ச்சி செய்தோமானால் விஸர்ப்ப ஸம்பந்தமான ஸந்நிபாத ஜ்வரத்தினால் (scarlet fever) எவ்வளவு மரணங்கள் ஸம்பவிக்கின்றனவோ அதற்கு மூன்று மடங்கு அதிகமாகவும், குரல்வளையிலுண்டாகும் களசுண்டி யென்னும் (diphtheria) துத்தி ரோகத்தினாலுண்டாகும் மரணங்களைவிட இருமடங்கு அதிகமாகவும் கக்கிருமலால் ஸம்பவிக்கும் மரணவிகிதம் கணக்கிடப்படுகிறதென்பதை நீங்கள் மறக்கக்கூடாது. ஆகையால் அடியில் கூறப்படும் ஒரு சிறு நிரூபத்தில் குறிக்கப்படும் விஷயங்களைக் கவனித்து அவ்விதம் நடக்கும் படியாக நீங்கள் தூண்டப்படுகிறீர்கள்.

1. இவ்வியாதி பரவுவதைத் தடுக்குமுபாயம் என்னவெனில்.—

ஒரு குழந்தை கக்கிருமலுக்கு உட்படுவதும், அதனால் அது சிறிது காலம் வருந்துவதும் இயற்கையல்ல வென்றும், அவ்விதம் கஷ்டப்படுவதற்கு அது கடமைப்பட்டிருக்கவில்லை யென்றும் நீங்கள் நிச்சயிக்கவேண்டும். ஆகிலும் ஒருக்கால் குழந்தைக்கு அது உண்டானாலும், வீட்டிலுள்ள பெரியோர்கள் குழந்தை அவ்வியாதியிலிருந்து சீக்கிரம் ஸ்வஸ்த்தமாகிறவழியைத் தேடுவது நலம். அதைவிட வியாதி வராமல் தடுப்பதற்கு முயற்சி செய்வதே உத்தமமாம். முயற்சியுடையோர்க்கு எவ்விஷயமும் அஸாத்தியமாகாதென்பதை நினைவில் வைத்துக் கொண்டிருப்பவர், கக்குவானைப் போன்ற வியாதியைத் தடுப்பது முடியாத காரியமென்று கருதமாட்டார். குழந்தைகளை—முக்கியமாய் இளங்குழந்தைகளை—இவ்வியாதியினிடமிருந்து தப்பவைப்பதால், அவற்றின் தேஹம் இதர வியாதிகளுக்கும் வசப்படாமல் நன்கு செழித்து வளரக் கூடும். கக்கிருமலுள்ளதென்று ஸந்தேஹப்படக்கூடிய எக்குழந்தையையும் உடனே மற்றக் குழந்தைகளுடன் சேரவிடாமல் ஒதுக்கி வைக்கவேண்டும். ஆரம்பம் முதற்கொண்டே அல்லது நெஞ்சில் இழுப்புண்டாவதற்கு முன்பே-இவ்வியாதி தொற்றுங்குண முடையதாயிருப்பதால் அவ்வாறு செய்யவேண்டியிருக்கிறது. இந்த ரோகம் இயற்கையாகவே ஜலதோஷக்குறிகளுடன் ஆரம்பிக்கும்; அந்த ஸமயத்தில் கபமில்லாமல் ஒருவிதமான ஸாதாரண இருமலும் ஜ்வரக்குறியும் சிறிது தொடர்ந்து காணும். இக்குறிகள் ஒரு வாரம் அல்லது சிறிது அதிக நாள்வரையில் அநுஸரித்திருக்கும்; பிறகுதான் வாஸ்தவமான இருமல் உண்டாகும். அப்பால் குழந்தை அடிக்கடியும் வெகு தீவ்ரமாக இருமிக்கொண்டு மூச்சுத் திணறுவதுபோல் இழுப்புடன் அவஸ்த்தைப்படவேண்டி நேரிடுகிறது; இவ்வவஸ்த்தை இரவில் மிக அதிகமாகும். இதனால் குழந்தையின் முகம் ஸாதாரணமாய் ஒருவாறு நீல நிறங்கொண்டு—ஆனால் எப்பொழுதும் இக்குறியுண்டாகு மென்பதற்கில்லை—நெஞ்சில் இழுப்பு அதிகரித்து, ஒரு முறை இருமியபிறகு கபம் கக்கப்படும்; அல்லது வாந்தியாவது ஆகும். ஒரு முறை இருமலும் இழுப்பும் உண்டானபிறகு மற்றொரு முறை

வருவதற்குமுன் இடையில் குழந்தை வருத்தமி ன்றி நன்றாகவே விளையாடிக்கொண்டிருக்கும். ஒரு குழந்தை தீவ்ரமாக இழுப்புடன் இருமிக்கொண்டிருக்கும்போது, முக்கியமாய் இரவில் அதிகமாயிருந்தால் அது கக்கிருமலால் வருந்துகிறதென்று ஒருவாறு நிச்சயிக்கலாம்; இவ்விஷயத்தில் ஒரு தகுந்த வைத்தியருடைய அபிப்பிராயத்தைக் கேட்டு உண்மை யின்னதென்று தெரிந்துகொள்வது நலம். கக்கிருமலுள்ள குழந்தையை ஸாத்தியமானல் ஒரு பிரத்தியேகமான அறையில் இருக்கச் செய்வதுடன், மற்றக் குழந்தைகளிடம் அணுகவிடாமல் கூடுமான தூரத்தில் விட்டிருக்க வேண்டும். இருமியோ வாந்திபண்ணியோ வெளியான கபம் முதலானவற்றை எரித்துவிடவேண்டும், அல்லது தோஷஹரங்களான ஔஷதச் சரக்குகளைச் சேர்த்து சுத்திசெய்து நன்றாகக் கழுவித் தள்ளவேண்டும். இவ்வியாதியினல் வருந்தும் குழந்தைகளுக்கென்று எல்லா ஸாமான்களையும்—அதாவது கோப்பைகள், பாலவடைகள், உண்ணுங்கலங்கள், துணிகள் முதலியவற்றை—பிரத்தியேகமாக ஓரிடத்தில் வைத்துக்கொண்டு, அவற்றை அப்போதைக்கப்போது நன்றாகச் சுத்தம் செய்துவர வேண்டும். படுக்கைகளையும் உடுக்கும் துணி முதலானவற்றையும் கழுவுவதற்குமுன், ஒரு மணிநேரமாவது கிருமிஹரமான அல்லது தோஷஹரமான (disinfectant) வஸ்துக்கள் கலந்த ஜலத்தில் அவற்றை ஊறவைக்க வேண்டும் குழந்தைக்குத் தீவ்ரமான இருமலும் இழுப்பும் நிவ்ருத்தியாகும் வரையில் மற்றக் குழந்தைகளிடம் அது சேரவேகூடாது. வியாதி சிலஸமயம் சில குழந்தைகளுக்கு நீடித்திருக்குமானல், அப்பொழுது குழந்தையைத் தடுத்து வைத்திருப்பது கஷ்டமாயிருக்கு மென்பது உண்மை; ஆகிலும் கூடுமானவரையில் அவசியமான முன்னெச்சரிக்கைகளை செய்வது தாய் தந்தைகளுடையவும் வைத்தியர்களுடையவும் கடமையாகும். பொதுவில் கவனித்துப் பார்த்தோமானல் இவ்வியாதி ஆறு வாரங்களுக்கு அதிகமாக நீடிப்பதில்லையானதால், அதுவரையில் பிணிகொண்ட குழந்தையை எக்கூட்டத்திலும் சேர்க்காமல் ஜாக்கிரதையாய் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

2. பிணிகொண்ட குழந்தைகளை ஸ்வஸ்த்தம் செய்யுமுபாயம்.—

எப்பொழுதும் ஒரு கைதேர்ந்த வைத்தியனை அழைத்துக் காட்டவேண்டும். முதலில் ரோகியை ஒரு படுக்கையில் ஸௌகரியமாய் விட்டிருக்கவேண்டும்; படுத்திருக்கும் அறையில் நன்கு சுத்தமானவாயு வீசும்படியாகவும், வேண்டிய வெளிச்சம் பரவும்படியாகவும் ஏற்பாடு செய்திருப்பது அவசியம். அவ்வறை ஈரமாயில்லாமல் நன்றாக உலர்ந்து நிர்மலமாயிருக்கவேண்டும். ஜ்வரக்குறிகள் சாந்தமானபிறகு, காலம் அநுகூலமாகத் தோற்றுமானல் குழந்தையை வீட்டிற்கு வெளியில் நல்ல காற்று வீசுமிடத்திற்குக் கொண்டு போகலாம். உடம்பில் கம்பளியாலான மெல்லிய உடைகளைப் போர்த்து, குழந்தையின் உடம்பு எப்பொழுதும் தகுந்த உஷ்ணமுள்ளதாயிருக்கும்படிச் செய்யவேண்டும்; முக்கியமாகக் குளிர்காலத்தில் குழந்தையின் கைகால்களையும் மற்ற உடம்புகளையும் தகுந்த உடைகளால் போர்த்து சரீரத்தின் சூடு எப்பொழுதும் குறைந்துவிடாமலிருக்குமாறு கவனிக்க வேண்டும். குழந்தையின் உடம்பில் சிறிதும் ஈரம் தங்கியிருக்கக் கூடாது. கக்கிருமலுடன் வருந்தும் குழந்தைகளுடைய நுரையீரல்கள் வீக்கங்கொள்வது ஸஹஜம்; குளிர்ந்த வாயுவில் குழந்தைகளுடைய உடம்பு திறக்கப்பட்டிருந்தால், அவ்வவயவங்கள் நிச்சயமாய் வீங்கிவிடும்.

கக்கிருமலானது குழந்தையின் ஆரோக்கிய நிலைமையைக் கெடுத்து அவர்களை வெகு பலஹீனப்படுத்திவிடுமாகையால், இவ்வியாதி நிவ்ருத்தியான பின்னர் குழந்தைகளின் சரீர போஷணையில் மிகவும் அதிகமாகவே கவனம் செலுத்தவேண்டு மென்பதை நீங்கள் மறவாதீர்கள். குழந்தையின் ஆரோக்கிய நிலைமை

திருப்திகரமாயிருப்பதாகத் தோற்றுவிட்டால் மறுபடியும் தகுந்தவைத்தியனிடம் சென்று விஷயங்களை விசாரித்து குழந்தையின் சரீரத்தைப்போஷிக்க உபாயம் தேடவேண்டும். கக்கிருமலை அலக்ஷியம் செய்து, அதற்குச் செய்யவேண்டிய பரிஹாரமுறைகளை யுக்தப்படி நிறைவேற்றுவிட்டால், அவ்வியாதியே காலவளவில் க்ஷயஸம்பந்தமான இருமலாகவும் வேறு வியாதிகளாகவும் பரிணமிக்கத் தொடங்கும்.

---

## THE DIET AND HEALTH.

### ஆஹாரமும் ஆரோக்கியமும்.

BY C. PARAMANANDA DAS NAVAVATY,
*Ex. District Veterinary Officer, Junagad State.*

எல்லாப் பிராணிகளுடையவும் ஜீவசக்தியென்ன, அவை நீண்டகாலம் உயிர் பிழைத்திருப்பதென்ன, அவற்றின் சாரீர—மானஸிக வியாபாரங்களென்ன இவை யாவும் அவற்றின் உணவுகளையும் அவற்றாலுண்டாகும் தேஹ போஷணையையும் பொருந்தியவைகளாயிருக்கின்றன என்பதில் எந்த மனிதன்தான் ஸந்தேஹப்படுவான்? நமக்கு ஏதேனும் ரோகமுண்டாகும்பொழுது ஸாதாரணமாய் ஸம்பவிக்கும் அரோசகத்தினால் நாம் உணவை யேற்றுக் கொள்ள முடியாதவராய் விடுவதாலும், அப்பொழுது அதன் பலனாக நமது தேஹம் பல ஹீனப்படுவதாலும், பிறகு வியாதியினின்றும் நீங்கி ஸ்வஸ்த்தமாய் வரும் தருணத்திலேயே உணவின் இன்றியமையாத உபயோகத்தைநாம் உண்மையாய் அறிந்து அதைக் கொண்டாடக் கூடியவர்களாயிருக்கிறோம். உணவின் அருமை அவ்வாறிருக்க மனிதர்கள் இப்பொழுது தமக்கு ஏற்ற ஆஹாரம் இன்னதென்று இன்னும் நன்குணராமல் தோன்றியவாறு எதையெதையோ புசித்துவருகின்றனர். சிங்கம், புலி, ஓநாய் முதலிய விலங்குகள் கூர்மையாய் நீண்டு வளர்ந்த பற்களையும் நகங்களையும் உடையவைகளாயிருப்பதால், அவை இறைச்சியைத் தின்றுப் பிழைக்கவேண்டியவையென்று ஈச்வரன் அவற்றின் உறுப்புகளை அவ்வாறு படைத்தானென்று சொல்லலாம்; அந்தந்த ஜந்துக்களுக்கு அனுகூலமான உணவு வகைகளுக்கேற்றவாறே அவற்றின் உறுப்புகளும் உண்டாக்கப்படுகின்றனவென்பதற்கு இதுபோன்ற உதாஹரணங்கள் அநேகமுண்டு. பசு, எருது, எருமை முதலான மிருகங்கள் புற்களையும் வைக்கோலையும் அவைபோன்ற வேறு சாக வகைகளையுமே தின்பவையானதால், அவ்வித உணவுகளை ஜீர்ணம் செய்வதற்கு அனுகூலமாக அவற்றிற்கு நான்கு இரைப்பைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் மனிதனுக்கு அநேகம் அருஞ்சுவைகளில் விருப்பத்தை யுண்டுபண்ணியிருப்பதுடன், தனக்குத்தானே வெவ்வேறு வகையான பதார்த்தங்களைக் கூட்டி, பலவிதமான உணவு வகைகளைப் பக்குவம் செய்துகொள்வதற்கேற்ற பகுத்தறிவையும் அவனுக்கு ஏற்படுத்தியிருக்கிறார். சில மனிதர்கள் சாகாஹாரத்தினாலேயே ஜீவித்து வருகிறார்கள். சிலர் ஒரு பகுதி சாகாஹாரத்தையும் மற்றொரு பகுதி மாம்ஸாஹாரத்தையும் உபயோகித்து ஜீவிக்கின்றனர். இவ்விரண்டு விதமான உணவு வகைகளில் எது மனிதனுக்கேற்ற சிறந்த உணவாகுமென்பதையே நான் இப்பொழுது விசாரம் செய்து ஒரு தீர்மானத்திற்கு வர விரும்புகிறேன்.

கேவலம் சாகபக்ஷணமானது மனிதருக்கு நல்ல தேஹவலிமையையும் மனோபலத்தையும் கொடுத்து அவர்களுடைய தாதுக்களைப் போஷிக்கவல்லதாயிருக்க, மாம்ஸாஹாரம் சரீர நிலைமையைச் சீரழியச் செய்கிறதென்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இறைச்சியுண்பதனால் தேஹம் க்ரூரமான சில வியாதிகளுக்கு உட்பட்டு அது மிகவும் வருந்த நேரிடுமென்று நிச்சயிப்பதற்கு இதற்குப் பிறகு நாம் கூறப்போகும் பல திருஷ்டாந்தங்களைக் கொண்டு நன்கறியலாம்; நிஸ்ஸம்சயமாக நிரூபிக்கப்போகிற சில நிதர்சனங்களை ஆதாரமாகக்கொண்டு, மாம்ஸாஹாரமானது மனித

ருடைய தேஹத்திற்கும் மனதுக்கும் மஹத்தான கோளாறுகளைக் கொடுத்து, நிவ்ருத்திக்க முடியாத அநேகம் வியாதிகளை யுண்டுபண்ணுமென்று அறிந்தபின்னர், ஒவ்வொருவரும் அவ்வாஹாரத்தை வெறுக்கக்கூடுமென்று நாம் நம்புகிறோம். இத்தேசத்தில் மாம்ஸாஹாரம் இவ்வளவு மிதமிஞ்சி வழக்கத்திற்கு வராமலிருந்தவரையில், இப்பொழுது அடிக்கடியும் கேள்வியுறப்படுகிற அநேக நூதனவியாதிகள் முற்காலத்தில் மிகவும் அரிதாயிருந்தன. புலாலுண்ணும் வழக்கம் மேன்மேலும் அதிகரிக்கவே, அக்காரணத்தினால் அநேக தேசங்களில்-முக்கியமாய் முனிவர்களாலும் பூஜிக்கக்கூடியதான நமது இந்திய நாட்டில்— கிருஷித்தொழில் மிகவும் குறைந்துவரத் தொடங்கிற்றென்றும், அதற்கேற்க பால், தயிர், நெய் முதலிய ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத உணவுப் பொருட்களின் விலையும் ஸாதாரண ஜனங்களால் தாங்கமுடியாதபடி மிகவும் ஏற்றமடைந்ததென்றும் நிச்சயமாகக் கூறலாம்.

செல்வவான்கள் அகவிலையுள்ள வஸ்துக்களையும் வேண்டியவளவு பணம் செலவுசெய்து விலைக்கு வாங்கி உபயோகிக்கக் கூடுமானாலும், அவர்களுக்கும் இக்காலத்தில் பால் முதலிய அப்பொருட்கள் மிகவும் சுத்தமாகக் கிடைப்பது அரிது; இதற்குத் திருஷ்டாந்தமாக--பம்பாயில் சென்ற வருஷத்தில் கார்ப்பொரேஷன் அதிகாரிகளின் முயற்சியினால் அநேக பால்காரர்களுடைய கையிலிருந்த 22 பாற்சொம்புகள் பரிசோதிக்கப்பட்டதில் அவற்றுள் ஒன்று மட்டுமே கலப்பில்லாத பாலாகக் காணப்பட்டது.

சுருங்கச் சொல்லில்—தனிகர்கள் தாம் வாங்கும் பாலும் நெய்யும் கலப்பில்லாதவையென்று நினைத்திருந்தார்களானால், அவர்கள் உண்மையில் மோசம்போய் விஷயமறியாமல் அவ்வாறு கருதுகின்றனர் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்; இதை அதிசயோத்தியாக நினைக்க வேண்டாம். இப்படி யாவதற்குக் காரணம், பால் முதலியவற்றை உற்பத்தி செய்பவையான ஆடுமாடுகளை அவற்றின் உடலிலுள்ள மாம்ஸத்திற்காக அழித்து வருவதேயாம்.

முதலாவது நமக்கு உதவியாயிருக்கும் பிராணிகளிடம் நன்றி பாராட்டி அவற்றை ஆதரிக்கவேண்டுமென்பது, ஜீவகாருண்யம் என்னும் விஷயம் இவ்விரண்டும் மனிதருக்கு இன்றியமையாத இயற்கைக் குணங்களாக இருக்கவேண்டியிருக்க, அவற்றிற்கு மாறாக— நமக்குக் கீழ்ப்படிந்து மிகவும் இழிவான வேலைகளையும் மார்பு ஒடிய மிக வருத்தப்பட்டுச் செய்துவரும் அஜாத சத்ருக்களான மாடுமுதலான வாயில்லாப்பிராணிகளை வதைசெய்வது தர்மமா? (1) நமது தேஹத்தைப் போஷிக்கும் அமிருதம்போன்ற மிக்க மதுரமான பாலையும் தயிரையும் வெண்ணெயையும் நமக்கும் நமது சிறு குழந்தைகளுக்கும் அளிப்பவை யாவை? (2) நமது உணவு தானியங்கள் பயிரிடுவதற்கான வயல்களுக்குவேண்டிய ஜலத்தைக் கிணறுகளிலிருந்து இழுப்பவை எவை? (3) நமது வீட்டு வேலைகளுக்குவேண்டிய சாணத்தையும் வறட்டிகளையும் எவை கொடுக்கின்றன? (4) குப்பை வண்டிகளையும், நமது பெட்டிவண்டிகளையும் மற்றும் சுமைவண்டி முதலானவற்றையும் இழுத்துச் செல்லும் பிராணிகள் எவை? (5) நமது நிலங்களை உழுவதற்கு எவை உதவுகின்றன? (6) செக்குகளையும் ஆலைகளையும் சுற்றிச் சுற்றி இழுப்பவை எவை? (7) பயிர்களுக்குவேண்டிய எருவை எவை உண்டுபண்ணுகின்றன? (8) எவற்றின் சர்மங்களைக்கொண்டு நாம் பைகளையும், பெட்டிகளையும், பாதரக்ஷைகளையும் செய்துவருகின்றோம்? (9) எவற்றின் எலும்புகளால் கத்திப்பிடிகளும், அழகான வெவ்வேறு விதமான கைப்பிடிகளும், சீப்புகளும் செய்யப்படுகின்றன? (10) எவற்றின் எலும்புகள் பாஸ்பரம் (phosphorus) என்னும் இரஸாயனப் பொருளுண்டாவதற்கும், சர்க்கரை முதலியதைச் சுத்திசெய்வதற்கும் உபயோகமாயிருக்கின்றன?

இக்கேள்விகளுக்கெல்லாம்—மிகவும் ஸாதுவான மாடுகளையே முற்கூறிய எல்லாக் காரியங்களுக்கும் மனிதர் எதிர்பார்க்கவேண்டியவரா யிருக்கின்றனரென்று ஒரே வார்த்தையில் விடை யளிப்பதைத் தவிர வேறு வகையாகப் பதில் கூறமுடியாது. நமக்கு இவ்வளவு ஸஹாயம் செய்து இலாபத்தை யுண்டாக்குபவையான வாயில்லாப் பிராணிகளை நாம் போஷிக்கவும், அவற்றினிடம் அன்பு பாராட்டி அவற்றைச் சீராட்டவும் கடமைப் பட்டவரா யிருக்க, அதற்கு நேர் விரோதமாக, தமது வயிற்றை நிரப்பும்பொருட்டு-வேறுவிதமான சிறந்த உணவு வகைகளிருந்தும்-அவ்வேழைப் பிராணிகளின் இறைச்சியின் நிமித்தம் மனிதர் அவற்றை அடியோடு வதைசெய்துவிடுகின்றனர்! வீண்போகத்திற்காகப் பசுக்களின் வெகு அருமையான உயிரை உறிஞ்சுவிடுகின்றனரே! என்ன அநியாயம்! இதென்ன நன்றியுணர்வில்லாத் தன்மை! நம்மைப்போலவே அவ்வாயில்லாப் பிராணிகளுக்கும் வலியையும் வேதனையையும் அறிவதற்கேற்க உணர்ச்சி யுண்டல்லவா? அவற்றிற்கும் பிராணனும் புலன்களும் இருக்கின்றனவே! நமது ஒரு சிறு விரலில் ஒரு ஸாதாரணமான காயம்பட்டால் அவ்வேதனை ஸஹிக்க முடியாதென்று எவ்வளவோ உபசாரம் செய்யவேண்டி யிருக்கின்றதே! மிருகங்களுடைய முழு உடலையும் வெட்டி அவற்றைச் சிறு துண்டுகளாக ஆக்கும்போது—ஆ! என்னவலி! ஸஹிக்கமுடியாத என்ன கடும்வேதனை அநுபவிக்க வேண்டுமோ யோசித்துப் பாருங்கள்! அவ்வித மாம்ஸங்களைத் தின்பதால் குணமாவது ஏதேனும் உண்டோ? அதுவுமில்லையே; ஏதேனும் குணமிருந்தபோதிலும் ஜீவகாருண்யமுள்ள மனிதர் இவ்விதம் பிராணி வதைசெய்து இறைச்சி யுண்பது முற்றிலும் சரியல்ல.

பிறகு மனிதருக்கு மாம்ஸாஹாரம் ஏற்றதாவென்பதைப்பற்றிய தத்துவங்களை விசாரிப்போம். மனிதருக்கு ஸமானமான உடலமைப்புகளைப்பெற்ற மற்றப் பிராணிகள் இயற்கையிலுண்ணும் உணவுகளை நன்றாகக் கவனித்தோமானால், அப்பொழுது இவ்விஷயத்தில் உண்மை வெளியாகும். மனிதர் எவ்விதமான உணவுகளை உபயோகிக்க வேண்டுமென்பதை விளக்குவதற்காக, மனிதருக்கும் மற்றப் பிராணிகளுக்கும் உடலமைப்பிலுண்டான ஒற்றுமை முதலியவற்றைப்பற்றி அமெரிக்கா தேசத்திய ஒரு கற்றறிந்த வைத்தியர் அடியில் வருமாறு அபிப்பிராயப்படுகிறார்:

"மனிதருடையவும், அவர்களைப்போன்ற (குரங்கு முதலிய) பிராணிகளுடையவும் சரீர அமைப்புகள்—வெகு ஸூக்ஷ்மமாகப் பார்க்கையில் சில வேற்றுமைகள் உடையனவாயிருந்தாலும்—பொதுவில் அநேக அவயவ விசேஷங்களின் அமைப்பில் ஒற்றுமை காணப்படுகின்றன என்று ஹீக்கெல் என்பவர் கூறியிருப்பது உண்மை. மனிதனுக்கு இருப்பதுபோலவே அப்பிராணிகளுக்கும் அதேவிதமாய் 200 எலும்புகளும் சரீரத்தில் அந்தந்த இடங்களில் இணைக்கப்பட்டிருக்கின்றன; சரீரத்தை அசைத்து வேலைகளைச் செய்வதற்கான தசைநார்களும் அவற்றிற்கும் நமக்கிருப்பதுபோல் 300 தான் உண்டு. மயிர்முளைத்த இதே சர்மந்தான் அப்பிராணிகளுக்கும் உடற் போர்வையாயிருக்கின்றது; இரத்த ஓட்டத்தை யுண்டுபண்ணி நமது நாடிகளைத் துடிக்கச் செய்யும் இருதயம் எவ்வாறு நான்கு அறைகளுள்ளதா யிருக்கின்றதோ, அவ்விதமேதான் அவற்றின் இருதயமும் ஏற்பட்டிருக்கிறது; நமது பற்களைப்போலவே அவற்றிற்கும் இதே வகையில் 32-பற்களே இசைந்திருக்கின்றன; ஜனனேந்த்ரியங்களும் மனிதருக்கிருப்பது போலவேதான் அவற்றிற்கும் ஏற்பட்டிருக்கின்றன; ஜீர்ண கோசங்களிலும் பேதம் ஒன்றும் காணப்படவில்லை."

என்று சிகாகோ யூனிவர்ஸிடியைச் சேர்ந்த ப்ரொபஸர் J. ஹாவார்ட் மூர் என்பவர் எழுதியிருக்கிறார். மேற்கூறிய பிரமாணத்தினால் மனிதசரீரம் மாம்ஸாஹாரத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்லவென்றும், அவ்வாறு இயற்கைக்கு விரோதமாக அதை உபயோகிப்பவர் அதன்மூலமாய் அநேகவியாதிகளை அநுபவிக்கவேண்டி நேரிடுமென்றும் நிச்சயமாக நம்பலாம். (தொடரும்)

## JAUNDICE AND ITS TREATMENT.

### காமாலையும் அதன் சிகித்சையும்.

BY V. S. AIYAN PILLAI, *Vaidyar.*

காமாலை என்னும் ரோகமுண்டாக வேறு காரணங்கள் பல விருந்தாலும், முக்கியமாய்க் குழந்தைகட்குண்டாவது தாய்மார்களின் கெட்ட அப்பியாஸத்தினாலென்றே சொல்லலாம். சில பெண்கள் கர்ப்பந் தரித்தவுடன் மண், சாம்பர், ஓடு, லேசான கற்கள் இவை முதலியவற்றை விசேஷமாகத் தின்கிறார்கள். இவர்களைத் தடைசெய்தாலும் கேளாமல் பிறரறியாதிருக்க மறைந்தேனுந் தின்றே தீர்வார்கள். இந்த ருசியற்ற வஸ்துக்களில் இவர்கட்குண்டாகும் அதிக விருப்பத்திற்குக் காரணம் இவர்கள் வயிற்றிலுதிக்குங் குழந்தைகளின் துரதிர்ஷ்டமே போலும். ஆகவே குழந்தைகளின் அகால மரணத்திற்குத் தாய்மார்களிற் சிலருங் காரணமாகிறார்கள். மண் முதலிய வஸ்துக்களினால் தாய்மார்களின் இரத்தம் கெடும்போது அதனால் வளருங் குழந்தைகள் எவ்விதமாய் ரோகத்திற்குத் தப்ப முடியும்? இப்படிப் பிறந்த குழந்தைகள் தாய்மார்கள் தின்றது போதாதென்று தாமுந்தின்னப் பிரியப்படுகின்றன. இதை அதிகமாய்க் கவனித்து வந்ததில், மற்றக் குழந்தைகளைவிட இந்தத் தாய்களின் வயிற்றிற் பிறந்த குழந்தைகளே அதிகமாய்த் தின்பதாக அனுபவத்தில் அறியப்பட்டிருக்கிறது. இவ்வாறு தாயார்களாலுந் தங்களாலும் உண்ணப்பட்ட கெட்ட வஸ்துக்களால் அன்னாசயம் அழுக்கடைந்து, ஜீர்ணந் தடைப்பட்டு, பித்தங் கதித்து, இரத்தங் கெட்டு மஞ்சணிறமடைந்து போவதால் இந்த ரோகமுண்டாவதாகத் தெரிகிறோம். இதனை மஞ்சட் காமாலை யென்பர். இந்த ரோகம் குழந்தைப் பருவத்தில் அதிகமாகவும் வயது வந்தபிறகு சொற்பமாகவுந் தாக்கி கஷ்டப்படுத்துகிறது. மேற்கண்டவாறு மண் முதலியவற்றைத் தின்றவர்களின் குழந்தைக்ட்கு அடிக்கடி பேதிக்குக் கொடுத்துப் போஷணையாய் வைத்திருந்தால் அதிகமாய் இந்த ரோகத்தினால் பீடிக்கப்படாமல் அவர்களை ஒருவாறு தப்புவிக்கலாம். ஏழைகள் இவற்றைக் கவனித்து இடையிடையே பேதிக்குக் கொடுக்கவும் குழந்தைகளைப் போஷணையாய்ப் போற்றவும் வசதி யில்லாது போவதால், அவர்களின் குழந்தைகள்தான் இந்த வியாதியால் அதிகமாய் மாண்டு விடுகின்றன. இது குழந்தை வயதில் உண்டாவதன்றியும் வாழ்நாளில் எப்போதாவதும் உண்டாகிக் கஷ்டப்படுத்துகிறது. இவ்வாறு இக்காமாலை ரோகங் குழந்தைகட்குண்டாவதன்றியும், வயது வந்தவர்களில் தகரம், பித்தளை, ஈயம், தாமிரமுதலிய உலோகப் புகைபடுந் தேஹிகட்கும், நல்லெண்ணெய், நவஸாரம், தாளகம் இவைகளின் புகைபடுந் தேஹிகளிற் சிலருக்கும், ஸதா உட்கார்ந்தே ஒரு வேலையுமின்றி யிருப்பவர்களிற் சிலருக்கும், பித்தத்தையுண்டாக்கும் வஸ்துக்களையே ப்ரியமாய்ப் புஜிப்பவர்களிற் சிலருக்கும், அளவுக்கு மிஞ்சிய மனோமுயற்சியால் பித்தக் கதிப்புடையவர்களிற் சிலருக்கும் உண்டாவதாகத் தெரிகிறது. இதனைத் தாமதரோகம் தீவிர ரோகமென இருவகையாய்ப் பகுக்கலாம்.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இந்த ரோகம் மெதுவாகவாவது திடீரென்றாவது உண்டாகிறது. மெதுவாக வ்ருத்தியாகி வருகிற ரோகங்களில் அபாயம் அதிகமாயிராது. திடீரென்றுண்டான ரோகம் அதி சீக்கிரமாய் வ்ருத்தியாவதால் எந்த வயதினர்க்கும் இது அஸாத்திய ரோகமாய் முடிகிறது. மெதுவாய் வ்ருத்தியடையும் ரோகத்தையுங் கவனியாது விட்டிருந்தவர்களிற் பலர் தொந்தரைக்குள்ளாகித்தான் தீரவேண்டும். இந்த ரோகத்தால் பிணியாளிக்குக் கஷ்டமதிகமில்லை,

ஆரம்பத்தில் கொஞ்சம் பசிமந்தம், . சொற்பம் கை காலசதி, மூத்திரம் பசுமஞ்சட் சாயல், கண்களும் இதே நிறம்; தேஹசுபாவத்தில் மாறுதலிருப்பதாகத் தனக்காவது பார்க்கும் வைத்தியருக்காவது தெரியாமல் இது ஏமாற்றும் ரோகமாக அநேகரிடம் இருந்து வளருஞ் சுபாவமுடையது. சீக்கிரம் வ்ருத்தியாகும் நிலைமையில் இரவு படுக்கைக்குப் போம் போது தேஹத்தில் எவ்வித மாறுதலுமிராமல் சுகமாயிருக்கும். காலையில் எழுந்தவுடன் பார்த்தால் கால்களின் அடிப்பாகம், கைகளின் உட்பாகம், கண்கள், நகங்கள், நரம்புகள், மூத்திரம் ஆகிய இவை யனைத்தும் பச்சை நிறமாய்க் காணப்படும். பார்ப்பதற்கு ஆச்சரியமாகவும் கவலைக் கிடமாகவுமிருக்கும். சொற்ப தினங்களுக்குள் விளக்கொளியும் சூரிய வொளியும் இவ்வொளிகளிற் காணப்படும் எல்லா வஸ்துக்களும் பசுமையாய்த் தோன்றும். இந்த நிலைமையிலும் பிணியாளிக்குச் சிரமமதிகமிராது. இதில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால்: சில காமாலைகள் நெடுநாள் தேஹத்தில் வளர்ந்து வந்து இறுதியில் மூத்திரம், மலம், கண், பார்க்கும் வஸ்துக்கள் இவைகள் பசுமையாய்க் காணப்படும்; இந்த ரோகம் கஷ்டஸாத்தியமே; மேலே சொன்னபடி திடீரென்றுண்டாகுங் காமாலைகளில் எவ்வளவு தீவிரமாய்க் குறிகள் கதித்துக் கண்டாலும் ஆபத்தில்லை யென்பதே. இது சிகித்ஸைக்கு இசைவுள்ளதா யிருக்கிறது. ஆகையின் இதனை ஸாத்திய ரோகமென்று சொல்லலாம். இந்த ரோகமுடைய 6-வயது பையனொருவனையும்-18-வயது பெண்ணொருத்தியையும் நான் சிகித்ஸை செய்து வந்தபோது இவ்விருவர் தேஹத்திலுஞ் சிரங்குகளிருந்தன. அச்சிரங்குகளிலிருந்து வெளிப்படுஞ் சீழும் பசுமை கலந்ததாயிருக்கப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். ரோக நிதானங்களைப் பற்றி எண்ணிறந்த நூல்கள் இன்னும் புறப்பட்டுக் கொண்டே யிருந்தாலும் வைத்தியர் மனதைப் பூர்த்திப் படுத்த அவைகளால் முடியாது போலும். இந்த ரோகத்தால் பல குழந்தைகள் மாளுவதைக் கருதி எனது அநுபவத்திற் கண்ட இலகுவான சிகித்ஸை யொன்றைக் கீழே வரைகின்றேன்:

ஔஷதம்:—தம்பட்ட அவரை யென்று வழங்குங் கோழியவரையின் ரஸத்தைப் பிழிந்து வடிகட்டி, குழந்தைகட்கு வேளைக்கு அரைச்சங்களவும், பெரியவர்கட்கு ஒன்றரைச் சங்களவும் ஆகக் காலை மாலைதோறும் 6-வேளை கொடுத்து, பசுப்பால் அல்லது தயிர்ச் சாதம் உப்பின்றிப் புஜிக்கச் செய்யவேண்டும். மறுபத்தியம்-3 நாட் காக்கவேண்டும். பாலர்கட்குத் தயிரும், பெரியவர்கட்குப் பாலும் பத்தியத்திற்கு உத்தமம். பத்தியந்தாங்காத தேஹிகள் மறுபத்தியத்தில் உப்பு மாத்திரங் கூட்டிக்கொள்ளலாம். ரோகம் மிக்க மூர்த்தன்யமா யிருக்கும்போது செய்யவேண்டிய சிகித்ஸையும் பத்தியமும் இவ்வாறு ஆகும்.

ஆரம்ப ரோகத்திலும், மூர்க்கங் குறைவாயுள்ள ரோகத்திலும்-3-நாள் தொடர்ச்சியாய் மருந்தைச் செலுத்தாமல், ஞாயிற்றுக்கிழமை காலை மாலைகளில் மருந்தைக் கொடுத்து, அன்று மாத்திரம் பத்தியமாயிருக்கச்செய்து, மறுநாட் காலையில் விளக்கெண்ணெயை ஸ்நானஞ் செய்யச்சொல்லி, இச்சாப்பத்தியமாய்ப் புஜிக்கச் செய்யவேண்டியது. அடுத்தநாள் தொடங்கிப் பத்தியம் வேண்டியதில்லை. மறு ஞாயி

றன்றும் முன்போலவே மருந்தும் பத்திய முங் கொள்ளவேண்டும். இவ்விதமே-3-வாரத்தில் ஒவ்வொரு நாள் விதம் மருந்து சாப்பிட்டுப் பத்தியமும் ஸ்நானமுஞ் செய்துவந்தால் ரோகங்குணப்பட்டு விடும். இம்மருந்து திடீரென்றுண்டாகுங் காமாலை ரோகத்திற்கு வெகு உபயோகமானது. இந்த ரோகத்திற்குப் பல வைத்தியர்கள் குழந்தைகளின் கண்களில் கொடுமையான கல்க்கங்களைத் தீட்டுவதும், கைகால்களில் சூடிட்டும், கொடிவேலி வேரை வைத்துக்கட்டுவதும், இன்னும் பல கொடுமைகளைச்செய்தும் வருவதைக் காண மனம் நடுங்குகின்றது. லேசான ஔஷதத்தால் வருத்தமின்றி ரோகத்தைப் பரிஹரிப்பதை விட்டு, ரோகத்தினும் அதிக தொந்தரையையுண்டாக்குஞ் சிகித்ஸையை விஷயமறியாமல் கையாளும் அநேகம் வைத்திய நேயர்களை அவ்வாறு செய்யாமல் இவ்விதம் சுகமான வழியை யனுஸரித்து சிகித்ஸை செய்யவேண்டு மென்றும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

---

## NOTICE TO CONTRIBUTORS OF ORIGINAL ARTICLES.

### விசேஷ வியாஸங்களைப்பற்றிய ஓர் அறிவிப்பு.

1. வைத்தியப் பத்திரிகையினுலுண்டாகும் உபயோகங்களைப்பற்றி "இந்தியாவில் வைத்தியர்களும் வைத்தியப் பத்திரிகைகளும்" என்று மார்கழி மாதத்திய வைத்திய கலாநிதியில் பிரசுரித்துள்ள ஒரு வியாஸத்தை நமது வைத்தியர்களும் ஹகீம்களும் கவனத்துடன் படித்தால் விஷயம் தெரியவரும். மிஸ்டர் வி. எஸ். ஐயன் பிள்ளை மிக அனுபவசாலியான வைத்தியர்; அவர்கள் அப்போதைக்கப்போது தாம் சிகித்ஸை செய்கையில் அறிந்துவரும் அருமையான முறைகளை வெகு புத்தி நுட்பத்துடன் எழுதிவரும் விஷயங்கள் அநேகம் வைத்தியர்களுக்கு எவ்விதத்திலும் நன்மை பயக்கக்கூடியவை யென்று நாம் நம்புகிறோம். தமிழ் நாட்டில் இன்னும் எவ்வளவு வைத்தியர்களும் ஹகீம்களும் இருக்கின்றனர்? அவர்களில் சிலராவது தமது அனுபவத்தில் வரும் வைத்திய ஸம்பந்தமான விஷயங்களை அவ்வாறு வியாஸமாக வரைந்து வைத்திய கலாநிதிக்கு அனுப்புவார்களானல் தம்மைப்போன்ற மற்ற வைத்திய ஸஹோதரர்களும் அறிவில் அனுபவசீரியாய் மேன்மையுற்று, ஆயுர்வேத யூனனி வைத்திய முறைகளும் அதிக சீர்மையடையுமல்லவா? இனியாவது வைத்தியர்களும் ஹகீம்களும் மற்ற ஆங்கில வைத்தியர் முதலானோரும் அவ்விதம் செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

2. "தாரா கல்பம்" என்று மிஸ்டர் என். மாதவமேனன் அவர்கள் எழுதிய வியாஸத்தின் தொடர்ச்சி இம்மாதத்தில் இடமின்மையால் அடுத்த மாதம் சித்திரப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.

3. முக்கியமான பிழைதிருத்தம்: சென்ற மாதத்திய ஸஞ்சிகையில் 123-வது பக்கத்தில் "தாரா விதிக்கு அவசியமான திரவத்தை வைப்பதற்காக ஒரு அண்டா" என்பதற்குப் பதிலாக "தாராவிதியில் ரோகி படுப்பதற்காக ஒரு தொட்டி அல்லது த்ரோணீ" என்று மாற்றிப் படிக்கவும். பிறகு தாராத்ரோணீ என்கிற தலைப்பின்கீழ் "தாராவிதிக்குபயோகமான திரவவஸ்துவை வைப்பதற்கான அண்டாவே தாராத்ரோணீ என்று வழங்கப்படும்" என்பதை "தாராவிதியில் ரோகி படுப்பதற்கான தொட்டியே த்ரோணீ என்று வழங்கப்படும்" என்று திருத்திப் படிக்கவும். அப்பால் அதே பக்கத்தில் கடைசி வரியில் "உபரத்திலும்" என்னும் பதத்தை விலக்கிவிடவேண்டும்.—ப-ர்.

## வைத்திய கலாநிதி.

ஆனந்தஹூ மாசிமீ.

## AYURVEDIC DOCTORS AND THEIR INDISPENSABLE DUTIES.

## ஆயுர்வேத வைத்தியர்களும் அவர்களது இன்றியமையாக் கடமைகளும்.

பம்பாயில் ஆங்கிலவைத்தியத்தில் மிகத் தேர்ச்சி பெற்று, பொது நலப்பிரியரென்று மிகவும் புகழ்பெற்ற கனவானான டாக்டர் ஸர் பாலசந்திரகிருஷ்ண அவர்களுடைய வியாஸம் ஒன்று மொழிபெயர்க்கப்பட்டு இந்த ஸஞ்சிகையில் முதற் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதை நமது ஆயுர்வேத-யூனானி வைத்தியர்களும், அவ்வைத்தியங்களில் அல்லது தேசக்ஷேமத்தில் அபிமானமுள்ள மற்றவர்களும் சிறிது ஊக்கத்துடன் கவனிப்பார்களாக.

எமது ஸஹோதரர்களான ஆயுர்வேத வைத்தியர்களே! நமது நிலைமை இப்பொழுது எவ்வாறு இருக்கிறதென்று நீங்கள் இன்னும் அறியவில்லையே! இனி இன்னும் எவ்வித ஸ்திதியை நமது வைத்தியமுறை அடையப்போகிறதென்பதையும் நீங்கள் கவனித்தீர்களில்லை. அவ்வாறு கவனித்துவந்தால் நீங்கள் இவ்வாறு சும்மாயிருக்கத் துணியமாட்டீர்களென்பது உண்மை. உங்களுடைய நிலைமை வரவர பரிதவிக்கக் கூடியதாயிருக்கிறது! கண்விழித்துப் பாருங்கள்! ஆயுர்வேதமானது உலகிலுள்ள அகிலவிஷயங்களையும் உள்ளங்கையிலிருப்பதுபோல் எடுத்துக்காட்டக்கூடிய மிக உபயோககரமான அரிய சாஸ்திரமாயிருந்தும், அதை காலகதியென்னும் ஓர் அந்தகாரம் மூடிவருகின்றது. நீங்கள் இன்னும் சிறிது காலம் கண்விழித்து அதன் நிலைமையைக் கவனிக்காமல் விட்டுவிட்டீர்களானால், உண்மையில் அச்சாஸ்திரமுறையை அவ்வந்தகாரத்தினின்றும் மீட்க முடியாதவர்களாய் அதை அடியோடு பறிகொடுத்துவிட்டவர்களாக ஆய்விடுவீர்கள். அப்பால் ஆயுர்வேத வைத்தியர்களின் கதி என்னவாகும்! அதோகதி தான் என்பதை நீங்கள் நிச்சயமாய் நினைத்துக் கொள்ளுங்கள்! உங்களுக்கு மாத்திரமா அவ்வாறு கஷ்டம் நேரிடுமென்று நினைக்கிறீர்கள்! இவ்வைத்தியமுறையையே ஆதாரமாகக்கொண்டு தமது ஆயுளைக் காத்துவரும் இத்தேசத்திய அளவற்ற ஜனங்கள் வைத்திய உதவியில்லாமல் அநேகவிதமான துன்பங்களனுபவிக்க நேரிடும்; வேறுவிதமான வைத்திய உதவி ஏதோ சிறிது கிடைத்தபோதிலும் அதற்காக நமது தேசத்து ஏழை ஜனங்கள் சக்திக்கு மீறி செலவு செய்து இன்னும் எளியவராய் விடுவார்களே!

இந்த ஸந்தர்ப்பத்தில் நீங்கள் மற்றொரு விஷயத்தைப்பற்றி வெகு தீர்க்காலோசனை செய்யவேண்டியிருக்கிறது; அது நமது உயிரைக் காக்கும் சாஸ்திரமான ஆயுர்வேதத்தைப் பற்றிய ஆலோசனையே. ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்திலடங்கியுள்ள அரும்பொருட்களை உட்புகுந்து ஆராய்ச்சிசெய்து விளக்கிக் காட்ட முன்வராமலிருப்பதால், ஆயுர்வேத வைத்தியர்கள் மேனாட்டுவைத்தியர்களின் எதிரில் வீணே தலைகுனிந்து மறுமொழிகூற முடியாதவர்களாய் விட்டனர். ஆயுர்வேத நூல்களைக் கசடறக் கற்ற உண்மை வைத்தியனாயிருப்பவன் அவ்வாறு தலைகுனியவும் கூடுமோ? ஆயுர்வேதக் கிரந்தங்களை முறைப்படி அனுபவரீதியாகக் கற்று வைத்தியர்கள் தமது அறிவை அபிவ்ருத்தி செய்துகொள்ளாதவரையில் இவ்வித ஸங்கடங்களுக்கு ஆளாவது இயல்பே.

இப்பொழுது ஆங்காங்கு வைத்தியர்களாயிருப்பவர் சில வைத்திய நூல்களைப் படித்தோ, பரம்பரையாய் வந்த அநுபவத்தைக் கைப்பற்றியோ நமது தேசத்தில் ஒருவாறு தொழில் நடத்திவருகின்றனர். நமது ஆயுர்வேதமுறை சீரடைந்து செழிக்கவேண்டுமென்று உண்மையில் நாம் எண்ண முள்ளவர்

களாயிருந்தால், இனியும் இவ்வாறே இரண்டொரு நூல்களைப் படித்து அல்லது பரம்பரை வைத்தியரென்று சொல்லிக்கொண்டு உங்களுடைய சிறுவர்களையும் அவ்வழியை அனுஸரிக்கச் சொல்வதில் சிறிதும் பிரயோஜனமில்லை. இப்பொழுது தொழில் நடத்தும் வயது முதிர்ந்த வைத்தியர்கள் அவ்விதமே நடத்திவந்த போதிலும், இனி இளையவர்களையாவது ஆயுர்வேத வைத்தியத்தைக் கற்பதற்கென்று ஏதேனும் ஆயுர்வேத பாடசாலையில் சேர்த்து சாஸ்திரத்தைப் படித்து அனுபவத்தையும் பெற்று, அதற்கென்று ஏற்படுத்திய பரீக்ஷைகளில் தேறியபிறகு அவர்கள் வைத்தியத் தொழிலை நடத்த வேண்டுமென்று நாம் ஒரு நியமத்தைக் கட்டாயம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்குப் பாடசாலைகள் எங்கேயென்று கேட்பீர்கள். இதற்கு விடையளிக்கும்பொழுதுதான் சிறிது கஷ்டம் ஏற்படுகின்றது. ஆரம்பத்தில் தேசமெங்கும் ஒவ்வொரு ஊரிலும் வைத்திய பாடசாலைகளை ஏற்படுத்தவில்லையே என்று நமது வைத்தியர்கள் கேட்பார்கள். ஆரம்பத்தில் அவ்விதம் செய்வது ஸாத்தியமா? ஏதாவது ஒன்றிரண்டு பாடசாலைகள் ஏற்பட்டு அபிமானமுள்ள கனவான்களால் ஆதரிக்கப்பட்டு வந்தால், முதலில் அவற்றில் நமது வைத்தியர்களுக்கு ஏதோ ஒருவாறு அலக்ஷிய புத்தியும், அவற்றின்மேல் வீணில் குற்றங்குறை கூறும் வழக்கமும் நிலைத்திருக்கிறதேயன்றி, தற்காலம் ஏற்பட்டிருக்கும் பாடசாலைகளை அபிமானித்து, அவற்றை நிர்வஹிப்பவருக்கு உதவி செய்து, அவற்றில் இன்னும் அவசியமான ஏற்பாடுகளை நூதனமாக அமைத்து நமது சிறுவர்களையாவது முறைப்படி அவற்றில் சேர்ந்து கல்வி கற்கவிடப் பிரியமுண்டாவது மிகவும் அரிதாயிருக்கின்றதே!.

இப்பொழுது சென்னையிலுள்ள ஆயுர்வேத காலேஜானது கூடுமானவரையில் நல்ல வேலை செய்துவருகிறது. வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான விஷயங்கள் பெரும்பான்மையும் அதில் தகுந்த கல்விமான்களால் முறைப்படி கற்பிக்கப்படுகின்றன. ஸம்ஸ்கிருதம் தெரிந்த மாணாக்கர்களுக்கு இது ஏற்றதென்று சிலர் நினைக்கக்கூடும். ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேதக் கிரந்தங்களே இங்கு முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றனவென்றாலும், இப்பொழுது சென்ற இரண்டு வருஷகாலமாய் தேசபாஷைகளிலும் ஆயுர்வேத வைத்தியத்தைக் கற்பிப்பதற்காக நியமங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்காலம் தெலுங்கு பாஷையில் மாத்திரம் தனியாக சில வகுப்புகளில் கல்வி கற்பிக்கப்படுகின்றது. அடுத்த வருஷம் முதல் பெரும்பாலும் தமிழிலும் சில வகுப்புகள் ஏற்படுத்தப்படலாம். ஆனால் தமிழ் நாட்டிலுள்ள வைத்தியர்கள் இவ்விஷயத்தில் அபிமானம் பாராட்டி வேண்டியவளவு ஸஹாயம் செய்ய முன் வருவார்களானால், இவ்வித காரியம் நன்கு நிறைவேறக்கூடும். மேலும் மைலாப்பூரிலும் காலஞ்சென்ற ஆனரபுல் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆயுர்வேத பாடசாலை பொன்று சாஸ்திரத்தை முறைப்படி கற்பித்து வருகிறதென்று நமது வைத்தியநண்பர்கள் அறிந்திருக்கின்றனர். முதலில் தென் தேசத்திலுள்ள வைத்தியர்கள் இவ்விரு பாடசாலைகளையும் திரவியத்தாலும் சரீரத்தாலும் ஆதரித்து, தமது பிள்ளைகளையும் அவற்றில் வைத்திய முறைகளைக் கற்க அனுப்பி அபிவ்ருத்தி செய்து வருவார்களானால், பிறகு காலக்கிரமத்தில் ஆயுர்வேதவைத்தியர்களுக்கும் செல்வாக்கு அதிகரித்துவரும்பொழுது வேறிடங்களிலும் அவ்வாறு அதிக வைத்திய பாடசாலைகளை ஏற்படுத்தலாம். பூர்ணமாக இராஜாங்கத்தாருடைய உதவியைப் பெற்று அகில விதத்திலும் பலமடைந்திருக்கும் ஆங்கில வைத்திய முறையைக் கற்பதற்கே இப்பொழுது இம்மாகாணம் முழுமைக்கும் ஒரே ஒரு மெடிகல் காலேஜும் இரண்டு மூன்று சிறிய பாடசாலைகளும் மட்டுமே ஏற்பட்டிருக்க, ஆயுர்வேத வைத்தியர் ஆரம்பத்திலேயே ஊருராய்

வைத்திய பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்று கூறுவது மனப்பால் குடிப்பதாயிருக்கிறதேயன்றி, ஏதேனும் காரியம் நிறைவேற வேண்டுமென்கிற எண்ணத்துடன் அவ்விதம் சொல்வதாய் நாம் நினைக்கவில்லை.

நமது வைத்தியர்களுடைய இரண்டாவது கடமையும் ஒன்றுண்டு. நன்றாக யோசித்துக் கூறுவோமாயின் இரண்டாவதாகச் சொல்லப்படும் இவ்விஷயமே நமது தேசத்து வைத்தியர்களின் முற்போக்குக்கு முதற் கடமையெனவும் நிச்சயிக்கலாம். அது நமது ஆயுர்வேத ஔஷதங்களை முறைப்படி சீர்திருத்தி, அவை தேசமெங்கும் ஒரே வகையாக வழங்கக்கூடியவாறு அவற்றை ஒழுங்குக்குக் கொண்டுவரவேண்டும். இப்பொழுது ஒரு வைத்தியர் செய்யும் விதமாகவே மற்றொரு வைத்தியரும் ஔஷதங்களைத் தயார் செய்வதில்லை. அவ்வௌஷதங்களின் குணங்களையும் உபயோகங்களையும் (actions & uses), அளவுகளையும் பற்றி ஒரு வைத்தியரும் ஒரே சீராக வழங்கக்கூடிய நிலைமையில்லையென்று நிச்சயமாகக் கூறுவோம். விஷயம் இவ்வாறிருக்கும்போது கவர்ன்மெண்டாரிடம் நாம் ஸஹாயத்தை எதிர்பார்ப்பது எங்ஙனம்? தென்னிந்தியாவில் வைத்தியர்களும் பொது ஜனங்களும் சேர்ந்து, அநேகம் பங்குகள் சேர்த்து ஒரு பெரிய கம்பெனியை ஏற்படுத்தி, அக்கம்பெனியின் மூலமாய் ஆயுர்வேத ஔஷதங்களைச் செய்வதற்கும், அவற்றின் ஸம்பந்தமான ஆராய்ச்சிகளைச் செய்வதற்கும், அவ்வௌஷதங்களைப் பரிசோதனைசெய்து அவற்றின் அளவு முதலியவைகளை நிர்ணயிப்பதற்கும் ஓர் ஔஷதசாலை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாத விஷயம். அவ்வௌஷதசாலையை ஆயுர்வேத வைத்தியாபிவ்ருத்திக்காக ஏற்படுத்தினாலும், முதலில் இரண்டொரு ஆங்கில வைத்தியம் கற்ற நிபுணர்களை ஆராய்ச்சி வேலைக்காக நியமித்து, அனுபவம் பெற்ற ஆயுர்வேத வைத்தியர்களில் பலரை உத்தியோகஸ்தராகவும் ஏற்படுத்தி, காலவளவில் அவ்வௌஷதசாலையின் காரியங்கள் யாவும் ஆயுர்வேத வைத்தியர்களாலேயே நிறைவேற்றப்படும்படி அனுபவத்தைக்கொண்டு செய்துவிடக்கூடும். தென்னிந்தியாவிலுள்ள சில வைத்தியர்களும் ஜமீன்தாரர்களும் சிறிது மனம்வைத்து முயன்றால் இது ஓர் அஸாத்தியமான காரியமல்ல. இவ்வௌஷதசாலை நல்ல வேலை செய்துவருவதாய் அறிந்தால் கவர்ன்மெண்டாரும் ஸஹாயம் செய்ய முன் வருவார்கள். வைத்தியர்கள் இக்கம்பெனியிலிருந்து மிகவும் சுத்தமான ஔஷதங்களைச் சொற்பவிலைக்குப் பெற்றுவரலாம்; இதனால் வைத்தியர்கள் இப்பொழுது ஔஷதம் செய்வதில் செலவிடும் நேரத்தை வேறு விதமாக வைத்தியத் தொழிலில் செலவிடக் கூடுமாகையால், அதனால் அவர்களுடைய வருமானமும் வ்ருத்தியடைய வழியுண்டு. அவர்களுடைய சிரமத்திலும் சிலபாகம் குறையும்.

நண்பர்களான ஆயுர்வேத வைத்தியர்களே! நீங்கள் வைத்தியர்களென்று வெளிவந்து, ஏதோ சில ஔஷதங்களைச் செய்து விளம்பரம் செய்து அவற்றை விற்று ஒருவாறு வயிற்றை நிரப்புவதையே பெரிதாக நினைத்துவிடாதீர்கள்! நமது ஆயுர்வேதம் எவ்விதத்திலும் வைத்திய சாஸ்திரத்திற்கு வேண்டிய ஸகல அங்கங்களுடனும் கூடியதென்று கூறுவதற்கு யாதொரு ஸந்தேஹமுமில்லை. ஆங்கில வைத்தியம் இவ்வளவு செல்வாக்கு அடைந்ததற்கும் ஆதியில் ஆயுர்வேத நூல்களே ஆதாரமாயிருந்தனவென்பதற்கு அநேகம் அத்தாட்சிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஸமயம் வாய்த்தபோது விவரமாகக் கூறுவோம். நாம் ஆதரவுடன் அறிவித்த விஷயங்களில் ஆயுர்வேதாபிமானிகள் அனைவரும் கவனம் செலுத்தி, இக்காரியங்கள் நிறைவேறுவதற்கான முயற்சிகளைச் செய்வார்களானால், அதைவிட ஸந்தோஷம் நமக்கு வேறொன்றுமில்லை.

## ALL-INDIA VAIDYAK AND UNANI TIBBI CONFERENCE AND EXHIBITION.

### அகில-பாரத ஆயுர்வேத யூனனி டிப்பி கான்பரென்ஸும் பொருட்காட்சியும்.

சென்ற ஜனவரி மாதத்தில் கல்கத்தாவில் அகில-பாரத ஆயுர்வேத கான்பரென்ஸும் பொருட்காட்சியும் நடந்ததென்பது நமது நண்பர்கள் அறிந்த விஷயமே. இந்தியநாட்டில் பண்டைக் காலமுதல் புகழ்பெற்று விளங்கி வந்த ஆயுர்வேத-யூனனி வைத்திய முறைகள் தற்காலம் மிகவும் செல்வாக்கற்றுப் போயிருப்பதைக் கருதி, முக்கியமாய் சென்னை ராஜதானியில் வைத்தியர் முதலானவர் ஊக்கமற்றிருப்பதை நோக்கி நாம் ஒருபுறம் சிந்தை மேலிட்டவராயிருந்தும், இந்தியாவின் வடபாகங்களில் நமது ஆயுர்வேத வைத்தியர்களும் ஹகீம்களும் ஒற்றுமையுடன் இத்தேசத்திய வைத்திய முறைகளை முன்னுக்குக் கொண்டுவர முயற்சிசெய்து வருவதைக் கண்டு ஒரு விதத்தில் மிக்க ஸந்தோஷப்படுகிறோம். வடக்கே பீஹார் மாகாணத்திலுள்ள பங்கிபூர் என்கிற நகரத்தில் இந்த மாதம் 27-ம் தேதி முதல் ஆயுர்வேத-யூனனி வைத்திய ஸம்பந்தமான ஒரு பொருட்காட்சியும், 28-ம் தேதி முதல் ஒரு பெரிய கான்பரென்ஸும் நடப்பதாக நமது வைத்தியர்களுக்கும் ஹகீம்களுக்கும் நாம் மனமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம். இக்கான்பரென்ஸ் இப்பொழுது 4-வதுமுறை கூடுகிறது. இவ்வைத்தியப் பொருட்காட்சியை பீஹார்-ஒரிஸா மாகாணத்து லெப்டினெண்ட் கவர்னர் அவர்கள் திறந்து வைத்தார் என்றும், மாட்சிமை தங்கிய தர்பங்கா மஹாராஜா அவர்கள் கான்பரென்ஸுக்கு அக்கிராஸனாதிபதியாக வீற்றிருந்தார்களென்றும் கேள்வியுற நமது வைத்திய நேயர்கள் மிக்கக் களிப்புறுவார்கள். 27, 28-இத்தேதிகளில் நடந்தேறிய விஷயங்களை மட்டும் இதனடியில் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றோம்:

அகில-பாரத ஆயுர்வேத-யூனனி டிப்பிப் பொருட்காட்சியானது இம்மாதம் 27-உ பீஹார்-ஒரிஸா மாகாணத்து லெப்டினெண்ட் கவர்னர் அவர்களால் திறந்து வைக்கப்படும்போது தர்ப்பங்கா மஹாராஜா பஹதூர், ஹஜிக் உல் முல்க் பஹதூர், ஹகீம் அஜ்மால் கான், அம்மாகாண கமிஷனரான மிஸ்டர் ஓல்ட்ஹாம், மிஸ்டர் ஜஸ்டிஸ் ரோ, கலெக்டர் மிஸ்டர் ஸ்க்ரூப் இவர்களும், வைத்தியர்களும் ஹகீம்களும் மற்றும் அநேக கனவான்களுமாக சுமார் 100 பேருக்குமேல் அப்பொழுது வந்திருந்தார்கள். கான் பஹதூர் மீர் பாராஸ் ஹுஸேன் கான் என்னும் கனவான் லெப்டினெண்ட் கவர்னர் அவர்களை வரவேற்று, இந்திய வைத்திய முறைகளைச் சீர்திருத்தி வ்ருத்திக்குக் கொண்டுவரும் எண்ணத்துடன் இவ்விதம் பொருட்காட்சி யொன்று நடத்தப்படுகிறதென்று அதன் நோக்கங்களை அவருக்கு அறிவித்தார். தற்காலம் பொருட்காட்சி முதலிய காரியங்கள் நடத்தப்படுவதற்காகச் செய்துவரும் முயற்சிகளைப்பற்றியும், ஆயுர்வேத-யூனனி டிப்பி கலாசாலை யொன்று ஸ்தாபிக்கப்படவேண்டு மென்று ஆலோசனையிலிருந்து வருவதைப் பற்றியும் அவர் விவரித்துக் கூறினார். H. H. ராம்பூர் நவாப், H. H. பீகம் ஆப் போபால், H.H. க்வாலியர் மஹாராஜா, H. H. காசி மஹாராஜா இவர்கள் கலாசாலை ஸ்தாபிப்பதற்கென்று திரவ்யஸஹாயம் செய்திருப்பதைப்பற்றி நன்றி பாராட்டுவதாகவும் அவர் வெளியிட்டார். பிறகு பொருட் காட்சியின் அமைப்பைப்பற்றி ஒரு ரிபோர்டு வாசிக்கப்பட்டது. அந்த ரிபோர்டினால், அப்பொருட்காசிக்கு அநேகம் அருமையான வைத்திய நூல்களும், படங்களும், மூலிகைகளும், ஔஷதங்களும், யந்திர-சஸ்திரங்களும் வந்திருந்தனவென்று அறியப்படுகிறது.

பிறகு பெப்டினெண்ட் கவர்னர் அவர்கள் ஒரு ப்ரஸங்கம் செய்தார். அப்பொழுது ஆயுர்வேத யூனனி டிப்பி ஸம்பத்தமான இம்முயற்சியில் மாகாண கவர்ன்மெண்டுக்கும் ஸொந்தத்தில் தமக்கும் அபிமானமிருப்பதாக உறுதி மொழி கூறினார். இவ்வரும் பிரயத்தினத்தில் தமக்கும் கூட்டுறவு இருப்பது தமக்குப் பெருமை யென்றும் குறிப்பிட்டு சில வார்த்தைகள்

சொன்னார். பிறகு தர்ப்பங்கமஹாராஜாவும், லெப்டினெண்ட் கவர்னர் அவர்களும் கலெக்டர் முதலானவர்களுடன் கூட பொருட்காட்சியிலுள்ள வஸ்துக்களையெல்லாம் வெகு ஆவலுடன் கவனித்துப் பார்த்தார்கள். பழைய காலத்தில் பதார்த்தங்களின் தத்துவங்களை ஸூக்ஷ்மமாயறிந்து சாஸ்திரங்களியற்றிய மஹான்களிடம் கௌரவபுத்தியிருக்கவேண்டியது அவசியமென்று அப்பொருட்காட்சியிலிருந்த வஸ்துக்களைக் கண்டு அவர்கள் நிச்சயித்து அப்பொருட்காட்சியைச் சுற்றிப்பார்த்ததில் மிகவும் திருப்தியடைந்ததாகவும் மனதார மொழிந்தனர்.

மறுநாள் (28உ) பங்கிபூரில் பார்லி ரிபன் தியேடர் என்கிற மண்டபத்தில் ஆனரபுல் தர்ப்பங்கா மஹாராஜா அவர்கள் அக்கிராஸனாதிபதியாய் வீற்றிருக்க, பகல் 11-30-க்குக் கான்பரென்ஸ் ஆரம்பமாயிற்று. அப்பொழுது பீஹாரிலிருந்தும், ஐக்கிய மாகாணங்களிலிருந்தும், பஞ்ஜாபிலிருந்தும், பாடியாலாவிலிருந்தும் நூற்றுக்கணக்கான வைத்தியர்களும் ஹகீம்களும் வந்து கூடியிருந்ததுடன், ஸர் ஆலி இமாம் முதலிய இதர கனவான்கள் பலரும் நடவடிக்கைகளைப் பார்க்க விஜயம் செய்திருந்தனர்.

மஹாராஜா அவர்கள், வைத்தியர்களுக்கு அபூர்வமானதோர் உத்ஸாஹம் உதிக்குமாறு வெகு கம்பீரமாக ஒரு பிரஸங்கம் செய்தார். தன் வந்தரியினாலும் பாக்ரத் எங்பவராலும் உலகில் வைத்திய சாஸ்திரம் ஏற்பட்டதால் ஜனங்கள் ஆதிகாலந்தொட்டு அநேகம் பிணிகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ள நேர்ந்ததென்று அவ்வைத்திய சாஸ்திரங்களின் மகிமைகளை எடுத்துக் கூறினார். அவர் பின்னும் விவரித்து வந்த விஷயங்களின் ஸாராம்ச மென்னவென்றால்:—எந்த வைத்தியமுறையும் வேண்டியவளவு இராஜாங்கத்தாரிடமிருந்தும் பொது ஜனங்களிடமிருந்தும் உதவியைப் பெற்று வந்தாலன்றி மேன்மையடைய வழியில்லையென்று, இப்பொழுதுள்ள வைத்தியர்களுடையவும் ஹகீம்களுடையவும் யோக்யதைகளை அசோக சக்கிரவர்த்தி முதலானவர்களுடைய காலத்திலிருந்த வைத்தியர்களுடைய யோக்யதைகளுடன் சீர்தூக்கிப் பார்த்தால், இப்பொழுதுள்ள வைத்தியர்களிலும் ஹகீம்களிலும் அநேகர் சாஸ்திரதத்துவமறியாதவராகவும் அனுபவமில்லாதவராகவும் காணப்படுகின்றனரென்றும், இராஜாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுடைய ஆதரணையைப் பெற்ற ஓர் ஆயுர்வேத ஆஸ்பத்திரியாவது யூனானி ஆஸ்பத்திரியாவது இல்லையேயென்றும் கவலையுடன் பேசினது நம்மால் பாராட்டத்தக்கது. தற்காலம் இராஜாங்கத்தார் இவ்வைத்திய முறைப்படி வைத்தியசாலைகளை யேற்படுத்த சிறிது திரவ்ய ஸஹாயம் செய்ய வேண்டியது அவசியமென்றும், அந்தந்த பிரதானமான இடங்களில் இங்கிலீஷ் ஆஸ்பத்திரிகளைப் போலவே ஸகல அங்கங்களும் அமைந்த ஆயுர்வேத யூனானி ஆஸ்பத்திரிகளை ஸ்தாபித்து, நமது வைத்தியர்களும் ஹகீம்களும் நன்றாக முறைப்படி வேலை செய்து காட்டினால் இன்னும் விசேஷமான ஸஹாயங்களையும் கவர்ன்மெண்டாரிடமிருந்து எதிர்பார்க்கலாமென்றும், ஆகவே தகுந்தவாறு வேலைகளைச் செய்ய வைத்தியர்களும் ஹகீம்களும் பிரயத்தனப்படுவது மிகவும் அவசியமென்றும் வற்புறுத்தி மொழிந்தார்.

மிஸ்டர் நாஜிக் உல் முல்கிம் கான் அவர்களும், பாடியாலாவைச் சேர்ந்த பண்டித ராமப்ரஸாத சர்மா அவர்களும் கான்பரென்ஸின் உத்தேசங்களை எடுத்துச் சொன்னார்கள்.

(1) நமது ப்ரிடிஷ் கவர்ன்மெண்டு இம்மஹா யுத்தத்தில் ஜயம் பெற்று, இக்கொடிய யுத்தம் சீக்கிரம் முடிவுக்கு வரவேண்டியதைப் பற்றியும், (2) லக்னோவில் மிகப் புகழ்பெற்ற யூனானி வைத்தியராயிருந்த ஹகீம் ஹபிஜ் அப்துல் வாலி என்கிற கனவான் காலகதியடைந்ததற்காக இக்கான்பரென்ஸ் வருந்துகிறதென்கிற விஷயத்தைப் பற்றியும் (3) பீஹாரிலுள்ள வைத்தியர்களும் ஹகீம்களும் ஒற்றுமையுடன் உழைத்து ஆயுர்வேத-யூனானி முறைகளின்படி வைத்தியத்தைக் கற்பிப்பதற்குக் கலாசாலைகளையும், வைத்தியாப்யாஸம் செய்யும் மாணாக்கர் அனுபவம் பெறுவதற்கும் ஜனங்களுக்கு வைத்திய உதவி செய்து வருவதற்கும் ஏற்ற ஆயுர்வேத-யூனானி ஆஸ்பத்திரிகளையும் ஏற்படுத்துவது மிகவும் முக்கியமென்கிற இவ்விஷயத்தைப்பற்றியும்முதல் நாள் பகலில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதைப் பற்றிய மற்ற விவரங்களை மற்றொரு ஸஞ்சிகையில் ஸாவகாசமாகக் கூறுவோம். இந்தியாவில் வட பாகங்களிலேயே இவ்வித விஷயங்களில் வைத்தியர்களுக்கும் ஜனங்களுக்கும் மிகுதியான விச்வாஸமும் உத்ஸாஹமும் ஏற்பட்டுவருகிறது. சென்னை மாகாணத்திலோ, அநேகம் பெயர் மிகவும் மேலுக்குப் பகட்டாகத் தோன்றும் மேனாட்டு வைத்திய முறைகளைக் கண்டு மதிமயங்கி, ஆதியிலிருந்து தமது ஆரோக்கியத்தைக் காக்கவும் பிணிகளைப் போக்கவும் மிக்க உபயோக

மாயிருந்துவரும் நமது வைத்திய முறையை அலக்ஷியம் செய்வதுடன், அவ்விதம் செய்வது தான் நாகரிகத்தனத்திற்கு உள்ள அடையாளமென்றும் கருதுபவராயிருப்பதைப் பார்த்து நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. மற்றப் பிரதேசங்களில் நடக்கும் இவ்வித காரியங்களைப் பார்த்தாவது நமது வைத்தியர்கள் தென்னிந்தியாவிலும் தமது வைத்தியாபிவிருத்தியில் கவனம் செலுத்துவாரென்று நம்புகிறோம்.

---

## VACCINATION.

### அம்மை குத்துதல்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு வயது நிரம்புவதற்கு முன்னமே அம்மை குத்தித் தீரவேண்டுமென்று இந்தியாவில் கட்டாயச் சட்டம் ஏற்பட்டிருப்பதை இப்பொழுது பலர் கண்டிக்கின்றனர். இங்கிலாண்டு, ஜெர்மனி முதலிய நாடுகளில் அம்மை குத்துவது அநாவசியகமென்றும், அதனால் சில தீங்குகளும் ஸம்பவிக்கின்றனவென்றும் சாஸ்திர நிபுணர்கள் அறிந்து, அம்மை குத்தும் முறைக்கு ப்ரதிகூலமான ஸங்கங்களையும் சிலர் ஏற்படுத்தியிருக்கின்றனர். அநேகம் வியாதிகளைத் தடுப்பதற்காக அந்தந்த வியாதிக்குக் காரணமான பதார்த்தங்களைப் புஜித்தோ வேறுவிதமாக தேஹத்திற் செலுத்தியோ, அவ்விஷ பதார்த்தங்களைத் தாங்குவதற் கேற்றவாறு சரீரத்திற்கு ஒருவாறு ஸம்ஸ்காரம் செய்யும் சில உபாயங்களை முற்காலத்தில் ஆயுர்வேத சாஸ்திரஞ்ஞர்களும் அறிந்திருந்தனர். "த்ரவ்யைஸ் தைரேவ வா பூர்வம் சரீர ஸ்யாபிஸம்ஸ்க்ருதி:"—(எவ்வித பதார்த்தங்களால் வியாதி ஸம்பவிக்கின்றதோ, அதே பதார்த்தங்களை முன்னதாய் உபயோகப்படுத்தி தேஹத்திற்கு அவற்றை அனுகூலமானவையாகச் செய்து விடுவதும் வியாதிகளைத் தடுக்கும் முறைகளில் ஒன்றும்) என்று வாக்படன் முதலானவர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் அவ்விதம் வியாதிகளைத் தடுப்பதற்கென்று வியாதிக்குக் காரணமான வஸ்துக்களை உபயோகிக்கும் வழக்கம் அவ்வளவு யுக்தமல்லவென்று நிச்சயித்து, அவ்வழியை அதிகமாய் அவர்கள் பின்பற்றவில்லை யென்றறிகிறோம். குழந்தைகளுடையவும் பெரியோர்களுடையவும் ஆரோக்கியமான தேஹத்தில் வியாதிகொண்ட நிணநீரைக் (lymph) குத்திச் செலுத்துவதும், அதற்கென்று ஒரு கட்டாயச் சட்டம் ஏற்பட்டிருப்பதும் சில மேனாட்டுப் பண்டிதருடைய கொள்கைப்படியே அவசியமானவை யல்ல. இதைப்பற்றி "நியூஇந்தியாவில்" ஓர் ஐரோப்பிய கனவான் சில நாட்களுக்குமுன் எழுதி வெளியிட்டிருக்கும் வியாஸத்தை இதனடியில் மொழி பெயர்க்கின்றோம்; அதுவே இதற்குப் போதுமான அத்தாட்சியாகலாம்:

"அம்மை குத்தும் விஷயமா யேற்பட்டுள்ள கட்டாயச் சட்டத்தைப்பற்றி நீங்கள் உங்களுடைய பத்திரிகையில் நேற்றைய 10உ எழுதியிருந்த நிருபத்தைப் பார்த்தேன். இந்தியாவில் வருஷந்தோறும் 10,000,000 பேருக்கு கவர்ன்மெண்டு அதிகாரிகளால் அம்மை குத்தப்பட்டு வருவதைப்பற்றி ஸாமானியமான விவேகத்தினால் அறியக்கூடிய சில வார்த்தைகளைச் சொல்ல வெகு ஆவலுள்ளவனாயிருக்கிறேன். கவர்ன்மெண்டார் இவ்விதம் 100 வருஷங்களானாலும் அனைவருக்கும் அம்மை குத்திக்கொண்டே போகின்றனர். வேண்டியவளவு நம்பிக்கைவைத்தே இவ்விதம் செய்யப்பட்டு வருகிறது; ஆனால் இதன் பலனைப் பற்றி சாஸ்திரமுறைப்படி விசாரம் செய்தவரில்லை. வியாதியைத் தடுப்பதற்கு இம்முறை மிகச் சிறந்த உபாயமென்று சிபார்சு செய்யும் சாஸ்திரநிபுணர், அதனாலுண்டாகும் உபயோகத்தையும் தெளிவாக நிரூபிக்கவேண்டியது கடமை; அந்தந்த ஊர்களில் அம்மை பரவி வரும்போது, அம்மை குத்தியவர்களுக்கு அவ்வியாதி வராமலிருந்ததாயென்று ஜாக்கிரதையாக விசாரணை செய்யவேண்டியது அவசியம்; ஆனால் அநேகவிடங்களில் இவ்வாறு விசாரணை செய்யாமலே காரியம் ஏதோ நடந்துவருகிறது. இவ்விஷயத்தை நன்றாக விசாரிக்க முயன்றார்களானால், வியாதியைத் தடுப்பதற்காக அம்மை குத்துவதால் பிரயோஜனமில்லையென்று நன்கு விளங்கும். கிரேட் ப்ரிடனிலும், இடாலியிலும், ஜெர்மனியிலும் இது ஸம்பந்தமாக நன்றாக விசாரணை செய்துவந்ததில் இவ்விதப் பிரயோகத்தினால் அம்மை வராதபடி தடுக்க முடியாதென்றும், இது பிரயோஜனமற்ற காரியமென்றும் அத்தேசத்தோருக்குத் தெரியவந்தது. அவ்விதமாக இந்தியாவிலும் 36-வருஷங்களுக்கு முன் விசாரணை செய்யப்பட்டு வந்ததில் அறிந்துகொண்ட விஷயத்தைப்பற்றி முன்னால் சில ரிபோர்டுகள் வெளியாயிருக்கின்றன. அவற்றைக் கவனித்தோமாயின் சிறிது உண்மை வெளியாகும்.

1879-80 வருஷங்களின் சுகாதார முறைகளைப்பற்றிய ரிபோர்டில் 142-வது பக்கத்தில் 'இந்தியாவில் அம்மை குத்துவதால் அம்மையென்னும் வியாதி

வயைத் தடுப்பது ஸாத்தியமல்ல' என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் பஞ்ஜாப் ராணுவக் கமிஷனுடைய 1879-வது வருஷத்திய ரிபோர்டில் 186-வது பக்கத்தில் 'இந்தியாவின் மற்றப் பிரதேசங்கள்போலவே பஞ்ஜாபிலும் அம்மை குத்திவந்தும் அப்பெருவாரி வியாதியைத் (அம்மை) தடுக்க முடியவில்லையானதால் அந்த முறை பிரயோஜனமற்றதாகத் தெரிய வருகிறது' என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விஷயத்தை டாக்டர்கள் கவனிக்கவில்லையென்று அவர்கள்பேரில் நாம் பழிகூற வகையில்லாதவராயிருக்கிறோம். உபயோகமில்லாத அல்லது சில ஸமயம் தீங்கு விளைவிக்கக்கூடிய இம்முறையைக் கையாடவேண்டியது அவசியமென்று கட்டாயமாகச் சட்டம் ஏற்படுத்தப் பட்டிருப்பதால், டாக்டர்கள் இதில் குறுக்கிடமுடியாமற் போனதுடன், இவ்விஷயத்தில் அவர்கள் உத்தரவாதமா யிருக்கவேண்டிய கடமையும் ஒருவாறு குறைந்துவிட்டது. மறுபடியும் சொல்லுகிறேன். அம்மை குத்துவது உபயோகமற்ற முறையென்பது மட்டுமல்ல, அதுதீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. அம்மை குத்துவதற்காக க்ளிஸரைன் என்னும் பாணியைச்சேர்த்து மஹா சுத்தமென்று பக்குவம் செய்யப்பட்ட அந்த சிணீர் (Pure Glycerinated lymph) என்பது ஸாதாரண சீழேயன்றி வேறல்ல; வியாதிகொண்ட ஒருகன்றின் வயிற்றில் ரோமங்களைச் சிரைத்துவிட்டு நூற்றுக்கணக்கான சிறிய விரணங்களை யுண்டுபண்ணி, அவ்வெளியப் பிராணியின் அவ்வயவத்தில் கொப்புளங்களை யுண்டாக்கி, அவற்றிலிருந்தே இந்த சிணீரென்னும் சீழ் சேகரிக்கப்படுகிறது. அக்கொப்புளங்களைப் பிதுக்கி எடுக்கப்படும் இப்பதார்த்தம் மிகவும் கொடிய விஷப்பொருளென்பது நன்கு நிர்த்தாரணம் செய்யப்பட்ட விஷயமே; ஆகவே மனிதருடைய இரத்தத்தில் அதைப் பிரயோகிப்பதற்கு முன், இந்த சிணீரில் ஜலத்தையும் க்ளிஸரைனையும், சில ஸமயம் கிராம்புத் தைலத்தையும் சேர்த்து அதிலுள்ள விஷப்பொருளைக் குறைப்பதற்காக அது விளாவப்படுகிறது. சில வாக்ஸினேடர்கள் (அம்மை குத்தும் அதிகாரிகள்) க்ளிஸரைன் சேர்ப்பதை ஆக்ஷேபித்து, அதற்குப் பதிலாக லானோலின் என்கிற தைலத்தைச் சேர்க்கலா மென்றும், வேறு சிலர் இவ்விரண்டையுமே ஆக்ஷேபித்து க்ளோரோபாரத்தைச் சேர்த்து விளாவக்கூடுமென்றும் அவரவர்களுக்குத் தோன்றியவாறெல்லாம் கூறுவதுடன், அவ்விதமே செய்தும் வருகின்றனர். இவர்களுள் ஒருவராவது சாஸ்திர முறைப்படி இவ்விதம் விஷப்பொருளை அவரவர் அபிப்பிராயப்படி வேறுவித விஷப்பதார்த்தங்களான க்ளோரோபாரம் முதலியவற்றுடன் கூட்டி அவற்றின் குணாகுணங்களைப் பிரத்தியக்ஷத்தில் பரீக்ஷித்தவர் அல்லர்; அவை அவ்வியாதியைத் தடுக்கக்கூடிய சேர்க்கைதானா என்று விசாரித்தவர்களல்ல; ஆனால் பொதுஜனங்கள் என் செய்வர்? அவர்கள் எளியவர்; அவர்கள் இவ்விஷயங்களையெல்லாம் உணராதவர்; பொது ஜனங்களில் பெரும்பாலோர் படிக்கவும் தெரியாதபாமரர்; அந்தந்தப் பிரதேசத்திலுள்ள அம்மை குத்தும் அதிகாரிகள் எவ்வித பதார்த்தங்களைச் சேர்த்துக் கலந்த சரக்கை உபயோகித்துக்கொள்ள உத்தரவு செய்தபோதிலும், அவர்கள் அதற்கு உடன்பட்டுத் தீரவேண்டியிருக்கிறது. இங்கிலாண்டில் 1907-ல் பார்லிமெண்டு மெம்பர்கள் பலர் சேர்ந்து, மனஸ்ஸாக்ஷியின்படி நடக்கவேண்டுமென்று விரும்புகிற ஜனங்களின் நன்மையைக் கருதி (Conscience clause) ஒரு சட்டம் ஏற்படுத்தப் பட்டது. ஆகவே இவ்வித காரியங்களை ஆக்ஷேபிக்கும் கருத்துள்ள ஜனங்கள் ஒரே வருஷத்தில் 300,000-க்கு மேலாகவே முன் வந்து, இதில் விருப்பமில்லாத ஜனங்களைக் கட்டாயப்படுத்துவதும் அவர்களை தண்டனைக்கு உட்படுத்துவதும் பிசகென்று வாதிக்கின்றனர். இந்த 300,000 பேர்களும் அம்மை குத்திக்கொள்ளவேண்டுமென்கிற நிர்ப்பந்தத்திலிருந்து விலக்கப்பட்டார்கள். இப்பொழுது இங்க்லாண்டில் பிறந்த குழந்தைகளில் பாதிக்கும் குறைவான குழந்தைகளுக்கே அம்மை குத்தப்பட்டுவருகிறது. இவ்விதியிலிருந்து விலக்கப்பட்ட மனிதர்களின் எண்ணிக்கை இன்னும் சில வருஷம் இவ்வாறே மேன்மேலும் விருத்தியடைந்து வருமானால், இங்க்லாண்டில் குழந்தைகளுக்கு அம்மை குத்தும் வழக்கம் ஒன்று உண்டென்பதே கிரமமாக மறக்கப்பட்டுவரும்; இங்க்லாண்டில் தற்காலத்திலும், அம்மைகுத்தும் வழக்கம் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை; நன்கு கவனித்துப் பார்த்தால், அத்தேசம் அனுபவத்தில் இவ்விதிக்கு விலக்கானதே யென்று சொல்லத்துணிவேன்; அங்கு மஸூரிகையென்னும் பெரியம்மை முற்றிலும் உண்டாவதுமில்லை. பல வகையிலும் உயிரைக் காப்பது ஜனங்களுக்கு மிகக் கடினமாயிருக்கும்போது, அவர்களுடைய சுகாதாரத்தைக் காக்க வேண்டிய வழிகள் அநேகம் இருக்க, இராஜாங்கத்தார், ஜனங்களுடைய சரீரத்தில் இளங்குழந்தைப் பருவத்திலேயே விஷப்பொருளை ஏற்றி அவர்களுடைய ஆரோக்கிய ஸ்திதியை நிலைகுலையச் செய்வதற்கான

ஒரு கட்டாயமான சட்டத்தை ஏற்படுத்தியிருப்பது விஸனிக்கத்தக்கது."

இவ்வாறு மிஸ்டர் ஆர்னல்ட் வ்யுப்டன் என்கிற கனவான் எழுதியதை இந்திய ஜனங்களும் கவனித்து, இதில் விருப்பமில்லாத வகுப்பார், தம்மை வீணில் இதற்காக நிர்ப்பந்திக்கக் கூடாதென்றும் இங்க்லாண்ட் முதலான தேசங்களில் இது விஷயமாய் ஜனங்களுக்குக் கொடுத்திருக்கும் ஸ்வாதந்த்ரியம் தமக்கும் அவசியமென்றும் கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்வது உசிதம்.

---

## CORRESPONDENCE.

## பொதுக்கடிதங்கள்.

[இத்தலையங்கத்தின்கீழ் வைத்தியர் முதலானவர்கள் எழுதும் பொதுக்கடிதங்களும், ஸந்தேஹ வினாக்களும், அவற்றிற்கு விடைகளும், மற்றும் வைத்தியர்கள் அவரவரது அனுபவத்தில் வரும் விஷயங்களைப் பற்றி வரையும் குறிப்பு முதலானவைகளும் அப்போதைக்கப்போது பிரசுரிக்கப்படும்.—ப-ர்.]

### 1. மூத்திர ரோகங்களில் பூசுணிக்காய்.

ஐயா,

கலாநிதியின் மற்ற ஸஞ்சிகைகளைப் போலவே பிப்ரவரி மாதத்திய ஸஞ்சிகையையும் படித்து மகிழ்ந்தேன். அந்த ஸஞ்சிகையில் 'ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்' என்கிற தலைப்பின்கீழ் பூசணிக்காயைப்பற்றி எழுதியிருந்த நிருபத்தை மிக்க ஆவலுடன் படித்தேன். ஆனால் டாக்டர் ஏ. காகெனஸ்கி கூறும் பூசணிக்காய் எதுவோ அதை அறிய விரும்புகிறேன். பெரும்பூசுணி, சாம்பர்ப்பூசுணி என்று இருவகைப் பூசணிக்காயுண்டு. சரைக்கவைச் சுட்ட மேனாட்டார் வெண் பூசுணிக்காய் (White pumpkin) என்று வழங்குகிறார்கள். ஆகவே மூத்திரரோகம் முதலியவற்றில் எந்த பூசுணிக்காயை உபயோகிக்க வேண்டும்? உபயோகிப்பது எவ்விதம்?

D. ஆதிமூர்த்தி.

விடை:—அந்த நிருபத்தில் குறிக்கப்பட்டுள்ள பூசுணிக்காய் கல்யாணப் பூசுணிக்காயென்று வழங்கப்படும் சாம்பர் நிறமான பூசுணிக்காயே யாம். "வல்லீ பலானாம் ப்ரவரம் கூஷ்மாண்டம் வாதபித்தஜித்" என்றும், "கூஷ்மாண்டம் ப்ரவரம் வதந்திபிஷஜ:" என்றும் அவ்வியாஸத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ள ஸம்ஸ்கிருதபத்தியங்களில் கூஷ்மாண்டம் என்கிற பதம் குறிப்பிடத்தக்கது; கூஷ்மாண்டம் என்பதை சாம்பர்ப்பூசுணிக்கா யென்றே கூறுவர். மூத்திர ரோகங்களிலும், பலஹீனத்திலும் கூஷ்மாண்டமென்னும் கல்யாணப் பூசுணிக்காயையே வைத்தியர்கள் உபயோகிப்பது முறை. எந்த ரோகங்களில் உபயோகிக்கலாமென்றும், எவ்வாறு உபயோகிக்கவேண்டுமென்றும் முன் ஸஞ்சிகையிலேயே விவரமாக நிகண்டு முதலானதைக் கொண்டு விஷயங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.—ப-ர்.

---

### 2. மாக்ஷிகதாது.

ஐயா,

(1) மாக்ஷிகதாது என்னும் சரக்கு பொன்னிமிளைதானா? (2) அதன் குணங்களென்ன? (3) அது விஷமா? (4) அதன் சுத்திமுறை என்ன? இக்கேள்விகளுக்கு தயவுசெய்து விடையளிப்பீர்களென்று நம்புகிறேன்.

எஸ். வி. பிள்ளை.

விடை:—(1) மாக்ஷிகதாது என்பது ஸ்வர்ண மாக்ஷிகம் தாரமாக்ஷிகம் என்று இரண்டு விதம்; இவ்விரண்டும் முறையே தமிழில் பொன்னிமிளை வெண்ணிமிளை என்று வழங்கப்படும். எவ்விடத்தில் இவ்விரண்டு வகைகளில் எதையாவது ஒன்றைக் குறிப்பிட்டுக் கூறாமல் 'மாக்ஷிகதாது' என்று மட்டும் பொதுவாகக் கூறப்படுகிறதோ அவ்விடத்தில் அதற்குப் பொன்னிமிளை என்றுதான் பொருள்கொள்ளவேண்டும். (2) சிறந்த ரஸாயனமென்றும், மூத்திரரோகம், அர்சஸ் என்னும் மூலம், சோபை யென்னும் சோகை இந்த ரோகங்களில் நற்பயன் விளைவிக்கக்கூடியதென்றும் கூறப்படுகிறது. இதற்கு ஸ்தம்பகம் என்கிற குணம் விசேஷமாயுண்டு. ஆகவே இரத்தப்பெருக்கு முதலியவற்றைத் தடுப்பதற்கு ஸாதாரணமாய் இதை உள்ளுக்கும் வெளியில் விரணங்களுக்கும் உபயோகிப்பது வழக்கம். (3) ஒரு விதத்தில் இது விஷமே; நன்கு சுத்தி செய்த மாக்ஷிகதாதுவின் பஸ்மத்தை இரண்டு குஞ்ஜாப் பிரமாணம் (சுமார் இரண்டு குன்றுமணி யெடை) உபயோகித்தால் விஷத்தன்மை இராது. (4) மாக்ஷிகதாதுவை சிறு துண்டுகளாக்கி, ஒரு வஸ்திரத்திற்கட்டி, ஒரு பாத்திரத்திற்குள் ஆமணக்கெண்ணெயில் தொங்கவைத்து ஒரு யாமகாலம் சிறுகத் தீயிட்டுக் காய்ச்சினாலும், அல்லது வாழைத்தண்டின் சாற்றில் அவ்வாறு செய்தாலும் அது சுத்தியாகும். த்ரிபலையைக் கஷாயமிட்டு, அக்கஷாயத்திலும் ஆமணக்கெண்ணெயில் செய்ததுபோலவே சுத்தி செய்யலாம்.—ப-ர்.

# DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### சுண்ணாம்பு.

மருந்தென்னும் முறையில் சுண்ணாம்பு மிகவும் உபயோகமான சரக்காகக் கருதப்படுகிறது. வயிற்றில் புளிப்பு அதிகரித்து வருத்தப்படவேண்டி நேரிடும் போது சுண்ணாம்புத் தெளிவு நீர் அப்புளிப்பை அடித்து அமைதியைத் தரக்கூடியது; ஒரு பலம் சுண்ணாம்பு நீற்றில் இரண்டு படி ஜலம் சேர்த்து கெட்டியான மூடியுள்ள ஒரு புட்டியில் விட்டு, சிறிதுநேரம் கழித்து, அப்புட்டியை இரண்டு மூன்று நிமிஷம் வரையில் நன்றாகக் குலுக்கி, கரையாமலிருக்கும் சுண்ணாம்புப்பொடிகள் அடியில் முற்றிலும் படியும் வரையில் புட்டியை ஓரிடத்தில் அசையாமல் வைத்திருந்து, பிறகு மேலே தெளிவாக நிறமற்று நிற்கும் ஜலத்தையட்டும் மற்றொரு புட்டியில் வடித்து வைத்துக் கொள்ளவும்; இது சுண்ணாம்புத்தெளிவுநீர் செய்யும் முறையாகும். சுமார் 12-மணி ஸாவகாசமாவது கழித்து எடுத்தால் சுண்ணநீர் சுத்தமாயிருக்கும். நெருப்புப்பட்டு வெந்துபோன அவயவங்களின் எரித்தலைத் தணிப்பதற்கும், அந்த விரணத்தை ஆற்றுவதற்கும் இது உபயோககரமானது. அவ்வித ஆபத்தான ஸமயங்களில் சுண்ணாம்புநீர் அதிகமாகத் தெளியவேண்டுமென்று எதிர்பாராமல் சுமார் அரைமணி நேரம் தெளியவைத்து அந்த நீரை உபயோகிக்கலாம். இந்த நீரை 1 முதல் 3 அவுன்ஸ்வரையில் உட்கொள்வதற்கும் உபயோகிக்கலாம். இரைப்பையில் புளிப்பு அதிகரித்தல், நெஞ்செரிவு, அஜீர்ணம், அதிஸாரம், வாந்தி, சில குன்மவியாதிகள், விஷகுணமுள்ள தாதுப்பொருட்கள் குடலிற் சேருவதாலுண்டாகும் கெடுதி இவற்றில் உபயோகிக்க இது பெயர்போன ஔஷதம். ஜனனேந்த்ரியங்களிலுண்டாகும் எரித்தல், முலைக்காம்பிலுண்டாகக்கூடிய புண்கள், நெருப்பு முதலியதாலான எரித்தல், பெரும்பாடு இவற்றில் மேலுக்குக் கழுவும் நீராகவும் இதை உபயோகிக்கலாம். இளங்குழந்தைகளுக்கு அஜீர்ணரோகங்களில் பாலுடன் கலந்து இதைப் போட்டுவது நலம். ஆனால் ஒரு தேக்கரண்டியளவு உபயோகிக்கலாம்.

### வெட்பாலை.

இந்த மரத்தினுடைய வேரின் பட்டைக்கும் கிளைகளின் பட்டைக்கும் சீதபேதியைப் போக்கும் குணமுண்டு. இதன் பட்டைகளைக் கஷாயமிட்டு, அதில் சொற்பப் பிரமாணம் அபினியையும் சேர்த்து வெகு தீவ்ரமான சீதபேதியிலும் இரண்டு மூன்று மணிக்கு ஒரு முறையாக இரண்டு அவுன்ஸ் வீதம் உட்கொள்ளக் கொடுப்பது நலம். வெட்பாலையின் விதைகளையும் (இவற்றையே வெட்பாலரிசி என்பார்கள்) முன்போல் கஷாயமிட்டு உபயோகிக்க நற்குணமுண்டாகும். இதன் வித்துகளுக்கு ஸ்தம்பகம் (astringent), ஜ்வரஹரம், ப்ரவாஹிகாஹரம் (anti-dysenteric), க்ருமிஹரம் என்கிற குணங்கள் உண்டு.

### விஷ்ணுக்ராந்தி.

இது தரையோடு கொடிசொடியாகப் படரும் ஒரு பூண்டு; இதன் புஷ்பங்கள் வெண்மையாகவாவது நீலநிறமாகவாவது இருக்கும்; இந்தியாவில் வறட்சியான பிரதேசங்களிலெல்லாம் இதைப் பெரும்பாலும் காணலாம். நீலநிறமான புஷ்பங்களுடன் கூடிய செடிகள் விஷ்ணுக்ராந்தி என்றும், வெளுப்புப் புஷ்பங்களையுடைய செடிகள் சூர்யக்ராந்தி என்றும் வழங்கப்படுகின்றன.

இப்பூண்டு ஜ்வரஹரமாகவும், பல்யமாகவும் (tonic) விசேஷமாய் உபயோகிக்கக்கூடியது. வயிற்றிலுண்டாகும் அஜீர்ணம் முதலிய கோளாறுகளைப் போக்கவும் இதன் கஷாயம் முதலியவற்றை உபயோகிப்பதுண்டு. இதன் இலைகளையும் புஷ்பங்களையும் சுத்தமாய் ஆய்ந்தெடுத்து, ஒரு பலம் இலைக்கு $\frac{1}{2}$ பலம் மிளகும் ஜீரகமும் சேர்த்து நன்றாக அரைத்து, சுண்டைக்காயளவு மாத்திரையாகச் செய்து உலர்த்தி, தினத்திற்கு மூன்று முறை உபயோகிக்கலாம். யூனானி வைத்தியர்கள் மூளையையும் ஞாபகசக்தியையும் இது பலப்படுத்துந்தன்மையதென்று கூறுகின்றனர். இதற்கு ஸ்தம்பககுணம் (astringent) உண்டு; ஆகவே தேஹத்திற்குள் ஸம்பவிக்கும் இரத்தப்பெருக்குகளைத் தடுப்பதற்கு இதை உபயோகிக்கலாம். இதன் இலைகளை நிழலிலுலர்த்தி தூமவர்த்திகள் (சுருட்டுகள்) செய்து, காட்பட்ட மார்ச்சளியிலும், ச்வாஸகாஸரோகத்திலும் புகைபிடிக்கக்கூடும்.

### சுதேச ஔஷதச்சரக்குகளும் யுத்தமும்.

இப்பொழுது ஜெர்மனியிலிருந்து ஸால்வார்ஸன் முதலிய அநேக ஔஷதங்கள் வராமல் நிறுத்தப்பட்டபடியால், ஐரோப்பிய யுத்த ஸம்பந்தமாய் இத்தேசத்திய ஔஷதச் சரக்குகளின் தன்மைகளைப் படித்தறியவும், அவற்றைப் பிணியாளிகளுக்கு உபயோகிக்கவும்

இது தகுந்த ஸமயமாகக் கருதப்படுகிறது.—Practical Medicine.

### குடல்விரணங்களில் அயோடைன்.

இரைப்பையிலாவது குடலிலாவது ஏதாவது விரணங்கள் உண்டாயிருந்தால் அவற்றை ஆற்றுவதற்கும் அவற்றிலடங்கிய தோஷங்களைப் போக்குவதற்கும் டிஞ்சர் அயோடைன் என்பது எடுத்த ஔஷதமாகும் என்று நாட்டென் ஹாம் என்கிற கனவான் கூறுகிறார். ஸந்நிபாதஜ்வரத்தினால் (typhoid fever) வருந்திய ஒருவனுக்கு அடிக்கடியும் குடலிலிருந்து இரத்தப் பெருக்குடன் பேதியாய்க்கொண்டிருந்தபோது அபினியையும், எர்க்காடின் என்கிற உப்பையும், வேறு விதமான ஸ்தம்பக ஔஷதங்களையும் வேண்டியவளவு உபயோகித்துவந்தும் குணமுண்டாகாமற் போய்விட, டிஞ்சர் அயோடைன் என்னும் திராவகத்தை 1?-நாட்களளவும் தொடர்ந்து உட்கொள்ளச் செய்து வந்ததில், பிணியாளி அக்கஷ்டத்திலிருந்து நிவ்ருத்திபடைந்தான். ஸாதாரணமாகக் குடல்களிலுண்டாகும் விரணங்களையும், ஸந்நிபாதத்தினால் ஸம்பவிக்கும் ஜ்வராதிஸாரத்தையும் போக்குவதற்கு இது எற்ற ஔஷதமென்று நாட்டென் ஹாம் என்பவர் அபிப்பிராயப்படுகிறார்,—Monthly Cyclopedia.

### சீமை இலந்தை அல்லது ஆபிள்.

அஜீர்ணரோகத்தில் ஆபிள் என்னும் சீமை இலந்தை சிறந்த ஆஹாரமாகும்; ஆனால் அதை இரண்டொரு நாட்கள்மட்டும் உபயோகிக்கலாமேயன்றி, அதையொன்றையே அநேக நாட்கள்வரையில் உணவாக உபயோகப்படுத்துவது சரியல்ல; ஆகிலும் ரொட்டி, வெண்ணெய் இவற்றோடுகூட சாப்பிட்டுவர இது வெகு உயர்ந்த உணவுப்பொருளென்பதில் ஸந்தேஹமில்லை. புதிய ஆபிள்களை நன்றாக மென்றுச் சாப்பிட்டுவந்தால் சரீரத்திற்கு நல்ல ஆரோக்கியத்தை யுண்டுபண்ணும். கடித்து மெல்லுவதற்குப் பல்லில்லாதவர்கள் ஆபிளைச் சமைத்தும் புஜிக்கலாம். அஜீர்ணரோகிகளுக்கு இது உணவாகவும் ஔஷதமாகவும் உபயோகப்படும்:—Good Health.

### புளியாரை.

இது தோட்டங்களிலும் மற்றும் வெளிப்புறங்களிலும் படர்ந்து வளரும் ஒரு கொடி. இதை சிலர் துவையல் அரைத்து உபயோகிப்பது வழக்கம். இது ஒருவாறு புளிப்பாயிருப்பதால், எலுமிச்சம் பழத்திற்கும் புளியம்பழத்திற்கும் பதிலாக இதை உபயோகிப்பதுண்டு. இதன் புஷ்பம் மஞ்சளாகவும் சின்னஞ்சிறியதாகவும் இருக்கும்.

இதன் இலைகளுக்கு சரீரத்தைக் குளிரச் செய்யுங் குணமும், கப்பல் யாத்திரை செய்பவருக்குண்டாகும் ஒருவித இரத்த பித்த ரோகத்தைப் போக்கும் தன்மையும் உண்டென்று வெகு நாட்களாகவே கருதப்பட்டுவருகிறது. குழந்தைகளுக்கு உண்டாகும் சீதபேதியைப் போக்குவதற்கு இது எற்ற ஔஷதச்சரக்காகும். பாலுண்ணி, சர்மத்தின்மேல் உண்டாகும் அவ்விதமான இதர சதை வளர்ச்சிகளையும் போக்க இது நல்ல சரக்கு என்றும் சொல்லப்படுகிறது. மேலுக்கு உபயோகித்தும், ஊமத்தை முதலியவற்றிற்குள்ள விஷத்தன்மையை அடக்க உள்ளுக்கு இதையே முறிவாகவும் உபயோகிக்கலாம்.

---

## NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### வைத்தியர் மிஸ்டர் K. S. துரைஸ்வாமி பண்டிதருக்கு ஓர் பரிசளிப்பு.

கும்பகோணத்தில் இம்மாதம் 20௳ பிரம்மவித்யா லாட்ஜ் மண்டபத்தில் ராவ்பகதூர் V. K. இராமானுஜாசாரியர் அவர்களுடைய அக்கிராஸனத்தின் கீழ் அவ்வூரிலுள்ள அநேகம் கனவான்கள் ஒரு ஸபை கூடி, அங்கு வைத்தியம் செய்வதில் மிகத்திறமைசாலியென்று பெயர் பெற்றுவரும் மிஸ்டர் S. K துரைஸ்வாமி பண்டிதர் அவர்களுக்கு மேற்படியாருடைய ஸாமர்த்தியத்திற்காக ஒரு தங்கப்பதக்கமும் தங்கச் சங்கிலியும் பரிசளிக்கப்பட்டதாக அறிய நாம் ஸந்தோஷப்படுகிறோம்; மிஸ்டர் துரைஸ்வாமி பண்டிதர் அவ்வூரிலுள்ள அநேகம் ப்ரமுகாளுடைய குடும்பக்

களில் சிலருக்கு நேரிட்ட கஷ்டஸாத்தியமான வியாதிகளை வெகு புத்திநுட்பத்துடன் ஸ்வஸ்த்தம் செய்ததைக் கருதி, அக்கனவான்கள் வெளிப்படையாக நமது வைத்தியரிடம் தமது மனப்பூர்வமான ஸந்தோஷத்தையும் நன்றியையும் அறிவித்து இவ்வாறு செய்தது தமிழ் நாட்டிலுள்ள வைத்தியர்கள் மெச்சத்தக்கது. துரைஸ்வாமி பண்டிதர் அவர்கள் சுதேசவைத்தியத்திற்காக அபிமானத்துடன் உழைக்கக்கூடிய தன்மறுப்புள்ள வைத்தியராவர். அந்த ஸமயம் ஸப்ஜட்ஜ் மிஸ்டர் A. S. பால சுப்பிரம்மணிய ஐயர்; ராவ்பஹதூர் N. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஹைகோர்டு வக்கீல், டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் P. S. ஸீதாராமய்யர், தாஸில்தார் மிஸ்டர் A. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பென்ஷன் டிப்டிகலெக்டர் மிஸ்டர் ரங்கஸ்வாமி ஐயங்கார், மிஸ்டர் P. அருளானந்தம்பிள்ளை முதலிய கனவான்கள் பலர் வந்து கூடியிருந்தனர்.

## பஞ்சமர்களுக்கு ஓர் ஆயுர்வேத தர்ம வைத்திய சாலை.

திருப்பத்தூரில் மிஸ்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்கள் பஞ்சமர்களுடைய உதவிக்காக ஓர் ஆயுர்வேத தர்மவைத்தியசாலையை நூதனமாய் ஸ்தாபித்திருப்பதாய் அறிய ஸந்தோஷப்படுகிறோம். இது எவ்விதத்திலும் சிறந்த தர்மமே. பஞ்சமர்களுக்கென்று கிணறுகளும் குளங்களும் வெட்டப்படுவது பெரிய தர்மமென்று நினைத்து அவ்விதம் சிலர் செய்துவருகின்றனர்; அவர்களுக்கு வைத்தியம் செய்வதற்கென்று வைத்தியசாலை ஸ்தாபிப்பது அதினும் மிகச்சிறந்த தர்மமாகும்; ஏனெனில்: அவர்களுக்கு அருகிற்சென்று, அவர்களைப் பரிசித்து வைத்தியம் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்விதம் செய்ய உயர்குலத்தவரான பெரும்பான்மையோருக்கு மனமொப்பாது. மிஸ்டர் நாயுடு அவர்களுக்கு இவ்வித தர்மகாரியம் செய்ய யோசனைதோன்றியது மிகவும் பாராட்டத்தக்கதே. இவர் வெகு நாட்களாகவே பஞ்சமர்களுக்கு இலவசமாக வைத்தியம்செய்து வருவதாகவும், அவர்களுக்கென்று ப்ரத்தியேகமாக இப்பொழுது வைத்தியசாலை ஏற்படுத்தியதாகவும், அதற்காக ஒருகட்டடம் கட்டவேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் அவரவர்களால் இயன்றவளவு அதற்கு உதவிசெய்ய முன்வருவார்களானால் மிகவும் தர்மமாயிருக்குமென்றும் அவர் கேட்டுக்கொள்கிறார். உதவிசெய்ய விரும்புபவர் "வைஸ் ப்ரொவிடெண்ட், கோவாபரேடிவ் அர்பன்பாங்க் லிமிடெட், திருப்பத்தூர்" என்கிற அட்ரஸ்ஸுக்கு பஞ்சமர்களுடைய வைத்தியசாலையின் பெயரால் அனுப்பலாம். தொகை எவ்வளவு சொற்பமாயிருந்தபோதிலும் ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

## மனிதனுடைய பார்வையைப் பசுமையாக்கும் புண்.

இப்பொழுது ஐரோப்பாவில் நடந்துவரும் மஹா யுத்தத்தில் காயப்பட்ட ஒரு ஸோல்ஜருடைய கண்பார்வை ஒருவாறு விசித்திரமாக மாறுதலடைந்தது. அந்த ஸோல்ஜருடைய நெற்றிக்குள் ஒரு குண்டு புகுந்து, அவனைக் கொல்லாமலும், அவனுக்கு வேறு விதமான எந்த ஸங்கடத்தையுமுண்டு பண்ணாமலும் தலையினுள் பாய்ந்து பின்புறமாக வெளிவந்துவிட்டது. ஆனால் அவனுக்கு நேர்ந்த விசேஷமான கெடுதியென்னவென்றால்—"என்னைச் சுற்றிலும் நான் பார்க்கும் எல்லா வஸ்துக்களும் எனக்கு இலைப்பசுமை நிறமாகக் காணப்படுகின்றன" என்று அவன் கூறுவதேயாம். அவன் தங்கியிருந்த ஆஸ்பத்திரிக்கூடாரம் முதலிய எல்லாப்பொருட்களும் பச்சை நிறமாகக் காணப்படுவதென்பதைத் தவிர்த்து அவன் வேறு விதமாய் எந்த கஷ்டத்தையும் அனுபவிப்பதாய் அறியப்படவில்லையென்றும், அவன் மூளை மிகக் குலுங்கி, அதனால் அவனுடைய பார்வையும் இவ்வாறு ஒருவித கோளாறடைந்ததாகவும், மண்டைக்குள் உண்டானபுண்ணால் அவனுடைய திருஷ்டியில் பசுமை நிறம் தவிர மற்ற நிறங்கள் புலப்படாதவாறு ஒருவித மாறுதல் ஸம்பவித்திருக்க வேண்டுமென்றும் டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனராம். வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான விசித்திரங்களுக்கும் அளவுண்டோ.!

## குழந்தைகளின் மரணவிகிதத்தைக் குறைக்க ஒரு ஸங்கம்.

இரங்கூனில் குழந்தைகள் மிதமிஞ்சி மாண்டுபோவதைத் தடுப்பதற்கேற்ற உபாயங்களைக் கையாண்டு ஜனங்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்று, சென்ற வருஷம் ஜூலை மாதத்தில் ஒரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சென்ற 9-மாதங்களாக அது சில வேலைகளைச் செய்து வந்ததில் இப்பொழுது அந்த ஸங்கம் நன்கு நிலைபெற்று, அதற்காகத் திரவ்யமும் சேர்க்கப்பட்டுவருகிறது. தற்காலம் நான்கு தாதிகள் அந்த ஸங்கத்தாரால் பொது ஜனங்களுடைய நன்மைக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தாதிக்கும் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்விதம் செலவு

செய்யப்பட்டு வருகிறது. முனிஸிபாலிடியார் மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் உதவிசெய்து வருகின்றனர். சந்தாத் தொகையும் சேர்ந்து வருகிறது. லோகல் கவர்ன்மெண்டும் சீக்கிரத்தில் தகுந்த ஸஹாயம் செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையிலும் 'லேடி ஆம்ப்தில் நர்ஸிங் இன்ஸ்டிட்யூட்' என்று ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டு ஏதோ காரியம் செய்துவருகிறது. அந்த ஸ்தாபனம் ஏற்கனவே ஸகல ஸௌகர்யங்களுடனும் வாழும் செல்வாக்குள்ள கனவான்களுடைய குடும்பங்களுக்கு உபயோகமாயிருக்கிறதேயன்றி ஸாதாரண ஜனங்களுக்கு ஒருவித ஸஹாயமும் செய்வதாய் அறியப்படவில்லை. பொது ஜனங்களுக்கும் அந்த ஸங்கம் இரங்கூன் ஸங்கத்தைப்போல் ஏன் உதவக்கூடாது?

## வாழைப்பழம் வெகு சிறந்த உணவு.

இந்தியாவின் மேற்கு ஸமுத்திரக் கரைகளில் வருஷந்தோறும் வாழை அதிகமாகப் பயிராக்கப்பட்டு வந்தும், அதன் பழங்கள் உணவு வகைகளுள் உத்தமமானவை யென்பதைமட்டும் அறிந்தவர் வெகு சொற்பம். மிகப் புகழ்பெற்ற ஒரு ஆங்கில வைத்தியர் இக்கனிகளில் இயற்கையில் சேர்ந்துள்ள பௌதிக பதார்த்தங்களைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அவர் இவ்வாறு அபிப்பிராயப்படுகின்றார் : "இப்பழம் நன்றாகப் போஷிக்கும் குணமுடைய வெகு சிறந்த உணவென்று நிச்சயிக்கப்பட்டது. இது மிக எளிதில் ஜீர்ணமாகக் கூடியது; மற்ற உணவுப் பொருட்களைப் பார்க்கினும் வெகு சீக்கிரத்திலும் ஜீர்ணமாய் விடுகிறது.

| | ஜீர்ணமாவதற்கான நேரம் |
|---|---|
| பொரித்த மாட்டிறைச்சி | 3-மணி 20-நிமிஷம் |
| ஸாதாரண ரொட்டி | 2-மணி 30-நிமிஷம் |
| சீமையிலந்தை (ஆபிள்) | 2-மணி 30-நிமிஷம் |
| வாழைப்பழம். | 1-மணி 45 நிமிஷம் |

வாழைக்கனியின்மேல் ஆவரணமாயுள்ள அதன் தோல் மிகவும் கனமாயிருப்பதால் அப்பழத்தில் வெளியிலிருந்து எத்தோஷமும் ஸம்பந்திக்க முடியாது; ஆகவே தோலை நீக்கியவுடனே அதனுள் ஏதாவது மலினமான பதார்த்தங்கள் சேர்ந்திருக்குமென்கிற பயமில்லாமலே அதை வெகு ருசியுடன் புஜிக்கலாம்; கொட்டை கோதுகளும் அதிலில்லாததால் உணவுக்கு எவ்விதத்திலும் ஏற்றது வாழைப்பழமே யென்று நிச்சயிக்கலாம்.

## குழந்தைகளைச் சீரழியாமற் பராமரித்தல்.

பெரும்பாலோர் தமது குழந்தைகளுடைய வீணெண்ணங்களையும் சாபல்யங்களையும் அதிகமாய் அபிமானித்து அளவுமீறி அவற்றைப் பாராட்டுவதால் அவற்றின் தன்மைகளை மிகவும் சீரழியச் செய்கின்றனர்; அக்குழந்தைகள் தன்னடக்கம் பெற்று இதரர்களுக்குப் பாதையுண்டுபண்ணாமல் அமைதியுடனிருக்கப் பழகுவதற்கும் பெற்றோர் தடையுண்டுபண்ணுகின்றனர். ஒரு குழந்தை அழத்தொடங்கினால், அதை அநாவசியகமாக அதிகமாய்ப் பாராட்டுவதால் அக்குழந்தைகளின் குணம் கெட்டுப்போகிறது. குழந்தை அழுதால் அதன் உடம்பை நன்றாகப் பரீக்ஷித்து, ஏதாவது சரீரத்தில் கோளாறு நேரிட்டிருக்கிறதாவென்று கவனித்துப்பாருங்கள்; ஒருவிதமான கோளாறும் ஏற்பட்டிராவிட்டால், அக்குழந்தையை அப்படியே அழும்படி விட்டுவைப்பதே நலம். முதலில் சில நாட்கள் குழந்தை அழும்போது, சும்மாயிருந்தால் அதை ஒருவரும் பாராட்டுவதில்லையென்பதை அறிந்துகொண்டு அதுதானே மறுபடியும் தூங்கிவிடும். அவ்விதமின்றி, குழந்தை அழும்போதெல்லாம் உடனே அதை யெடுத்துத் தாலாட்டி, தொட்டிலாட்டி, வேறுவிளையாட்டுகளையும் காட்டிவருவீர்களானால், அநாவசியகமாக உங்களால் செய்யப்படும் அவ்வித கொஞ்சல் குலாவல்களை அனுபவிக்கவேண்டுமென்று அது எப்பொழுதும் அழுகையையே ஒரு தந்திரமாகக் கொள்ளும். இவ்வாறு துர்வழக்கத்திற்கு உட்பட்ட குழந்தைகள், தம் தாய்களை அடிமைபோல் செய்து, அவர்கள் செய்யவேண்டிய வீட்டு வேலைகளில் பெரும்பான்மையும் கெட்டுப் போவதற்குக் காரணமாகவும் ஆகின்றன. குழந்தையினிடம் அநாவசியகமாக ஏதேனும் ஒருவிஷயத்தில் அபிமானம் வைத்து அதன் வீண்பிடிவாதத்தைப் பாராட்டுவீர்களானால், பிறகு காலளவில் அநேகவிஷயங்களில் அதன் பிடிவாதம் முற்றி மாற்றக்கூடாததாய்விடுமென்பது நிச்சயம். குழந்தைகளை எப்பொழுதும் பிறந்தது முதற்கொண்டே தொட்டிலில் விட்டு ஆட்டாமலும், அருகில் ஒருவரும் இராமலும் நித்திரை செய்யப் பழக்கவேண்டும். தொட்டில் முதலியவை எவ்விதத்திலும் அவசியமானவையல்ல.

தூமபானத்தினால் தொண்டையைச் சுத்திசெய்து முகத்தையும் வியர்க்கப்பண்ணி, அதன்பிறகு அப்பிணியாளியை மல்லாந்துப் படுக்கவைத்து, தலையைப் பின்புறமாகச் சிறிது சாய்க்கச்சொல்லி, கை கால்களையும் நன்றாக நீட்டிக்கொள்ளச் செய்யவேண்டும்; பிறகு வைத்தியன் நோயாளியின் கண்களை வஸ்திரத்தினால் மறைத்துக் கட்டிவிட்டு, மூக்கின் முனையை உயரத்தூக்கி நஸ்யத்தைப் பிரயோகிக்கவேண்டும்; இளஞ்சூடான ஔஷதத்தை பொன் வெள்ளி முதலிய வற்றாலான சிறிது நீண்ட சிப்பியினாலாவது, முத்துச்சிப்பியாலாவது, பஞ்சு முதலியவற்றில் தோய்த்துக்கொண்டாவது, அல்லது வேறுவிதமான யுக்தியினாலாவது ஒரு தடவையிலேயே மூக்குக்குள் தாரைபோல் விட்டுவிடவேண்டும். நஸ்யங்கள் ப்ரயோகிக்கப்படுகையில் தலையைச் சிறிதும் அசைக்கவே கூடாது; அந்த ஸமயத்தில் கோபித்தல், பேசுதல், மூக்கை உறிஞ்சுதல், சிரித்தல் இவைகளும் கூடா; இவற்றைச் செய்தால், மூக்கில் பிரயோகித்த ஸ்நேஹமானது உட்செல்லவே செல்லாது; மேலும் அதனால் இருமல், ப்ரதிச்யாயம், தலைநோய், கண்ணோய் முதலியவைகளும் ஸம்பவிக்கும். தொண்டைக்கு மேற்புறத்திலும் மூக்கின் அடித்வாரத்திலுமுள்ள ச்ருங்காடகம்[1] என்கிற பாகத்தை ஔஷதம் நன்றாகப் பரிசித்து ஈரமாக்குமளவும் அதை அவ்விதமே மூக்கில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்; அதை விழுங்கக்கூடாது; அவரவர்களுடைய சக்திக்கியன்றவாறு ஐந்து மாத்திராகாலமோ[2], ஏழு மாத்திராகாலமோ, அல்லது பத்து மாத்திராகாலமோ நஸ்யௌஷதத்தை நாசியினுள் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்; அப்பால் நாசி, முகம் இவற்றுள் சேர்ந்துள்ள உமிழ்நீர் கபம் முதலிய திரவங்களை உட்கார்ந்துகொண்டு உமிழ்ந்து விடவும்; மூக்கின் வலது புறத்தையும் இடதுபுறத்தையும் மாற்றி மாற்றி அழுத்திப் பிடித்துக்கொண்டு தலையைக் கவிழ்ந்து நன்றாகச் சிந்திவிடுவதும் அவசியம்; ஆனால் தலையை நிமிர்ந்துகொண்டு நாசியைச் சிந்துவது பிசகு. நஸ்யம் நிறைவேற்றியவுடனே மனதுக்கு வருத்தமுண்டாவதையும், இரஜோகுணம் முதலியவற்றின் எழுச்சியால் கோபம் நேரிடுவதையும் விலக்க வேண்டும்; நூறு நிமிஷங்களளவும் நித்திரைபோகாமல் மல்லாந்துப் படுத்துக்கொண்டிருக்கவேண்டும். விரேசனநஸ்யம் செய்தபிறகுகூட இவ்விதம் பண்ணவேண்டியதுடன், தூமபானமாவது, கபளக்ரஹமாவது செய்வது உசிதமாகும். 47—56.

**நஸ்யம் நன்கு ப்ரயோகிப்பதின்மூன்று முக்கியக் குறிகள்.**

முறைப்படி நஸ்யமிடப்படுவதாலுண்டாகும் முக்கியமான குறிகள் மூன்றுண்டென்று சாஸ்திரஞ்ஞர் கூறுவர்; அவை—சுத்தியோகம், ஹீநசுத்தியோகம், அதிசுத்தியோகம் என்பவையாம். (1) மனது இலகுவாயிருப்பதாக உணர்ச்சியுண்டாதல், நாசி, செவி, நேத்திரம், தொண்டை முதலிய அவயவங்களிலுள்ள த்வாரங்கள் சுத்தமாதல், எவ்வியாதியை நிவாரணம் செய்வதற்காக நஸ்யமிடப்பட்டதோ அவ்வியாதி சாந்தமாதல், மனதும் இந்த்ரியங்களும் தெளிவடைதல் என்னும் இவை சிரஸ் சுத்தியானதற்கு அறிகுறிகளாம். (2) கண்டத்திற்கு மேலுள்ள அவயவங்களில் ஒருவிதமான அரிப்பு, அவ்வவயவங்களில் ஏதேனும் கசிவுகளுண்டா

---

1. ச்ருங்காடகம்—மூக்கின் உட்புறத்து த்வாரத்தில் காது, கண், தொண்டை இவற்றின் த்வாரங்களும் (சில சிறிது பெரிதாகவும் ஒன்றிரண்டு பெரிதாகவுமுள்ள த்வாரங்கள்) கூடும் ஓர் இடம்; ஆகையினாலேயே நாற்சந்தியைக் குறிப்பிடுவதான ச்ருங்காடகம் என்கிற பெயர் அவ்விடத்திற்கு ஏற்படுத்தப்பட்டதென்றறிக.

2. மாத்திராகாலம்—இதைப்பற்றி 192-வது பக்கத்தில் விவரம் பார்க்க.

தல், பாரமாயிருப்பதுபோலத் தோற்றுதல், கண் மூக்கு முதலிய இந்த்ரியத்வாரங்களிலிருந்து கபம் அதிகமாகக் கசிதல் என்பவை சிரஸ் வேண்டியவளவு சுத்தியாகாமலிருப்பதை—என்றால் ஹீநசுத்தியை—அறிவிக்கும் குறிகளாகும். (3) உருகிய மூளை போன்ற பதார்த்தம் மூக்கு முதலானதிலிருந்து வெளியில் வருதல், வாயு விருத்தியாதல், இந்த்ரியங்கள் ப்ராந்தியடைதல், சிரஸ் சூனியமாயிருப்பதுபோலத் தோற்றுவது என்னும் இவை சிரஸ் மிதமில்லாமல் சுத்தி செய்யப்பட்டதன் அறிகுறிகளாம். 57—60.

நஸ்யத்தின் மூன்று வித நிலைமைகளிலும் செய்யவேண்டிய உபசாரம்.

சிரஸ்ஸானது வேண்டியவளவு சுத்தமாகாமலிருந்தால் கபஹரமான சிகித்ஸை செய்யப்படவேண்டும்; அதிசுத்தமாயிருந்தால் வாதஹரமான சிகித்ஸை அநுகூலமாயிருக்கும்; நன்கு சுத்தியாயிருந்தால் ஏதேனும் தகுந்த க்ருத ஸம்பந்தமான ஔஷதத்தை நஸ்யமாக உபயோகிப்பது நலம். 61.

நஸ்யத்தில் அதிஸ்நிக்த்தக் குறிகளும் அதன் பரிஹாரமும்.

மிதமிஞ்சி ஸ்நேஹநஸ்யத்தைப் பிரயோகிப்பதால் கபம் அதிகமாகக் கசியும்; சிரோபாரமுண்டாகும்; இந்த்ரியங்கள் விகாரங்கொள்ளும். இவ்வித லக்ஷணங்கள் ஸம்பவித்தால் அப்பொழுது ரூக்ஷணமான நஸ்யத்தை ப்ரயோகிக்கவேண்டும்; சரீரத்திற்கு ஸ்நிக்த்தத் தன்மையுண்டாக்காத ஆஹாரங்களையும் கொடுத்து, நஸ்யத்திற்குப் பிறகு செய்யவேண்டிய இதர உபசாரங்களையும் செய்யவேண்டும். 62½.

பஞ்ச கர்மங்கள்.

இதுவரையிலும் வமனம், விரேசனம், நிரூஹவஸ்தி, அநுவாஸனவஸ்தி, நஸ்யம் என்று சரீரத்தைச் சுத்திசெய்வதற்கேற்ற ஐந்துவிதமான சிகித்ஸாக்ரமங்கள் கூறப்பட்டன; இவ்வைந்தையும் முனீச்வரர்கள் 'பஞ்சக்ரமங்கள்' என்று வழங்கி யிருக்கின்றனர். 63½.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

### (தூமபான விதி)

ஆறுவித தூமங்கள்.

வியாதிகளில் பிரயோகிக்கப்படும் தூமமானது சமனம், ப்ருஹ்மணம், ரேசனம், காஸஹரம், வாமனம், வ்ரணதூபனம் என்று ஆறுவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. சமனமென்னும் தூமத்திற்கு 'மத்யமதூமம்' 'ப்ராயோகிகதூமம்' என்றுவேறிரண்டு பெயர்களுண்டு. அவ்விதமே ப்ருஹ்மணத்திற்கு 'ஸ்நேஹனதூமம்,' என்றும் 'ம்ருதுதூமம்' என்றும் வேறு இரண்டு பெயர்கள் வழங்கப்படும். ரேசனதூமத்திற்கு 'சோதனதூமம்,' 'தீக்ஷ்ணதூமம்' என்று வேறு பெயர்கள் உண்டு. 1—2½.

மிகவும் சோர்ந்துபோனவன், பயந்தவன், மனத்துயரமுறுபவன், அப்பொழுதே வஸ்தி செய்துகொண்டவன், விரேகசிகித்ஸை செய்துகொண்டவன், இரவில் கண்விழித்தவன், நாவறட்சியுள்ளவன், சரீரதாபமுள்ளவன், வாயுலர்ந்து வருந்துபவன், மஹோதரம் முதலிய உதரரோகமுள்ளவன், சிரஸ்ஸில் தாபமதிகரித்தவன், திமிரமென்னும் நேத்திரரோகமுடையவன், வாந்திசெய்பவன், வயிற்றுப்பொருமலால் துன்பப்படுபவன், ஊரகூதமென்னும் வியாதியினால் கஷ்டப்படுபவன், ப்ரமேஹரோகத்தினால் பீடிக்கப்படுபவன், பாண்டுரோகி, கர்ப்பிணி, ரூக்ஷ சரீரமுள்ளவன், தேஹம் மெலிந்தவன், பால்-தேன்-நெய்-ஆஸவம் முதலிய மத்தியவகைகள்-அன்னம்-தயிர்-மத்ஸ்யம் இவற்றை உட்கொண்டவர்கள், சிறுவர்கள், கிழவர் இவர்கள் தூமபானத்திற்கு உரியவராகார். 3—6.

தூமபானத்திற்குத் தகாதவர்கள்.

காலம் தவறியும் அளவு மீறியும் உட்கொள்ளப்படும் தூமத்தினால் அநேகம் தீங்குகள் ஸம்பவிப்பதுண்டு. அவ்விதமான தீங்குகளில் க்ருதபானம்செய்தல், நஸ்யமிடுதல், அஞ்ஜனம் போடுதல்,[1] தர்ப்பணசிகித்ஸை [2] என்னும் இவற்றை உபயோகிக்கவேண்டும்; மேலும் க்ருதம், கருப்பஞ்சாறு, திராக்ஷை, சர்க்கரையைச் சேர்த்து செய்த பானகம், பால் இவற்றில் ஏதேனும் ஒன்றையாவது, அல்லது மதுரரஸமுள்ள பதார்த்தங்களையாவது,புளிப்பான பதார்த்தங்களையாவது அக்கோளாறுகளை சமனம் செய்வதற்காக உபயோகப்படுத்தலாம். 7, 8.

முறை தவறிய தூமபானத்திற்குப் பரிஹாரங்கள்.

தூமபானம் பன்னிரண்டு வயது முதற்கொண்டு உபயோகிக்கக்கூடியது; எண்பது வயதுக்குப் பிறகு அதை உபயோகிக்கக்கூடாது. 8½.

தூம பானத்திற்கேற்ற வயது.

தூமத்தை முறைதவறாமல் ப்ரயோகித்தால் காஸம், ச்வாஸம், ப்ரதிச்யாயம், மந்யாஸ்தம்பம், ஹநுஸ்தம்பம், தலைவலி, வாதரோகங்கள், கபரோகங்கள் இவை நிவ்ருத்தியாகுமென்று பொதுவாகக் கூறப்படுகிறது. மேலும் தூமத்தைத் தகுந்தவாறு ப்ரயோகித்து வரும் புருஷனுக்கு நேத்திரம் முதலிய இந்த்ரியங்களும் மனதும் தெளிவுறும்; வாக்கும் ஸ்பஷ்டமாகும்; தலைமயிர் மீசை பற்கள் இவை திடப்படும்; முகமும் நல்ல மணத்துடன் கூடியதாயிருக்கும். 9-10½.

தூம பானத்தின் பொதுவான உபயோகங்கள்.

தூமபானத்திலுபயோகிக்கக்கூடிய குழாயானது 'தூமநாடீ' என்று சொல்லப்படும். அத்தூமநாடியில் மூன்று கணுக்கள் ஏற்படுத்தி மூன்று பாகங்களாக அதைச் செய்யவேண்டும்; அது ஒரு சுண்டுவிரல் பருமனுடையதாயிருக்கவேண்டும்; அதன் த்வாரத்தை ஒரு கடலை நுழையக்கூடியதாய் அமைக்கவேண்டும். சமனதூமத்திற்கு தூமநாடியானது ரோகியின்

தூமநாடியின் உருவம்.

1. அஞ்ஜனம்—அஞ்ஜனவிதியைப்பற்றி இக்கண்டத்தின் 13-வது அத்தியாயத்தில் பார்க்க.
2. தர்ப்பணம்—இதைப்பற்றி இக்கண்டத்தின் 13-வது அத்தியாத்தில் பார்க்க.

விரல்களைக்கொண்டு நாற்பது அங்குலம் நீளமுடையதாகச் செய்யவேண்டும்; ம்ருதுதூமத்திற்கு முப்பத்திரண்டு அங்குலம் நீளமுடையதாகவும், தீக்ஷ்ணதூமத்திற்கு இருபத்து நான்கு அங்குலமுடையதாகவும், காஸஹரமான தூமத்திற்குப் பதினாறு அங்குலமுள்ளதாகவும், வமனதூமத்திற்குப் பத்து அங்குலம் நீளமாகவும், வ்ரணதூபனத்திற்கும் அவ்வாறே பத்து அங்குலம் நீளமாகவும் செய்யப்படவேண்டும். அதன் பருமன் பெருங்கடலையின் சுற்றளவுக்கு ஸமானமாகவும், அதன் த்வாரம் ஒரு கொள் தாராளமாய்ப் புகுந்து வரக்கூடிய அளவுள்ளதாகவும் இருக்கவேண்டும். 11—14.

தூமவர்த்தியும் அதன் உபயோகங்களும்.

பன்னிரண்டு அங்குலம் நீளமுடையதாகவும் மிகவும் வழுவழுப்புண்டதாகவுமிருக்கும் ஓர் ஈர்க்கையெடுத்து, தூமம் செய்வதற்கான ஔஷதச்சரக்குகளை நன்றாகக் கல்கமாய் அரைத்து, அதில் கால்பலமெடை கல்கத்தை அந்த ஈர்க்கின் மேல் எட்டு அங்குலமளவும் தடவி, நிழலில் அதை உலர்த்தியபிறகு அதனுள் அடங்கியுள்ள ஈர்க்கை மெதுவாகக் கழற்றிவிட்டு, அக்குழாய் போன்ற வர்த்தியை மட்டும் எடுத்துக்கொள்ளவும். பிறகு அந்த வர்த்தியை ஏதேனும் தகுந்த ஸ்நேஹத்தினால் நனைத்து அதன் முனையை அக்னியிற் காட்டிப் பற்றவைத்து, அதன் மற்றொரு முனையை முன்கூறிய நாடியாகும் நேத்திரத்தில் உட்செலுத்தி, அதிலிருந்துவரும் தூமத்தை வாயால் உட்கொள்ளவேண்டும்; உட்கொண்ட தூமத்தை வாயாலேயே வெளியிடவேண்டும். பிறகு நாசிகளால் உட்கொண்டு அதையும் வாயாலேயே வெளிவிடவேண்டியது. 15—17½.

தூமமுபயோகிப்பதற்கேற்ற மற்றொருவித கருவி.

ஓர் அகன்ற அகலில் வ்ரணங்களுக்கு தூபம் போடுவதற்கு உபயோகமான ஔஷதச் சரக்குகளைக் கல்கமாகச் செய்துவைத்து, அதன்மேல் நடுவில் த்வாரத்துடன் கூடிய மற்றொரு அகலைமூடவேண்டும்; ஆனால் இதை மூடுவதற்கு முன் அந்த கல்கத்தின்மேல் நெருப்புத்தணல்களைப் போடவேண்டும். பிறகு அந்த த்வாரத்தில் தூமநாடியின் ஒரு முனையை நுழைத்து அக்குழாயினூடேவரும் புகையைக் கொண்டே வ்ரணங்களுக்கு தூபமிடவேண்டும். 18½.

அந்தந்த தூமத்திற்குத் தகுந்த கல்கத்ரவ்யங்கள்.

சமனதூமத்திற்கு ஸ்நேஹம் கலந்த ஏலாதிகணகல்கமும்[1], ம்ருதுதூமத்திற்கு ஸர்ஜரஸமும், ரேசனதூமத்திற்கு தீக்ஷ்ணகல்கமும், காஸஹரமான தூமத்திற்கு மிளகு, காட்டுத்திப்பிலி இவற்றால் செய்த கல்கமும், வமனதூமத்திற்கு ஸ்நாயு என்னும் ஒருவித வன்மையான தசை[2], சர்மம் முதலியதின் கல்கமும், வ்ரணஹரமான தூபத்திற்கு வேப்பு வசப்பு முதலிய பொருட்களால் செய்த கல்கமும் தகுந்தவையாம். 19—20½.

---

1. ஏலாதிகணம்—ஏலம், சிற்றேலம், குந்துருகமென்னும் பிசின், ஞாழல், ஜடாமாம்ஸி, வெட்டிவேர், தமனம், நாகப்பூ, க்ரந்திபர்ணி யென்னும் தன்றிலெண்ணெய், கருவாப்பட்டை, இலவங்கப்பத்திரி, க்ரந்திதகரம், சாமந்தி, போளம், முத்துச்சிப்பி, புலியுகிரென்னும் வாஸனை வஸ்து, தேவதாரு, அகில், தேவதாரு வின்பிசின், குங்குமப்பூ, கருங்கச்சோலம், குங்கிலியம், ஸர்ஜரஸம், குந்துருகம், சரக்கொன்னை, நாககேஸரம் இவற்றின் சேர்க்கைக்கு ஏலாதிகணம் எனப் பெயர். (வாக்படன்).

2. ஸ்நாயு.—இதைப்பற்றி 21-வது பக்கத்தில் டிப்பணியில் 1-என்று குறிப்பிட்டதைப் பார்க்க.

வீடுகளில் செய்து கோள்ளத் தகுந்த வேறு தூமபான வஸ்துக்கள்.

ரோகங்களை நிவ்ருத்தி செய்வதற்காக வீடுகளில் நிறைவேற்றக்கூடிய தூமத்திரவ்யங்கள் வேறு சில உண்டு. அவையாவன:—மயிலிறகு, வேப்பிலை, கண்டங்கத்திரிக்காய், மிளகு, பெருங்காயம், ஜடாமாம்ஸி, பரித்திக்கொட்டை, ஆட்டு மயிர், பாம்புத்தோல், பூனையின்மலம், யானையின் தந்தம் இவற்றைச் சூர்ணம் செய்து நெய்யிற் கலந்து வீடுகளில் தூபம்போட ஸகல விதமான பாலக்ரஹங்களும் தீரும். பிசாசங்களையும் இராக்ஷஸர்களையும் போக்குவதற்கும் இவ்வித தூபங்கள் ஏற்றவையாம்; இதனால் ஸகல ஜ்வரங்களும் சாந்தமாகும். 21—24.

தூமபானத்தினலான தீங்குகளின் பரிஹார முறை.

தூமபானத்தினல் நேரிடும் தீங்குகளில் ரேசன நஸ்யத்திற்கு உபயோகிக்கும் பரிஹார முறைகளையே உபயோகிக்க வேண்டும். 24½.

தூம நாடிக்கேற்ற வஸ்துக்கள்.

தூமபானத்திற்கான நாடிகள் அல்லது நேத்திரங்களைச் செய்வதற்குப் பலவிதமான லோஹங்களையும் சவுட்டுக்கோரை அல்லது மூங்கில் முதலிய வற்றையும் உபயோகிக்கலாம். 25.

---

## பத்தாவது அத்தியாயம்.

(கண்டூஷ விதி [1].)

நான்குவித கண்டூஷங்கள்.

ஸ்நேஹந கண்டூஷம், சமந கண்டூஷம், சோதநகண்டூஷம், ரோபணகண்டூஷம் என்று கண்டூஷவிதி நான்கு வகைப்படும். கபளக்ரஹமும் ஸ்நேஹநம் முதலான நான்குவித பேதங்களுடையதாம் 1.

நான்குவித கண்டூஷங்களுக்கான வஸ்துக்களும் வியாதிகளும்.

வாதரோகங்களில் ஸ்நிக்த்தமும் உஷ்ணமுமான திரவியங்களால் ஸ்நேஹநகண்டூஷமும், பித்தரோகங்களில் மதுரமும் சீதளமுமான வஸ்துக்களைக் கொண்டு சமநம் அல்லது ப்ரஸாதநம் என்கிற கண்டூஷமும், கபரோகங்களில் காரம் புளிப்பு உப்பு இவ்வித சுவையுடன் கூடியவையும் உஷ்ணவீர்யமுமுள்ள பதார்த்தங்களால் சோதநகண்டூஷமும், விரணங்களில் துவர்ப்பு கசப்பு மதுரம் இச்சுவையுள்ள வஸ்துக்களால் இளஞ்சூடாக ரோபண கண்டூஷமும் செய்யவேண்டும். 2½.

---

1. கண்டூஷம்—ரோகபரிஹாரத்திற்கான ஏதாவது திரவவஸ்துவை வாயில் வைத்துக்கொண்டு கொப்புளிக்க உபயோகிக்கும் ஔஷதமுறை.

நான்குவிதமான கண்டூஷங்கள் கூறப்பட்டன; கபளக்ரஹங்களும் முற்கூறியவாறு நான்குவிதமாகச் செய்யக்கூடியவையாம். வாய் நிரம்பவும் அசைக்க முடியாமல் ஏதேனும் திரவவஸ்துவைச் சேர்த்து செய்யப்படும் முறை 'கண்டூஷம்' என்றும், அசைவதாயிருந்தால் அதுவே 'கபளம்' என்றும் வழங்கப்படும்; ஆனால் கண்டூஷம் திரவவஸ்துக்களாலும், கபளக்ரஹம் கல்கத்தினாலும் செய்ய வேண்டியவை. மேலும் கண்டூஷமாக உபயோகிக்கப்படும் திரவவஸ்துக்களில் கோலப்ரமாணம் சூர்ணமும், கபளக்ரஹத்தில் கர்ஷப்ரமாணம் கல்கவஸ்துவும் சேர்க்கவேண்டும். 3—5.

கண்டூஷ கபளங்களின் பேதம்.

கண்டூஷம், கபளம் முதலியவை ஐந்தாவது வயது முதற்கொண்டு செய்யக்கூடியவையாம். நெற்றிக்கட்டு, தொண்டை முதலியவற்றிற்கு ஸ்வேதநம் செய்துகொண்டு, ஆஸனத்தில் நன்றாக உட்கார்ந்தவாறு கண்டூஷம் செய்துகொள்ள வேண்டும். வாத வியாதிகளில் மூன்று முறையும், பித்தவியாதிகளில் ஐந்து முறையும், கபவியாதிகளில் ஏழுமுறையும் கண்டூஷம் செய்ய வேண்டும். மேலும் எப்பொழுது வாயில் கபம் நிரம்பவும் சுரந்துவிடுகின்றதோ, தோஷமாவது சிதைவுற்று ஸௌக்கியமுண்டானதாகத் தோற்றுகின்றதோ, நேத்திரத்திலிருந்தும் நாசியிலிருந்தும் கபம் முதலியது கசிந்து வெளிவருகின்றதோ அதுவரையில் கண்டூஷத்திரவத்தைக் கொப்புளித்துவிடாமல் வாயில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். கண்டூஷத்தைப் பிரயோகிப்பதற்கு இவை பொதுவான விதிகளாகும். 6—7½.

கண்டூஷம் செய்யுமுறை முதலியது.

எள்ளுப் பிண்ணாக்கைக் கரைத்த ஜலம், பால், ஏதேனும் ஸ்நேஹவகை இவற்றுள் ஏதாவது ஒன்று ஸ்நேஹநகண்டூஷம் செய்வதற்கு ஏற்ற வஸ்துக்களாம். எள், கருநெய்தல், நெய், சர்க்கரை, பால் இவற்றில் ஏதாவது ஒன்றை ஸம அளவான தேனோடுகலந்து கண்டூஷமாக உபயோகித்தால் வாயினுள் உண்டான எரித்தல் நிவ்ருத்தியாகும். தேனை மாத்திரம் கண்டூஷமாக உபயோகித்தால் முகம் நிர்மலமாகும்; வாயிலுண்டான விரணங்கள் ஆறிவிடும்; எரித்தலும் நாவறட்சியும் நீங்கும். விஷ ஸம்பந்தத்தினாலுண்டாகும் தோஷங்களிலும், க்ஷாரம் அக்னி இவற்றின் ஸம்பந்தத்தினாலுண்டான அழற்சிகளிலும் நெய்யையாவது பாலையாவது கண்டூஷமாக உபயோகிக்கலாம். பற்கள் பலஹீனமடைந்து ஆட்டங்கொள்ளுமானால் அதில் தைலம், இந்துப்பு இவற்றைக் கலந்து கண்டூஷம் செய்வது நலம். நாவறட்சி, அரோசகம் இவற்றில் காஞ்ஜிகமென்னும் காடியை கண்டூஷம் செய்தால் அவை சாந்தமாகும். கபம் ப்ரகோபித்திருந்தால் இந்துப்பு, த்ரிகடுகம், வெண்கடுகு, இஞ்சி இவற்றைச் சேர்த்து கண்டூஷம் செய்யலாம். கபம் ப்ரகோபித்திருக்கையிலும், இரத்த பித்த ரோகத்திலும் த்ரிபலை, தேன் இவை சேர்ந்த கண்டூஷம் சிறந்த குணம் தரும். மரமஞ்சள், சீந்தில், த்ரிபலை, திராக்ஷை, ஜாதிபத்திரி, பூனைக்காலி இவற்றை க்வாதம் செய்து ஆறியபிறகு, அதில் ஆறில் ஒரு பங்கு தேனையும் கலந்து கண்டூஷமாக உபயோகித்தால் வாதபித்த கபங்களால் உண்டாகிற வாய்ப்புண் நிவ்ருத்தியாகும். 8—14.

சில வியாதிகளுக்கேற்ற கண்டூஷங்கள்

ப்ரதிஸாரண கண்டூஷங்கள்.

எந்த ஔஷதங்களைக்கொண்டு கண்டூஷம் செய்யப்படுகின்றதோ அதே ஔஷதங்களால் 'ப்ரதிஸாரணம்'[1] செய்யலாம். கபளக்ரஹமும் அவ்வித ஔஷதங்களாலேயே செய்யக்கூடியதாம். 15.

மாதுலுங்காதி கபளக்ரஹம்.

கொடி மாதளையின் சோறு, இந்துப்பு, மிளகு இவற்றைச் சேர்த்து கபளக்ரஹம் செய்ய, உணர்ச்சியின்மை, கபவாதங்களாலுண்டாகும் அரோசகம் இவை நீங்கும். 16.

ப்ரதிஸாரணம் மூன்று விதம்.

கல்கம், லேஹ்யம், சூர்ணம் என்று ப்ரதிஸாரணம் மூன்று வகைப்படும், முகத்திலுண்டாகும் விரணங்களைப் போக்குவதற்கே ப்ரதிஸ்ாரணத்திற்கான ஔஷதங்களை விரல்முனையில் எடுத்து முகத்தினுள் அந்தந்த வியாதிகளுக்கேற்றவாறு தடவவேண்டும்.17.

குஷ்டாதி ப்ரதிஸாரணம்.

கோஷ்டம், மர மஞ்சள், மஞ்ஜிஷ்டி, வட்டத்திருப்பி, கடுகரோஹிணீ, சதகுப்பி, பெருங்குரும்பை, கோரைக்கிழங்கு, வெள்ளிலோத்தி இவற்றைச் சூர்ணம் செய்து ப்ரதிஸாரணம் செய்தால் வாயினுள் உண்டாகும் இரத்தப் பெருக்கு, பல்வலி, வீக்கம், எரித்தல் முதலியவை நிவ்ருத்தியாகும். 18½.

கண்டூஷத்தின் மூன்று யோகங்கள்.

கண்டூஷத்தை வேண்டியவளவு செய்யாமல்விட்டுவிட்டால் அது ஹீநயோகம் எனப்படும்; ஹீநயோகத்தினால் கபம் அதிகமாகச் சுரத்தல், சுவையறிய முடியாமற் போதல், அரோசகம் இக்கோளாறுகள் உண்டாகும். அளவு மீறி செய்யப்படுமானால் அது அதியோகம் என்று சொல்லப்படும்; அதனால் வாயில் புண்களும், நாவறட்சியும், தாஹமும், சோர்வும் ஸம்பவிக்கும். கண்டூஷத்தினால் தோஷங்கள் நன்றாக வெளிப்பட்டு ஆரோக்கியமுண்டானால் அது ஸம்யக்யோகம் எனப்படும்;[2] அப்பொழுது வியாதி நிவ்ருத்தியாதல், மனதில் ஒருவாறு திருப்தியுண்டாதல், முகம் நிர்மலமாவதுடன் தனது காரியங்களை எளிதில் செய்வதற்கேற்ற வல்லமையைப் பெறுதல்[3], இந்த்ரியங்களெல்லாம் தெளிவுறுதல் என்னும் இவை ஏற்ற இலக்ஷணங்களாகும். 19—20½.

---

1. ப்ரதிஸாரணம்—வாயினுட்புறத்தில் முக்கியமாய் தொண்டையினுள் கபம் அதிகரித்துண்டாகும் வீக்கம் அல்லது விரணம் முதலியவற்றைப் போக்குவதற்குப் பூசப்படும் ஔஷதம்.

2. ஹீநயோகம், அதியோகம், ஸம்யக்யோகம் என்னும் விஷயம் கண்டூஷவிதியில் மட்டுமல்ல, மற்றும் எல்லாவித சிகித்ஸாக்ரமங்களிலும் ஔஷதப் பிரயோகங்களில் உண்டு.

3. முகத்தில் கபம் அதிகரித்து விரணங்களோ வீக்கமோ உண்டாயிருந்தால் வாயை அசைப்பதற்கும், உணவுகளை மெல்லுவதற்கும் முடியாதல்லவா? கண்டூஷத்தை நன்கு நிறைவேற்றியபிறகு அவ்வித கஷ்டம் நிவாரணமாவதால், முகம் தனது வேலையை நன்கு நிறைவேற்ற வல்லதாகிறதென்று கூறப்பட்டதென்க.

## பதிஞேருவது அத்தியாயம்.

(லேபநாதி விதி)

—:—

லேபகத்தையே[1] லேபம் என்றும், ஆலேபநம் என்றும் கூறுவர். அதில் முகத்தில் பூசப்படுவது 'முகலேபம்' என்று சொல்லப்படும்; முகலேபமானது தோஷஹரம், விஷஹரம், வர்ண்யம் என்று மூன்று வகைப்படும். அந்த லேபநத்தை அரை அங்குலம் கனமுள்ளதாகவும், அதில் மூன்றிலொரு பங்கு கனமுள்ளதாகவும், அல்லது அதில் நான்கில் ஒரு பங்கு கனமுள்ளதாகவும் முகத்திற் பூசவேண்டும். முகலேபநம் ஈரமாக இருக்கும் வரையிலும் அது வியாதிகளை அகற்றும்; உலர்ந்துவிட்டால் முகத்தின் பொலிவைப் போக்கிவிடும் 1, 2.

லேபநமும் மூன்று வித முகலேபநமும்

வெள்ளைச்சாறடை, மரமஞ்சள், சக்கு, வெண்கடுகு, முருங்கப்பட்டை இவற்றைக் காடிவிட்டு அரைத்து லேபநம் செய்தால் ஸகலசோதைகளும் தீரும். 3.

புநர் நவாதி லேபம்.

தான்றிக்காயின் விதையை அரைத்து லேபநமாக உபயோகித்தால், முகத்திலுண்டான அழற்சி, வேதனை முதலியவை நிவ்ருத்தியாகும். 3½.

விபீத பலமஜ்ஜா லேபம்.

காட்டு வாகைப்பூ, அதிமதுரம், கிரந்திதகரம், இரத்த சந்தனம், ஏலக்காய், ஜடாமாம்ஸி, மஞ்சள், மரமஞ்சள், கோஷ்டம், வெட்டிவேர் இப்பத்துச் சரக்குகளின் சேர்க்கைக்கு 'தசாங்கம்' எனப் பெயர்; இவற்றை வெகு நுண்மையாகப் பொடி செய்து ஐந்தில் ஒரு பங்கு நெய் கலந்து ஜலமும் சேர்த்து லேபமாகச் செய்யலாம். இதனுல் விஸர்ப்பங்கள், விஷஸம்பந்தமான கொப்புளங்கள், வீக்கங்கள், மற்றும் கெட்டுப்போன புண்கள் இவை ஸ்வஸ்த்தமாகும். 4—6.

தசாங்க லேபம்.

எள், ஆட்டுப்பால் இரண்டையும் அரைத்து, அத்துடன் வெண்ணெயையும் கலந்து லேபமாக உபயோகித்தால் சொரங்கொட்டைப் பாலாலுண்டான வீக்கங்கள் தீரும்; அல்லது கருத்தமண், எள் இவற்றை அரைத்து வெண்ணெயைக் கலந்தும் இவ்வீக்கத்தின்மேலுபயோகிக்க நற்குணமுண்டாகும். 7.

திலாதி லேபம்.

தேங்காய், அதிவிடயம், சுரைவேர், புடலம்வேர், கொடிமாதுளை இவற்றை நன்றுகக் காஞ்ஜிகம் சேர்த்து அரைத்து லேபமாகப் பூசினுல் பூச்சிக்கடிகளாலுண்டாகும் கொப்புளங்கள் சாந்தமாகும். 8.

லாங்கல்யாதி லேபம்.

இரத்த சந்தனம், மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்தி, கோஷ்டம், ஞாழல், ஆலமரமொட்டுகள், சிறுகடலை இவற்றை லேபமாகச் செய்து உபயோகித்தால் வ்யங்கமென்னும் வங்கு குணமாவதுடன் முகத்திற்கு ஒருவித காந்தியும் உண்டாகும். 9.

ரக்த சந்தநாதி லேபம்.

1. லேபகம்—தடவுவதற்கு ஏற்ற 'பூச்சுகள்' என்னும் ஔஷதம்.

கொடிமாதுளையின் வேர், மனச்சிலை, நெய், சாணிப்பால் இவற்றை லேபம் செய்து உபயோகிக்க வ்யங்கம், கட்டிகள், காலமென்னும் கறுப்பான், மற்றும் சர்மவிபாதி இவை திருவதுடன் முககாந்தியும் உண்டாகும். 10.

மாதுலுங்கமூலாதி லேபம்.

வெள்ளிலோத்தி, கொத்துமல்லிவிதை, வசம்பு இவற்றின் லேபத்தினால் யுவாந பிடகா என்கிற யௌவனப் பருவத்துப் பருக்கள் போய்விடும். அவ்விதமே மிளகையும் கோரோசனையையும் சேர்த்து முகப்பருக்களில் லேபமாக உபயோகிக்கலாம். 11.

லோத்ராதி லேபம்.

வெண்கடுகு, வசம்பு, வெள்ளிலோத்தி, இந்துப்பு இவற்றையாவது, மருதம்பட்டையைத் தேனில் இழைத்தாவது, மஞ்ஜிஷ்டையைத் தேனில் இழைத்தாவது வ்யங்கங்களில் லேபமாக உபயோகிக்கலாம். வெள்ளைக்குதிரையின் குளம்பை எரித்து அக் கரியை வெண்ணெயிற் கலந்தும் வ்யங்கங்களில் உபயோகிக்கலாம். 12½.

ஸித்தார்த்தகாதி லேபம்.

மஞ்சளைப் பொடிசெய்து எருக்கம்பாலோடு கலந்து லேபநம் செய்வதால், முகத்தில் வெகு நாட்களாயுண்டாயிருக்கும் கருநிறம் நிச்சயமாய் நிவ்ருத்தியாகும். 13½.

அர்க்கக்ஷீராதி லேப.

பழுத்த ஆலிலை, குருக்கத்திப்பூ, இரத்தசந்தனம், கோஷ்டம், மரமஞ்சள், வெள்ளிலோத்தி இவற்றை லேபமாகச் செய்து உபயோகிக்க யுவாநடபிகா, வ்யங்கம், நீலிகா என்னும் ஒருவிதமான பரு இவை தீரும். 14, 15.

வடபத்ராதி லேபம்.

பழைய எள்ளுப்பிண்ணாக்கு, கோழியின் மலம் இவ்விரண்டையும் பசுவின் மூத்திரத்தில் அரைத்து, லேபமாக உபயோகிக்க சிரஸ்ஸிலுண்டாகும் அரும்ஷிகா என்கிற விரணங்கள் நீங்கும். 16.

பிண்யாகாதி லேபம்.

கருங்காலிப்பட்டை, வேப்பம்பட்டை, நாவல்பட்டை இவற்றைப் பசுமூத்திரத்தினால் அரைத்து, அல்லது குடமல்லிகைப் பட்டை, இந்துப்பு இவ்விரண்டையும் சேர்த்து அரைத்து லேபமாக உபயோகித்தால் அரும்ஷிகா என்கிற விரணங்கள் சாந்தமாகும். 17.

கதிராதி லேபம்.

முறளம் விதை, அதிமதுரம், கோஷ்டம், உளுந்து, இந்துப்பு, தேன் இவற்றின் லேபத்தை கபாலத்தின்மேல் சர்மம் வெடித்துப் போகும்போது உபயோகிக்கலாம். 18.

ப்ரியாள பீஜாதி லேபம்.

கசகசாவிதையைப் பால் சேர்த்து அரைத்து லேபமாகப் பூசினால் கபாலசர்மத்தின் வெடிப்பு குணமாகும். அல்லது மாங்கொட்டையின் உட்பருப்பையும் கடுக்காயையும் ஸமபாகமாகச் சூர்ணம் செய்து பாலில் கலந்து லேபமாக உபயோகித்தாலும் மிகக் குரூரமான வெடிப்பு நிவ்ருத்தியாகும். 19½.

காகஸலேபமும் ஆம்ரபீஜாதி லேபமும்.

திக்தபடோலரஸ லேபம். பேய்ப்புடலிலைச் சாற்றை சிரஸ்ஸில் லேபமாக உபயோகித்துவந்தால் இந்த்ரலுப்தம் என்கிற தலைமயிர் உதிர்தல் மூன்று தினங்களில் நிவ்ருத்தியாய்விடும். 20½.

ப்ருஹதீரஸாதி லேபம் முதலியன. கண்டங்கத்திரியின் சாற்றையும் தேனையும் கலந்து சிரஸ்ஸில் பூசுவதாலும், குன்று மணியின் வேர் அல்லது காயையாவது சேராங்கொட்டையின் சாற்றோடு கலந்து லேபநம் செய்வதாலும் மயிர் உதிர்தல் நின்றுவிடும். 21½.

கோக்ஷுராதி லேபம். நெரிஞ்சல், எள்ளுப்பூ, இவற்றை ஸமபெடையான தேன் நெய் இவ்விரண்டோடும் கலந்து சிரஸ்ஸில் லேபநம் செய்துவந்தால் தலைமயிர் வெகு நன்றாக வளரும். 22½.

கஜதந்தமஷீலேபம். யானையின் தந்தத்தை எரித்து மையாகச் செய்து அத்துடன் இரஸாஞ்ஜனம்,[1] ஆட்டுப்பால் இவற்றையும் சேர்த்துக் குழைத்து லேபநம் செய்ய உள்ளங்கை முதலானவிடங்களிலும் மயிர்கள் முளைக்கக்கூடும்.[2] 23½.

யஷ்ட்யாதி லேபம். அதிமதுரம், நெய்தல், திராக்ஷை, எண்ணெய், நெய், பால் இவற்றை ஒருமிக்க அரைத்தெடுத்து சிரஸ்ஸில் தடவிவர மயிருதிர்தல் நின்றுபோய் அவை செழிப்பாகவும் திடமாகவும் வளர ஆரம்பிக்கும். 24½.

ரோமஸஞ்ஜநந லேபம். நாற்கால் ஜந்துக்களுடைய[3] சர்மம், உரோமம், நகம், கொம்பு, எலும்பு இவற்றை எரித்து பஸ்மம் செய்து, அந்த பஸ்மத்தை எண்ணெயிற் கலந்து பூசிவந்தால் தலைமயிர் நன்றாக வளரும். 25½.

இந்த்ரவாருணீ தைல லேபம். பேய்த்தும்மட்டி விதையின்[4] எண்ணெயை சிரஸ்ஸில் தினந்தோறும் தேய்த்துக்கொண்டுவந்தால், தலைமயிர் வண்டுபோல் வெகு நன்றாக வளரும். 26½.

அயோரஜஸ்காதி லேபம். இரும்புத்தூள், கரிசலாங்கண்ணி, த்ரிபலை, கறுத்தமண் இவற்றை ஒருமாதகாலம் கருப்பஞ்சாற்றில் ஊறவைத்து, அதை லேபமாக சிரஸ்ஸில் தேய்த்துவந்தால் நரைத்த மயிர்கள் கறுநிறங் கொள்ளும். 27½.

---

1. இரஸாஞ்ஜனம்—116-வது பக்கம் பார்க்க.

2. உதிர்ந்துபோன விடங்களில் வெகு நன்றாக மயிர் வளருமென்பதைக் குறிப்பிடுவதற்காக உள்ளங்கையிலும் மயிர் முளைக்குமென்று கூறப்பட்டதென்க.

3. நாற்கால் ஜந்துக்கள் என்பதால் மஹாம்ருகங்கள் குறிக்கப்படுகின்றன; அவை: பன்றி, எருமை, தலை கவிழ்ந்தோடும் ஆண்மான், கறுப்புச்சாரலுள்ள கலைமான், ரோஹிதமென்னும் மான், யானை, சவரிமான், பெரிய சவரிமான், கட்கமிருகம், பசுபோன்ற மான் இவையாம்.

4. இதைக் காட்டுவெள்ளரியென்று சிலர்.

**தாத்ரீபலாதி லேபம்.** நெல்லிக்கனி மூன்று, கடுக்காய் இரண்டு, தான்றிக்காய் ஒன்று, மாம்பருப்பு ஐந்து, இரும்புத்தூள் ஒரு கர்ஷப்பிரமாணம் இவ்வனைத்தையும் ஒரு இரும்புப் பாத்திரத்தில் சேர்த்துப் பிசைந்து இரவில் அவ்விதமே பனியில் வைத்திருக்கவேண்டும். இந்த லேபநம் அகாலத்தில் உண்டாகும் அதிக நரைத்தலையும் சிக்கிரம் போக்கும். 28—29½.

**த்ரிபலாதி லேபம்.** த்ரிபலை, அவிரியிலை, அயம், கரிசிலாங்கண்ணி இவற்றை ஸமபாகமாகச் சேர்த்துப் பொடி செய்து, செம்மறியாட்டின் மூத்திரத்தினால் அரைத்து லேபம் செய்து உபயோகித்தால் தலைமயிர்கள் நன்றாகக் கறுநிறம் கொள்ளும். 30½.

**மஹாத்ரிபலாதி லேபம்.** த்ரிபலை, இரும்புத்தூள், மாதளம்பட்டை, தாமரைக்கிழங்கு இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே ஐந்து பலம் எடுத்து ஒருமிக்க நன்றாகச் சூர்ணம்செய்து, பதினாறு ப்ரஸ்த்தம் கரிசலாங்கண்ணிச் சாற்றில் கலந்து ஓர் இரும்புப் பாத்திரத்தில் அனைத்தையும் சேர்த்து பூமிக்குள் ஒரு மாதகாலம் அடக்கம் செய்து வைத்திருக்கவேண்டும்; பிறகு அதை யெடுத்து வெள்ளாட்டுப்பால் சேர்த்துக் குழைத்து, அதை ஒரு கூர்ச்சத்தில் எடுத்து சிரஸ்ஸில் இராத்திரியில் தடவி, ஆமணக்கிலைகளால் தலைமயிர்களைச் சுற்றிக்கொண்டு படுக்கவும்; பிறகு காலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிடவும். இவ்வாறு மூன்று முறை லேபநம் செய்தால் நரைத்தல் நிச்சயமாக நிவ்ருத்தியாகும். 31—34½.

**சங்கசூர்ணாதி லேபம்.** சங்கசூர்ணம் இரண்டு பாகம், தாளகம் ஒரு பாகம், மனச்சிலை அரை பாகம், ஸர்ஜக்ஷாரம் ஒரு பாகம் இவற்றை ஜலம் சேர்த்து அரைத்து, தலைமயிர்களை யெடுத்துவிட்டு அதைத் தடவிவந்தால் ஏழு வேளைகளில் க்ஷபணக ஸந்நியாஸியின்[1] சிரஸ்ஸைப்போல் தலையிலுள்ள மயிர்கள் யாவும் உதிர்ந்து விடும். 35—37.

**தாளகாதி லேபம்.** தாளகம் இரண்டு சாணமெடை, சங்கசூர்ணம் ஆறு சாணமெடை, பலாசக்ஷாரம் இரண்டு சாணமெடை இவற்றைச் சேர்த்து வாழைத்தண்டின் சாற்றாலாவது, எருக்கிலையின் சாற்றாலாவது ஆட்டி சிரஸ்ஸில் மயிர்களைச் சிரைத்துவிட்டு ஏழு முறை லேபநம் செய்துவந்தால் மயிர்கள் முற்றிலும் உதிர்ந்துவிடும். 38, 39.

**ஸ்வர்ண புஷ்ப்யாதி லேபம்.** பொன்னூமத்தை விதை, அன்னபேதி, வாய்விடங்கம், மனச்சிலை, கோரோசனை, இந்துப்பு இவற்றை அரைத்து லேபம் செய்துவந்தால் ச்வித்ரமென்னும் வெண்குஷ்டம் தீரும். 40.

1. க்ஷபணக ஸந்நியாஸிகள்—ஜைனஸந்நியாஸிகள். [அந்த ஸந்நியாஸிகள் தலைமயிரை வேருடன் பிடுங்கி தலையை வழுக்கையாக வைத்திருப்பது வழக்கம்.]

180

**வாயஸ்யாதி லேபம்.**

மணத்தக்காளி, தகரவிதை, கோஷ்டம், திப்பிலி இவற்றை அரைத்து உருட்டியெடுத்து, ஆட்டு மூத்திரத்தில் இழைத்துத் தடவிவந்தால் வெண்குஷ்டம் நிவாரணமாகும். 41.

**இரண்டாவது தாளகாதி லேபம்.**

தாளகம் ஒரு சாணப்பிரமாணம், வாலுளுவை நான்கு சாணமெடை இவ்விரண்டையும் சூர்ணம் செய்து, பசு மூத்திரத்தில் அரைத்துத் தடவ வெண்குஷ்டம் நிவ்ருத்தியாகும். 42.

**வாகுச்சியாதி லேபம்.**

வாலுளுவை, நீர்வஞ்சி, அரக்கு, பேயகத்தி, திப்பிலி, இரஸாஞ்ஜநம், இரும்புத்தூள், எள் இவற்றை ஸமபாகமாயெடுத்து சூர்ணம் செய்து, பசுக்களின் பித்த நீரைச் சேர்த்து அரைத்து உருட்டி வைத்துக்கொண்டு உடம்பில் தடவிவந்தால் சீக்கிரத்தில் வெண்குஷ்டம் போய்விடும். 43,44.

**இரண்டாவது தாத்ரியாதி லேபம்.**

நெல்லிக்கனி, மட்டிப்பால், யவக்ஷாரம் இவற்றைச் சூர்ணம்செய்து, ஏதேனும் காடியைவிட்டு அரைத்து, லேபமாக உபயோகித்தால் ஸித்மமென்னும் தேமல் நீங்கும். 45.

**தார்வ்யாதி லேபம்.**

மரமஞ்சள், முள்ளங்கிவிதை, தாளகம், தேவதாரு, வெற்றிலை இவை ஒவ்வொன்றும் தனித்தனியே கர்ஷப்பிரமாணம், சங்குப்பொடி ஒரு சாணமெடை இவற்றை ஒன்றாகச் சேர்த்து ஜலம்விட்டு அரைத்து லேபம் செய்யவும். இதனால் எவ்விதமான ஸித்மம் என்கிற தேமலும் தீரும். 46, 47.

**ஹரீதக்யாதி லேபம்.**

கடுக்காய், இந்துப்பு, காவிக்கல், இரஸாஞ்ஜனம், கறுப்புப்பு இவற்றை ஜலத்தினால் அரைத்து லேபமாகச் செய்து உபயோகிக்க ஸகல நேத்திரரோகங்களும் நிவாரணமாகும். 48.

**இரஸாஞ்ஜனாதி குடிகா லேபம்.**

இரஸாஞ்ஜனம், த்ரிகடு இவற்றை அரைத்து குளிகையாக உருட்டி வைத்துக்கொண்டு நேத்திரங்களுக்குப் போட்டுவந்தால் அவ்வௌஷதம் எரித்தலோடும் தினவோடும்கூடிய அஞ்ஜநநாமிகா[1] என்கிற வியாதியைப் போக்கும். 49.

**ப்ரபுந்நாட பீஜாதி லேபம்.**

தகரவிதை, வாலுளுவை, கடுகு, எள், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு இவற்றைச் சூர்ணம்செய்து மோர்விட்டரைத்துப் பூசுவதால் தத்ரு என்னும் படர்தாமரை, சொரி, விசர்ச்சிகா என்னும் சர்மவியாதி[2] இவை நீங்கும். 50½.

**ஹேமக்ஷீர்யாதி லேபம்.**

க்ஷைநீறு, வாய்விடங்கம், லிங்கம், கந்தகம், தகரவிதை, கோஷ்டம், விந்தூரம் இவற்றை ஒருமிக்கச் சேர்த்து சூர்ணம்செய்து, ஊமத்தையிலைச் சாற்றிலும், வேப்பிலைச் சாற்றிலும், வெற்றிலைச் சாற்றிலும் தனித்தனியே அதை ஆட்டி லேபநமாக உபயோகிக்கலாம். இதனால் சிரங்கு, தத்ரு

1. அஞ்ஜநநாமிகா—53-வது பக்கம் மூலமும், 54-வது பக்கம் டிப்பணியையும் பார்க்க.
2. விசர்சிகா—44-வது பக்சம் மூலமும் டிப்பணியும் பார்க்க.

என்னும் படர்தாமரை, விசர்ச்சிகா, சொறி, ரகஸமென்னும் சர்மரோகம்[1] இவை சீக்கிரம் ஸ்வஸ்த்தமாகும். 51—53.

**தூர்வாதி லேபம்.**

அறுகம்புல், கடுக்காய், இந்துப்பு, தகரவிதை, கருங்கஞ்சாங்கோரை இவற்றை மோர் சேர்த்து அரைத்து லேபகம் செய்தால் சொறியும், படர்தாமரையும் தீரும். அல்லது அறுகம்புல்லையும் மஞ்சளையும் சேர்த்தரைத்துத் தடவிவந்தால் சொறி, சிரங்கு, கிருமிரோகம், படர்தாமரை, சீதபித்தம்[2] இவை நிவ்ருத்தியாகும். 54, 55.

**ஸித்தார்த்தகாதி லேபம்.**

வெண்கடுகு, மஞ்சள், கோஷ்டம், தகரவிதை, எள் இவற்றைக் கடுகெண்ணெயினால் ஆட்டி லேபமாக உபயோகித்து வருவதால் படர்தாமரை நீங்கிவிடும். 56.

**ராஸ்நாதி லேபம்.**

சிற்றரத்தை, கருநெய்தல், தேவதாரு, வெண்சந்தனம், அதிமதுரம், சிற்றுமுட்டி இவற்றைப் பொடித்து நெய்யையும் பாலையும் சேர்த்து லேபமாகச் செய்து உபயோகிக்க வாததோஷத்தினா லுண்டாகும் விஸர்ப்பம்[3] தீரும். 57.

**ம்ருணாளாதி லேபம்.**

தாமரைத்தண்டு, சந்தனம், வெள்ளிலோத்தி, வெட்டிவேர், தாமரைப்பூ, நெய்தல், நன்னாரி, நெல்லிக்காய், கடுக்காய் இவற்றின் லேபம் பித்த விஸர்பத்தைப் போக்கும். 58.

**மூன்றும் த்ரிபலாதி லேபம்.**

த்ரிபலை, தாமரைக்கிழங்கு, வெட்டிவேர், வாள்ச்சுண்டி, அலரி, கொறுக்கைவேர், அறுகம்புல் இவற்றை அரைத்து லேபம் செய்ய கபவிஸர்ப்பம் நிவ்ருத்தியாகும். 59.

**ஜடா மாம்ஸ்யாதி லேபம்.**

ஜடாமாம்ஸி, ஸர்ஜரஸம் என்னும் பிசின், வெள்ளிலோத்தி, அதிமதுரம், அரேணுகம், பெருங்குரும்பை, கருநெய்தல், தாமரை, காட்டுவாகைப்பூ இவற்றை சததௌதக்ருதத்தினால்[4] ஆட்டி லேபம் செய்தால் இரத்தபித்தமும் வாதரக்த்தமும் தீரும். 60½.

**ஆமலக லேபம்.**

நெய்யிற் பொரித்த நெல்லிக்கனிகளைக் காடிகளால் அரைத்து லேபமாகச் செய்து சிரஸ்ஸில் தேய்த்துவந்தால் நாசியிலிருந்து இரத்தங்கசிதல் நிவ்ருத்தியாகும். 61½.

**கோஷ்ட லேபமும் முசுகுந்த லேபமும்.**

கோஷ்டத்தை நன்றாகப் பொடித்து, காடியைவிட்டு அரைத்து, ஆமணக்கெண்ணெயினால் குழைத்து, சிரஸ்ஸில் தேய்க்க தலைவலி ஸ்வஸ்த்தமாகும். அவ்வாறே கொக்குமந்தாரப்பூவையும் அவ்வியாதியில் லேபமாக உபயோகிக்கலாம். 62½.

---

1. ரகஸ—45-வது பக்கம் மூலமும் டிப்பணியும் பார்க்க.
2. சீதபித்தம்—46-வது பக்கம் பார்க்க.
3. விஸர்பம்.—46-வது பக்கம் பார்க்க.
4. சததௌத க்ருதம்.—நூறு தடவை ஜலத்தில் அல்லது கஷாயம் முதலியவற்றில் கடைந்து சுத்தி செய்த நெய்.

182

தேவதாரு, கிரந்திதகரம், கோஷ்டம், இலாமிச்சைவேர், சுக்கு இவற்றைச் சிதைத்து, காடியினால் அரைத்து, எண்ணெயைக் கலந்து லேபம் செய்ய வாத தோஷத்தினாலான தலைவலி நீங்கும். 63½.

தேவதார் வாதிலேபம்.

சந்தனம், வெட்டிவேர், அதிமதுரம், சிற்றாமுட்டி, புலியுகிரென்னும் வாஸனைத்திரவ்யம், கருநெய்தல் இவற்றைப் பாலில் அரைத்து லேபனம் செய்தால் இரக்த்தபித்தம், தலைவலி இவை ஸ்வஸ்த்தமாகும். 64½.

சந்தனாதி லேபம்.

நெல்லிக்கனி, பத்ரமுஸ்தையென்னும் நாகமுத்தக்காசு, வெட்டிவேர், தாமரை, அல்லிக்கிழங்கு, சந்தனம், அறுகம்புல், இலாமிச்சை, விழல்வேர் இவற்றினாலான லேபத்தை உபயோகிப்பதால் பித்தத்தினாலுண்டான தலைவலியும், இரக்த்தபித்த ஸம்பந்தமான நோயும் தீரும். 65, 66.

மூன்றும் தாத்ரியாதி லேபம்.

ஹரேணுகம், கிரந்திதகரம், கல்மரப்பட்டை, கோரைக்கிழங்கு, ஏலம், அகிற்கட்டை, தேவதாரு, ஜடாமாம்ஸீ, சிற்றரத்தை, ஆமணக்கிலை இவற்றை லேபம்செய்து சிறிது இளஞ்சூடாயிருக்கையிலேயே உபயோகிக்க ச்லேஷ்மத்தினாலான நோய் நிவ்ருத்தியாகும். 67.

ஹரேணுகாதி லேபம்.

சுக்கு, கோஷ்டம், தகரவிதை, தேவதாரு, காவட்டம்புல் இவற்றைப் பசுமூத்திரத்தினால் அரைத்துப் பூச கபத்தினாலுண்டாகும் தலைவலி நீங்கும். 68.

சுண்ட்யாதி லேபம்.

நன்னாரி, கோஷ்டம், அதிமதுரம், வசம்பு, கருநெய்தல் இவற்றைக் காடியினால் ஆட்டி, அதன்பிறகு எண்ணெயைவிட்டுக் குழைத்துத் தடவினால் ஸூர்யாவர்த்தம், அர்த்தாவபேதம் என்னும் நோய்கள் தீரும். 69.

சாரிபாதி லேபம்.

தண்ணீர்முட்டான், கருநெய்தல், அறுகம்புல், எள், சாறடை இவற்றின் லேபமானது சங்ககம், அநந்தவாதம் என்கிற சிரஸ்ஸைப்பற்றிய வலிமுதலானவற்றைப் போக்கும். 70.

சதாவர்யாதி லேபம்.

(ப்ரலேபமும் ப்ரதேஹமும்.)

இதன்பிறகு அறிஞரது கொள்கையை அனுஸரித்து இன்னும் சில லேபவிதிகள் வரையப்படுகின்றன. லேபமானது ப்ரலேபம் என்றும், ப்ரதேஹம் என்றும் இரண்டுவிதமாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. ஈரமான எருமைத்தோல் எவ்வளவு பருமனோ அவ்வளவு கனமாக ப்ரலேப ப்ரதேஹங்களைச் செய்யவேண்டுமென்பது பொதுவிதியாகும். எந்த லேபமானது குளிர்ச்சியாகவும், அதிக கனமல்லாமலும், உலர்ந்துவிடக் கூடியதாகவும் செய்யப்படுகிறதோ அது ப்ரலேபம் எனப்படும். எந்த லேபம் ஈரமாகவும், சிறிது கனமாகவும், உஷ்ணமாகவும் செய்யப்படுகிறதோ அது ப்ரதேஹம் என்று சொல்லப்படும். இவற்றுள் ப்ரதேஹம் கப-வாதங்களாலுண்டாகும் கோளாறுகளைப் போக்கக்கூடியதாம்.[1] 71—72½.

ப்ரலேப ப்ரதேஹங்கள்.

1. ப்ரலேபம் அல்லது லேபம் என்றால் ஸாதாரணமான எந்தப் பூச்சு மருந்தையும் குறிக்கும்; ப்ரதேஹமென்றால் பற்றுப்போடுதல்.

ப்ரதேஹ-ப்ரலேப நங்களில் சில நியமங்கள்.

ப்ரலேப-ப்ரதேஹங்களை மயிர்க்கால்களினூடே பிரவேசிக்குமாறு லேபநம் செய்தால், அவற்றின் வீர்யம் மயிர்க்கால்களின் மூலமாகவும், விரைகளென்னும் காரிரத்தக் குழாய்களின் முகங்களாலும் சரீரமெங்கும் சீக்கிரத்திற் பரவும். இரவில் லேபநம் செய்யக் கூடாது. உலர்ந்து கொண்டு வரும் ப்ரலேபநத்தை அவ்விதமே வைத்திராமல் அதை யெடுத்து விட வேண்டும். ஆனால் ப்ரதேஹத்தில், அது பூசப்பட்டுள்ள பாகம் உலர்ந்து அவ்விடத்தில் ஒருவாறு இசிவுகாணும் வரையில் அப்பூச்சு உலர்ந்துவருமளவும் அதையெடுத்து விடாமல் வைத்திருக்கலாம். இரவில் மயிர்க்கால் முனைகளில் தேஹச்சூடு தங்கியிருந்து சூரிய வெளிச்ச மின்மையினால் தானே வெளிவந்து விடுமாகையால் இரவில் லேபநம் செய்யக் கூடாது. ஆனால் விஷயமுணர்ந்த நிபுணர்கள் அவசியமென்றறிந்தால் இரவிலும் ப்ரலேபநம் முதலியதைச் செய்யக்கூடும். 73—76.

விரணங்களில் லேபம் முதலிய கிரமம்.

இரத்தம் கபம் இவற்றின் கோளாறால் ஸம்பவிக்கும் சோபை அல்லது வீக்கம் பழுக்காமலும் வெகு ஆழமாக வியாபித்து மிருந்தால், அதற்கு முதலில் வீக்கத்தைக் குறைப்பதற்கான 'சோதஹரம்' என்கிற லேபமும், இரண்டாவது ரக்தமோக்ஷணமும்[1], மூன்றாவது உபநாஹ ஸ்வேதமும்[2], நான்காவது சஸ்திரத்தினால் கீண்டு தோஷங்களை வெளிப்படுத்தும் முறையும், ஐந்தாவது அவ்விரணத்தைக் கழுவியோ வேறுவிதமாகவோ சுத்திசெய்யும் 'சோதநம்' என்னும் முறையும், ஆறாவது 'ரோபணம்' என்னும் விரணத்தை ஆறச்செய்வதும், ஏழாவது விரணமுண்டான விடத்திற்கு மீண்டும் பழைய நிறமுண்டாகப் பண்ணுவதும் கிரமமாக விரணங்களுக்கு அவசியம் செய்யவேண்டிய சிகித்ஸா முறைகளாம். 77—78½.

பீஜபூர முலாதி லேபம்.

கொடி மாதுளையின்வேர், ஜடாமாம்ஸீ, தேவதாரு, சுக்கு, சிற்றரத்தை, முன்னைவேர் இவற்றை அரைத்து லேபமாக உபயோகிக்க வாததோஷத்தினாலுண்டாகும் வீக்கம் நிவ்ருத்தியாகும். 79½.

மதுகாதி லேபம்.

அதிமதுரம், வெண்சந்தனம், பெருங்குரும்பை, நெட்டக் கோரையின் வேர், அல்லிக்கிழங்கு, வெட்டிவேர், இளாமிச்சைவேர், தாமரைப்பூ இவற்றைப் பித்தத்தினாலுண்டாகும் வீக்கங்களில் லேபமா யுபயோகிக்கலாம். 80½.

க்ருஷ்ணாதி ப்ரதேஹம்

திப்பிலி, பழைய எள்ளுப்பிண்ணாக்கு, முருங்கப்பட்டை, மணல், கடுக்காய் இவற்றைப் பசுமூத்திரத்தில் அரைத்துக் கொதிக்கவைத்து இளஞ்சூடாக ப்ரதேஹம் செய்தால் கபத்தினாலுண்டாகும் வீக்கம் நிவாரணமாகும். 81½.

நிசாதி லேபம்.

மஞ்சள், மரமஞ்சள், வெண்சந்தனம், செஞ்சந்தனம், கடுக்காய், அறுகம்புல், வெள்ளைச்சாறணை, வெட்டிவேர், அல்லிக்கிழங்கு, வெள்ளிலோத்தி, காவிக்கல், இரஸாஞ்ஜகம் இவற்றை நன்றாக அரைத்து ஆகந்துகமென்னும் வெளிச்

1. ரக்தமோக்ஷணம்—இதைப்பற்றிய விவரங்களை 12-வது அத்தியாயத்திற் காண்க.

2. உபநாஹ ஸ்வேதம்—இதைப்பற்றி 178-வது பக்கம் பார்க்க.

காரணங்களாலுண்டாகிற விக்கத்திலும், இரத்ததோஷத்தினால் ஸம்பவிக்கும் விக்கத்திலும் லேபமா யுபயோகிக்கலாம். 82, 83.

**சணபர்ண்யாதி லேபம்.** சேப்பங்கிழங்கு, முள்ளங்கி, முருங்கக்காய், எள், கடுகு, ஸக்து என்னும் காடிச் சத்து, கிண்வமென்கிற மத்யச்சக்கை, ஆளிவிதை இவற்றின் லேபநத்தினால் விக்கங்கள் பழுத்துவரும். 84.

**தந்த்யாதி லேபம்.** நேபாளம், சித்திரமூலப்பட்டை, கள்ளிப்பால், எருக்கம்பால், வெல்லம், சேராங்கொட்டை, அன்னபேதி, இந்துப்பு இவற்றின் லேபநம் 'தாரணகுணம்'[1] உள்ளதாம். 85.

**சிரிபில்வாதி லேபம்.** புங்கம்பட்டை, சேராங்கொட்டை, நேபாளம், சித்திரமூலம், அலரிவேர், மாடப்புறுவினுடையவும் பருந்தினுடையவும் கழுகினுடையவும் மலங்கள் இவற்றை அரைத்து லேபமாக உபயோகித்தால் 'தாரணம்' என்னும் வேலையைச் செய்யும். 86.

**ஸர்ஜக்ஷாராதி லேபம்.** ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம் இவற்றை லேபநம் செய்ய சோதைகள் என்னும் விக்கங்கள் சீக்கிரம் உடைந்துவிடும். அவ்விதமே கூகைநீறையும் விரணம் முதலியவை உடைவதற்கு மேலே லேபமாக உபயோகிக்கலாம். 87.

**இரண்டாம் திலாதி லேபம்.** எள், இந்துப்பு, அதிமதுரம், வேப்பிலை, மஞ்சள், மரமஞ்சள், சிவதைவேர் இவற்றை இடித்து நெய்விட்டுக் கலந்து விரணங்களின்மேல் லேபநம் செய்ய அவை சுத்தமாகும். 88.

**நிம்பபத்ராதி லேபம்.** வேப்பிலை, தேன், நெய், மரமஞ்சள், அதிமதுரம், எள் இவற்றை ஒருமிக்க அரைத்து லேபநம் செய்ய விரணம் சுத்தியாவதுடன் சீக்கிரம் ஆறியும் வரும். 89.

**கரஞ்ஜாதி லேபம்.** புங்கம்வேர், வேப்பிலை, நொச்சியிலை இவற்றை அரைத்து லேபநம் செய்தால் விரணத்திலுண்டாகும் கிருமிகள் அழிந்துவிடும். 89½.

**லசுநாதி லேபம்.** வெள்ளுள்ளியின் கல்கத்தையாவது, வேப்பிலையையும் காயத்தையும் சேர்த்து அரைத்த கல்கத்தையாவது விரணக் கிருமிகளைப் போக்க லேபமாக உபயோகிக்கலாம். 90.

**இரண்டாவது நிம்பபத்ராதி லேபம்.** வேப்பிலை, எள், நேபாளம், சிவதைவேர், இந்துப்பு, தேனை இவற்றைச்சேர்த்து, செய்யப்படும் லேபமானது கெட்டுப்போன விரணங்களை சுத்தம் செய்யவும் ஆற்றவும் அடியோடு அவற்றைப்போக்கவும் உபயோகமாகும். 91.

**மதநபலாதி ப்ரதேஹம்.** மறுக்காரை, கடுகரோஹிணி இவ்விரண்டையும் காடியினால் ஆட்டி, அதைக் கொதிக்கவைத்து நாபியின்மேல் சிறிது சூடாயிருக்கும்போதே லேபநம் செய்ய வயிற்றுநோய் நிவ்ருத்தியாகும். 92.

1. தாரணம்—விரணங்களைப் பிளக்கச்செய்யும் குணம்.